ஆனந்த போதினி

ஜோதி 16 பகுதி 3

செப்டம் 1930.


ரட

n211, N15AB

N30.16.3

207688

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்
அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்
வெளியாயிற்று!

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்.

(மூன்றாம் பதிப்பு)

அழகிய சிலை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்
ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்



400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட்
பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

## இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-8-0

இது, காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி, நற்சந்ததிகளைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளி

பிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோகசாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேகதத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மராட்டி, அராபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்பவாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், வியன்பினாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடையவேண்டிய இன்பத்தையும், மறுமை யின்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

## இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி, சாஸ்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலைகளவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அக்கள்ளனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்காரனைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணாராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

## தமிழ் மெட்டீரியா மெடிக்கா

### என்னும் அருமையான வைத்திய நூல்.

# MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு விவர முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்குறக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக்குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அனுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடியவரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும்

# ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

(மூன்றும் பதிப்பு) விலை ரூபா 2-0-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-8-0

எம்.ஏ., எல்.டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவாளர் எம். ஷண்முக சுந்தர முதலியா ரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புக்களோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

**800-பக்கங்களுக்குமேல் திக்குகாகிதத்தில் அச்சிடப்பட்டு சீமைகாலிகோ பைண்டு செய்யப்பட்டது.**

பற்பல கதைகளும், பாரதக்கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமா யிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.




இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச்செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். ஆயிரக்கணக்கான பணச்செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப்புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப்பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் மணிவித்தியாசம், அன்னியதேச நாணயமதிப் முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

---

விலாசம்:—ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# தத்வசங்க்ரஹ ராமாயணம்

இரண்டாம் பதிப்பு.

இது ஸம்ஸ்கிருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட அருமையான நூல். இதனை ஒருமுறை படிப்பவர்கள் இம்மை மறுமை யென்னும் இருவகை வாழ்விற்குரிய சாதனங்களை யுணர்ந்து மக்களாய்ப்பிறந்த நாம் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்களைக் கைக்கொண்டு பகவானுடைய திருவருட்குரியவராக விளங்குவர் என்பதில் ஐயமில்லை. இந்த கிரந்தம் துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலன நிமித்தம் உலகத்தில் ஸத்யவர்தனாக விளங்கிய தசரத பூபதிக்கு ஸ்ரீராமனாக அவதரித்த ஜகத்பிரபுவின் குணாதிசயங்களைப்பற்றிப் பேசுவது.



ஸ்ரீ ராமாவதாரத்தின் உண்மை இதனை படிப்பவர்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல்விளங்கும். இதனைப்படித்தால் அநேக ஞான நூல்களைப் படித்த பயனை ஒருங்கே யடைதல் கூடும். ஸ்ரீராம பூஜா விதிகளும் அர்ச்சனைகளும் இதன்கண் விவரிக்கப் பட்டுள்ளன. இதுவரையில் வெளியான ராமாயணங்களை விட மும்மடங்கு மேலான தத்வ உபதேசங்கள் இதன்கண் காணலாம்.

உபந்யாசகர்களுக்கு வேண்டிய பல அரிய விஷயங்களுடன் கூடியது. ஸ்ரீராமசரிதையை வாசிப்பதே இகபர நன்மை யளிக்கு மென்பர் பெரியோர். இதில் எண்ணிறந்த மிக்க அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

புஸ்தகம் சுமார் 520 பக்கங்கள் கொண்டது. இங்கிலீஷ் கிலேஸ் காகிதத்தில் டபுள்க்ரௌன் 8 பக்க அளவில் அச்சிடப்பட்டு முழுகாலிகோ பைண்டு செய்யப்பட்டது. இதன் விலை ரூபா 4—0—0

# ஸ்ரீமத் கம்பராமாயண வசன சங்கிரகம்

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

(மூன்றாம் பதிப்பு) இதன் விலை ரூபா 2.

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் சேர்க்கப்பட்டது. மிக்க திருத்தங்களோடு கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

☞ சொற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக்கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக்கூடிய பொருள்களெல்லாம் கைக்கூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும் ; இலக்குமி கடாக்ஷ முண்டாகும்.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## எமது சொந்தப் பிரசுரங்கள்.

# கைவல்ய நவநீத வசனம்.

(இரண்டாம் பதிப்பு.)

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள். மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது எவரும் எளிதில் வாசித்துணரும்படி வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

# இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்.

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக்கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி பெருந் திருட்டும் மிகுந்த கொலைத்தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்துகொள்வது, அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாயும் இருக்கும். இதன் விலை ரூபா 2.

**ஞானசெல்வாம்பாள் (5-பாகங்கள்) 9 10 0**

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இது தான் மிகப் பெரியது. "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத் தக்கது. கதை மிகப் பெரிதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் ஆனந்தமாக முடிவுவரை யிருக்கும். சில பெண்கள் தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருப்பதால் நேரும் துன்பங்கள் இத்தன்மையன வென்பது நன்குவிளங்கும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா | | | 2 | 0 | 0 |
| ஐந்தாவது பாகம் மாத்திரம் | ,, | ,, | 1 | 10 | 0 |
| ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு . | | | | | |
| ஐந்து பாகமும் சேர்த்து வாங்கினால் | ,, | ,, | 8 | 0 | 0 |

**புவனத்தீவு 2 பாகம் 3 0 0**

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொண்டு மிக்க களிப்பை யளிக்கும்.

# சந்திராபாய்

அல்லது

## சங்கரதாஸின் வெற்றி.

ரஸாயன ஆராய்ச்சி, மின்சாரம், டெலிபோன், ஆகாயக்கப்பல், வெடிகுண்டு, டார்படோப்படகு முதலானவைகள் தோன்றியிருக்கும் நவீனநாகரீகப்போக்கின் சாதகபாதகங்களை இந்நாவல் வெள்ளிடைமலைபோல் ஆங்காங்கு வெளிப்படுத்துகிறது. இதன் விலை ரூபா. 2—0—0.

# கனகபூஷணம் 2-பாகம்.

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை விளக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரச மொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணாபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக்கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகீகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டுமாதருக்கு அமைந்திருக்க வேண்டியவண்ணமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 3-8-0.

# மதனம்பாள் 2-பாகம்.

இதில், காளிங்கனுகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுதலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச்செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன்மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும். 2 பாகமும் விலை ரூபா 3.

**காமவல்லி** இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணு 8

**அற்புதமர்மங்கள் அல்லது**

**ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0**

இது, மகா அற்புத மர்மங்களடங்கிய துப்பறியும் நாவல். இதில் எட்டு விதமான கதைகள் அடங்கியிருக்கின்றன. எந்த நாட்டிலும் எப்பேர்ப்பட்ட யூகமுடையவர்களாலும், எவ்வித காரணத்தைக் கொண்டும், கண்டுபிடிக்க முடியாத அதியாச்சரியமான இரகசிய சம்பவங்கள் நிகழ்வதும், அவற்றை ஆனந்தஸிங்கு அதிகப் பிரயாசையுடனும், வெகு சாமர்த்தியத்துடனும் கண்டுபிடித்து உண்மையை வெளியாக்கிக் குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதும், நிரபராதிகளுக்குத் துணைபுரிவதும், சத்தியத்தை நிலைநிறுத்துவதும், படிப்பவர்க்கு மிக்க மனோற்சாகத்தையும், ஆனந்தத்தையும், அறிவு விளக்கத்தையும் உண்டாக்கி, உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தவரின் இயற்கைகளையும் நன்கு விளக்கிக்காட்டும்.

**அமராவதி 2 பாகம் 4 0 0**

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனுயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

**இரத்தினபுரி இரகசியம் 2 பாகம் 4 0 0**

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

**குசேலோபாக்கியான வசனம் 1 0 0**

இதில், குசேலர் மேல்கடலடைந்தது, வடமதுரைச் சிறப்பு, கடைவீதியின் சிறப்பு, அவந்திக்கடுத்த மலையுச்சியிலுள்ள பிராமணச் சேரியின் சிறப்பு, குசேலர் திருமணம், குசேலர் துவாரகைசேர்தல், ஸ்ரீ கண்ணனுடைய அந்தப்புரத்தின் சிறப்பு, கிருஷ்ணன் குசேலர் கொண்டுபோன அவலை வாங்கி உண்ணுதல், ஒருபிடி அவலுக்கு மேல் உண்ணலாகாதென்று உருக்குமணி கிருஷ்ணனைத் தடுத்தல், குசேலர் செல்வம் பெற்றுத் தமது நகரமடைந்தது, குசேலரை அவர் மனைவி உபசரித்துக் கொண்டாடுதல், குசேலர் விஷ்ணு தோத்திரஞ் செய்தல் முதலியன விளக்கமாக எழுதப்பெற்றிருக்கின்றன.

# மூவர் அடங்கன் முறை.

**திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள்**
**சுந்தரமூர்த்தி சுவாமிகள் மூவரும் பாடிய தேவாரங்கள்**
**முழுமையும் அடங்கிய பெரிய புத்தகம்.**

இவ்வருமையான புத்தகம் ஒவ்வொரு சைவர் வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியதொன்று. இவ்வடங்கன் முறையினது பிரபாவமும் அருமையும் அளவிடுதற் கரியது. இதனை ஒவ்வொருவரும் அன்றாடம் விதிப்படி சிரத்தையோடு பாராயணம் பண்ணி வருவாராயின் இஷ்டகாமியார்த்தங்களை எளிதில் அடையக்கூடு மென்பது பெரியோர் துணிபு.

பிறவிப் பெருங்கடல் நீந்துதற்கு ஓர் அரும் பெரும் தெப்பமாயும் சைவ சமயத்துக்கோர் திலகமாயும் விளங்கும் இத்துணை அரிய பெரிய நூலை அச்சிடாது வாளா இருத்தல் சைவ சமயத்தினருக்கே மிகவும் இழிவைத் தருமென்று கருதி அதிகச் செலவிட்டு ராயல் 8-பேஜ் ஸைஸில் புதிய எழுத்துக்களால் சரித்திரக் குறிப்பு, ஸ்தலக்குறிப்பு, இராகம் முதலியன பிரித்து உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அழகாக அச்சிட்டிருக்கிறோம். கொஞ்சம் பிரதிகளே அச்சிட்டதால் சீக்கிரம் வாங்கிக்கொள்வோர்க்கே கிடைக்கும். பிறகு கிடைப்பது அரிது. இதன் விலை ரூபா 5.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால்பெட்டி நெ. 167, சென்னை.

## நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்.

ஆரணி—குப்புசாமி முதலியார் இயற்றியவை.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| | | | கனகரத்தினம் ... | 0 | 8 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகம் | 9 | 10 | கண்டிராஜா நாடகம் ... | 0 | 12 |
| கற்பகச்சோலையின் அற்புதக் கொலை | 1 | 4 | களினசுந்தரி ... | 0 | 10 |
| கடற்கொள்ளைக்காரன் 2 பாகம் | 3 | 4 | கம்பராமாயணசங்கிரகவசனம் | 2 | 0 |
| மதனம்பாள் 2-பாகம் ... | 3 | 0 | குசேலோபாக்கியானவசனம் | 1 | 0 |
| லோகநாயகி ... | 1 | 0 | ஸ்ரீபாலன் ... | 0 | 10 |
| விளையாட்டுச்சாமான் ... | 1 | 6 | உதயணன் ... | 0 | 8 |
| பவளத்தீவு 2-பாகங்கள் ... | 8 | 0 | தசக்கிரீவன் ... | 0 | 14 |
| தபால்கொள்ளைக்காரர்கள் | 0 | 14 | போஜ சரித்திரம் ... | 0 | 5 |
| இந்திராபாய் ... | 2 | 8 | சதானந்தர் ... | 1 | 4 |
| அமராவதி 2-பாகங்கள் ... | 4 | 0 | ஜீவகன்வசனம் ... | 1 | 0 |
| மந்திரஅறையின் மர்மம் ... | 1 | 8 | கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| கற்கோட்டை ... | 2 | 0 | பீஷ்மவிஜயம் ... | 0 | 10 |
| பூங்கோதை ... | 0 | 10 | கீர்த்திசிங்கன் ... | 0 | 8 |
| வீரநாதன் ... | 0 | 12 | மூப்பெருந்தாசர் ... | 0 | 10 |
| கனகபூஷணம் 2 பாகமும் | 3 | 0 | அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| கமலசேகரன் ... | 1 | 12 | நீலக்கொடி ... | 0 | 5 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 | மணவாளன் ... | 0 | 8 |
| ரத்னபுரி ரகசியம் 2-பாகமும் | 4 | 0 | பரசுராமன் ... | 0 | 8 |
| சந்திராபாய் ... | 2 | 0 | சிசுபாலன் ... | 0 | 8 |
| இராஜாமணி ... | 2 | 0 | அங்கதன் ... | 0 | 4 |
| இரத்தினபாய் ... | 1 | 12 | தசாவதாரம் ... | 0 | 6 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | கிருஷ்ணன் தூது வசனம் | 0 | 8 |
| சுவர்ணம்பாள் ... | 0 | 12 | சண்டோபாக்கியானம் ... | 0 | 6 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | கருணாகரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| குணசுந்தரன் ... | 0 | 12 | சத்தியவசனி ... | 0 | 4 |
| பத்மாஸனி ... | 0 | 14 | விமலன் ... | 0 | 4 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | கண்ணபிரான் ... | 0 | 4 |
| மீன்சாரமாயவன் ... | 1 | 8 | செய்யுட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| ஆனந்தலிங்கின் அஷ்டஜயங்கள் | 1 | 12 | நாலுமந்திரிகதை ... | 0 | 4 |
| அர்ஜுனலிங், சுந்தர் ... | 0 | 2 | மங்களேசுவரன் ... | 0 | 8 |
| கைவல்லிய நவநீத வசனம் | 1 | 8 | தக்கன் ... | 0 | 6 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும் | 1 | 12 | சிமந்தனி ... | 0 | 8 |
| சகோதரவாஞ்சை ... | 0 | 7 | நான்குகோடி ... | 0 | 4 |
| | | | மதிமோச விளக்கம் ... | 1 | 0 |
| | | | மெய்க்காதலி ... | 0 | 8 |
| | | | மேனுமினுக்கி கதை ... | 0 | 8 |
| தத்வஸங்க்ரஹ ராமாயணம் | 4 | 0 | வீணைகானன்ஞானேந்திரி... | 0 | 8 |
| விவேகாநந்தர் ... | 4 | 0 | மனோன்மணி கதை ... | 0 | 8 |
| தமிழ் மெடீரியா மெடிகா ... | 3 | 0 | கோமளவல்லி கதை ... | 0 | 8 |
| மாதவி மாதவன் 2-பாகம் ... | 2 | 0 | விகடவல்லி கதை ... | 0 | 6 |
| மலையாளபகவதி ... | 1 | 0 | கமலமதி ... | 0 | 8 |
| அற்புத நவநீதாம்பை ... | 1 | 0 | காமசேன ரசிகா ... | 0 | 8 |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 | பூர்ணவல்லி ... | 0 | 6 |
| துயராளன் கதை ... | 0 | 12 | ஸ்திரீபுருஷஜாதக திறவுகோல் | 0 | 8 |
| பூலோக லக்ஷ்மிகதை ... | 0 | 10 | தாலிகட்ட மறந்த கதை... | 0 | 5 |

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**


உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி | பிரமோதூதஸு புரட்டாசிமீ கஉ | பகுதி |
|---|---|---|
| 16 | 1930ஸு செப்டம்பர்மீ 17உ | 3 |


## கடவுள் வணக்கம்.

தாரகமா னவைகோடி கூடினின் றாலுமொரு
 கல்லின்முன் எதிர்நிற்குமோ
கர்மமா னவைகோடி முன்னேசெய் தாலுநின்
 கருணைப்ர வாகவருளைத்
தாகமாய் நாடினோரை வாதிக்க வல்லவோ
 தமியனேற் கருட்டாகமோ
சற்றுமிலை யென்பதுவும் வெளியாச்சு வினையெலாம்
 சங்கேத மாய்க்கூடியே
தேகமா னதைமிகவும் வாட்டுதே துன்பங்கள்
 சோராமல் யோகமார்க்க
சித்தியோ வாவில்லை சகசநிஷ்டைக்குமென்
 சிந்தைக்கும் வெகுதூரநான்
ஏகமாய் நின்னோ டிருக்குநாள் எந்தநாள்
 இந்நாளின் முற்றுறுமோ
இகபரம் இரண்டினிலும் உயிரினுக் குயிராகி
 எங்கு நிறை கின்றபொருளே. (1)

தந்தை தாயதமர் மகவென்று மவையெலாஞ் சகத்தில்
பந்த மாமென்றே அருமறை வாயினாற்பகர்ந்த
எந்தை நீயெனை யின்னமவ் வல்லலி விருத்தின்
சிந்தை தான்றெளிந் தெவ்வண மூய்வணஞ் செப்பாய். (2)

பொல்லாத காமப் புலைத்தொழிலி லென்னறிவு
செல்லாமல் நன்னெறியில் சேருநாள் எந்நாளோ. (3)

207682

# அரும்பொருள் விளக்கம்

(1) இதனால் அடிகள் இறைவனோடு ஏகமாய் இருக்கும் நன்னாள் எது என்று ஆவலோடு எதிர்பார்க்கின்றார்.

(இ-ள்.) இம்மை மறுமை இரண்டினும் உயிரினுக்கு உயிராகி எங்கும் நிறைந்து விளங்கும் பரம்பொருளே! கோடிக்கணக்கான காகங்கள் ஒன்றாகத் திரண்டு கூடியிருந்தாலும் ஒரு கல்லுக்கு முன் எதிர்த்து நிற்க வல்லனவோ? ஒருநாளும் இல்லை. அதுபோல முன் பிறவியில் கோடிக் கணக்கான தீவினைகளைச் செய்திருந்தபோதிலும், அவையெல்லாம் உனது அருள் வெள்ளத்தை வீட்டின்ப வேட்கையுடன் நோக்குவாரை வருத்தவல்லனவோ? அடியேனுக்குத் திருவருளின்மீது விருப்பம் சற்றும் இல்லை என்னும் விஷயமும் வெளியாகிவிட்டது. வினைகள் எல்லாம் ஒருமுகமாய்த் திரண்டுவந்து எனது உடம்பை வாட்டுகின்றன. துன்பங்கள் வந்து பொருந்தாமலிருக்க யோக நெறிச் சித்தியும் கைகூடவில்லை. சகச நிஷ்டைக்கும் என் மனதிற்கும் வெகுதூரம். என்னிலை இவ்வாறாக நான் உன்னோடு கூடிக் கலந்திருக்கும் நாள் எந்நாளோ? அது இந்தக் காலத்தில் முடிவுபெறாதோ? என்பதாம்.

கோடி காகம் என்றது கூட்டமாய்த் திரண்ட பல காகங்கள் என்றபடி. கர்மம்—நல்வினை தீவினைகள். கருணைப்ரவாகம்—அருள்வெள்ளம். சங்கேதம்—திரட்சி. இகபரம்—இம்மை மறுமை.

(2) இதனால் தந்தைதாய் தமர் மகவாகிய பாசத்தை நீக்கியருளுமாறு வேண்டுகின்றார்.

(இ-ள்.) தந்தை, தாய், உறவினர், குழந்தை ஆகிய இவர்கள் எல்லாரும் உலகத்தில் தளையாகும் என்று அரிய வேதங்களை அருளிச்செய்த திருவாக்கினால் கூறிய தந்தையே! நீ இன்னும் அடியேனை அத்துன்பத்தில் அழுத்தினால் மனந் தெளிந்து நான் உய்யும் வகை எவ்வாறு? தயை கூர்ந்து சொல்லுவாயாக என்பதாம்.

தாய் தந்தை முதலானவர்களிடம் வைத்த பேரன்பினால் இறைவனை மறந்து உலக மாயையில் மூழ்கியிருக்கின்றவர்கட்கு அவ்வன்பே பந்தமாகி விடுமாதலின், "தந்தைதாய் தமர் மகவெனும் அவையெலாம் பந்தமாம்" என்றனர். பிறவா நெறியில் ஈடுபட விரும்புவோர் மேற்கூறியவர்களிடம் வைத்த பாசத்தை அறுத்துவிடவேண்டும் என்பது இதனால் விளங்கும்.

(3) இதனால் காம மயக்கினின்றும் நீங்கி இறைவனை அடையும் நாள் எது என்று இரங்குகின்றார்.

(இ-ள்.) கேடு விளைதற்குக் காரணமாகிய காமம் என்னும் நீசத் தொழிலில் எனது அறிவு புகாமல் நன்னெறியிற் சேரும் நாள் எந்நாளோ? என்பதாம். புலைத்தொழில்—நீசத் தொழில்.

"கபடச் சொல்லினும் கடிய சொல்லே மேல்"

ஆனந்தபோதினி
பிரமோதூத
௵ புரட்டாசி ௴ 1௳

## உண்மைத் தருமம்

மக்கள் உள்ளங்களில் உண்மையான தருமசிந்தனை தழைத்து வளராத நாடு நாடல்ல—விலங்கினம் வாழும் காடு என்றே சொல்லவேண்டும். புகழ் கருதியும், கைம்மாறு கருதியும் செய்யப்படும் தருமங்களைக் கூலி வேலைக்கு நிகராகவே மதிக்க வேண்டும். சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட காரியங்கட்குத் தருமப் போர்வையைப் போர்த்து விடுவதால்—அவைகளை எவ்வாறு உண்மைத் தருமங்கள் என்று கூற முடியும்? நமது நாட்டில் இப்பொழுது உண்மைத் தருமஞ் செய்வோரைக் காண்பது மிகவும் அருமையாக இருக்கிறது.

மக்கள் பரஸ்பர உதவியுடன்—பிறர் நலம் பேணிச் சமூகமாக வாழும் இயல்பு வாய்ந்தவர். பிறர் நலம் பேணும் தன்மை வாய்க்கப் பெறாத சமூகமோ நாடோ விரைவில் கட்டுக் குலைந்து அழிநிலை அடைவது திண்ணம். தம்மைப் போல் பிறரையும் நேசிக்கவேண்டும் என்ற இனிய குணம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஓங்கி வளர்தல் வேண்டும். இவ்வருங் குணத்தினின்றும் அரும்புவதே உண்மைத் தருமம் எனப்படும். நம்முடைய முன்னோர் உண்மைத் தரும சிந்தனையுடன் உலகம் புகழ வாழ்ந்த காலம் ஒன்றுண்டு. அக்காலம் இப்பொழுது கனவாகி விட்டது. அம் முன்னோரின் பரம்பரையில் வந்த நாம் பிறர் கைகொட்டிச் சிரிக்கும் இழிநிலையில் வாழ்ந்து வருகின்றோம். உண்மையான தரும சிந்தனையுடன் நம் முன்னோர் நிறுவிச் சென்ற அறநிலையங்களெல்லாம் இப்பொழுது கூடா வொழுக்க முடையாருக்குக் களியாட்ட நிலையங்களாக விளங்குகின்றன. நம் முன்னோரின் உண்மைக் கருத்து இவ்வற நிலையங்களில் ஒரு சிறிதும் நிறைவேற்றப் படுவதாகத் தெரியவில்லை.

"கெலிப்பும் தோற்பும் ஒருவர் பங்கல்ல"

நமது நாட்டில் இன்னும் பொருளற்ற வழக்க வொழுக்கங்கள் அநேகம் நிறைந்திருக்கின்றன. பரம்பரையாக வரும் வழக்கம் என்பதற்காகவே அநேகர் அநாவசியமாகப் பொருளை வீண் செலவு செய்து வருகின்றனர். இது செய்யத் தக்கதா! இதனால் வரும் பயன் யாது! என்பன போன்ற விஷயங்களில் யாருக்கும் சிந்தை செல்லுவதே இல்லை. சிலர் மூட நம்பிக்கையால் இத்தகைய காரியங்களைச் செய்கின்றனர்; சிலர் புகழ் விருப்பங் கொண்டு செய்கின்றனர். அன்னதானத்தின் சிறப்பைப் பற்றி நமது புராணேதிகாசங்களும் நீதி நூல்களும் பலபட வருணித்திருக்கின்றன. இது போலவே வித்தியாதானத்தின் விசேஷத்தையும் விரித்துச் செல்லுகின்றன. உடையார் இல்லாருக்கு அன்னமும் வித்தையும் சித்திக்கச் செய்தல் கடமையும் முறைமையும் ஆகும். இத்தகைய நற்சிந்தையாளருக்கு இம்மை மறுமை இன்பங்கள் எளிதில் வந்தடையும் என்பதில் ஒரு சிறிதும் ஐயம் இல்லை. ஆனால், தற்காலத்தில் உண்மையான அன்பையும், இரக்கத்தையும் அடிப்படையாகக் கொண்ட அன்னதானமோ வித்தியாதானமோ நடைமுறையில் இருப்பதாகக் கூற முடியாதென்றே நினைக்கின்றோம்.

நமது நாட்டில் அன்ன சத்திரங்கள் ஆங்காங்கு நிலவுகின்றன. ஒரு சில தருமப் பாடசாலைகளும் உண்டு. இவைகளில் பல பண்டைக் காலந்தொட்டே நடைபெற்று வருபவை. சில இக்காலத்தில் புதிதாகத் தோன்றியவை. இவைகளுக்கு ஏராளமான மானிய வருவாய்களும் உண்டு. இந்த அன்ன சத்திரங்களும் தருமப் பாடசாலைகளும் ஒழுங்கான முறையில் நடைபெறுகின்றனவா? இவைகளால் நாட்டில் ஏற்பட்டு வரும் உருவான பயன் யாது? என்ற விஷயங்களை ஆராயின், நகைப்புக் கிடமாகவே தோன்றும். உண்மையைக் கூறின் வேலையற்ற சோம்பேறிக் கூட்டங்களைப் பெருக்க இவை ஆதாரவாயிருக்கின்றன என்றுதான் கூறவேண்டும். கோடிக் கணக்கான மக்கள் பட்டினியால் வாடி வதங்கிக் கொண்டிருக்க இந்த அன்ன சத்திரங்கள் நாளொன்றுக்கு மூன்று நான்கு பேருக்குச் சாப்பாடு போட்டுவிட்ட மாத்திரத்தில் என்ன பயன் விளைந்துவிடும்? நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்கு மேல் கல்வியற்ற மூடப் பூச்சிகளாகக் காலங் கடத்திக்கொண்டிருக்க, ஆண்டு ஒன்றுக்கு ஐந்தாறு பேர்வழிகள் வேத ஸ்லோகங்களைப் பொருள் தெரியாமல் நெட்டுருப் பண்ணிக்கொண்டு வெளியேறி விட்டால் போதுமா? பின்னர் இவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்கும் வழி என்ன? யாசகம் செய்வதைத் தவிர வேறு எந்த வழியும் இவர்கட்குத் தெரியாது. உண்மையான தருமசிந்தனையுடையவர்கள் ஏழை மக்கள் எல்லாரும் உண்டியும் உடையும் அறிவும் எளிதில் பெற்று நல்வாழ்வு நடாத்துவதற்கு ஆதாரவான உதவி புரிய முன்

**“ கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையில் தெரியும் ”**



வரவேண்டும். ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் கப்பலேறி அந்நிய நாடுகட்குச் சென்று அல்லற் பட்டுக்கொண்டிருக்க, இங்கு போலி வேடதாரிகட்கும், இறுமாப்புக்கொண்டவர்கட்கும், சோம்பேறிகட்கும் விலாப் புடைக்கச் சோறு படைத்தல் உண்மை அறமாகுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டுகின்றோம். நாட்டின் இழிநிலையை நோக்கித் தக்கது செய்து முன்னேற்றலன்றோ அறிவுடைமை யாகும்?

பிறநாடுகள் எல்லாம் கல்வியிலும் அறிவிலும் செல்வத்திலும் தீவிரமாக முன்னேறிக்கொண்டிருக்கின்றன. நமது நாடு இன்னும் தூக்கத்தில் ஆழ்ந்து கிடக்கின்றது. கீழ்த்திசையிலுள்ள ஜப்பான் தேசம் சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் மிகவும் பிற்போக்கான நிலைமையிலிருந்தது. இப்போது மேனாட்டாருங் கண்டு வியக்கும் வண்ணம் பற்பல துறைகளிலும் வளர்ச்சி பெற்று விட்டது. குறுகிய கட்டுப்பாடுகளில் சிக்குண்டு கிடந்த துருக்கியும் இப்போது வீறு கொண்டு விளங்குகிறது. இந்நாடுகள் இவ்வாறு முன்னேறி வருவதற்கான உண்மைக்காரணம் என்ன? அவ்விடங்களிலுள்ள மக்கள் உள்ளங்களில் உண்மையான தருமசிந்தனை ஓங்கி நிற்றல் என்றே கூறுவோம். அவர்கள் எல்லாரும் பொதுநலத்தில் பரந்த நோக்கமும் ஆர்வமுங்கொண்டு விளங்குகின்றனர். ஒவ்வொரு மனிதனும் தன்னைப்போலவே மற்றவனும் இருக்கவேண்டும் என்று எண்ணுகிறான். நம்மைப்போல் சத்திரச் சாப்பாடு போடவேண்டும் என்ற தருமத்தை அந்நாட்டு மக்கள் விரும்புவதில்லை. ஒவ்வொருவரும் அன்னதானம் செய்யத்தக்க பிரபுக்களாக விளங்கவேண்டும் என்றே அவர்கள் விரும்புகிறார்கள். வெறுஞ்சோறு போட்டு மக்களை வீணர்களாக்கி விடாமல் அவர்கட்குக் கைத்தொழில், வியாபாரம், விவசாயம் முதலியவற்றைப்பற்றிய வித்தியாதானங்களைச் செய்கின்றனர். விஞ்ஞான அறிவு வளர்ச்சிக்கான விசேஷ தானங்களைச் செய்கின்றனர். இவைகளின் பயனாக அந்நாட்டு மக்கள் எல்லோரும் சிறந்த முறையில் உண்டியும் உடையும் பெற்றுச் சீரிய வாழ்வு நடாத்துகின்றனர். நாம் செய்வது உண்மைத் தருமமா அவர்கள் செய்வது உண்மைத் தருமமா என்று சிந்தித்துப் பார்க்குமாறு நேயர்களை வேண்டுகின்றோம்.

நாம் நமது இந்து மதத்தைக் குறித்துப் பெருமையாகப் பேசுகிறோம். நம்முடைய பண்டைச் சிறப்புக்களையும் முன்னோர்களையும் வாயாரப் புகழ்ந்து கர்வம் கொள்ளுகின்றோம். ஆனால் நமது தற்கால இழிநிலையைச் சிறிதும் சிந்திக்கின்றோம் இல்லை. பழம் பெருமைகளைப் பன்னிப் பன்னிப் பேசுவதால் வரும் பயன் என்ன என்பது விளங்கவில்லை. உலகத்தில், தற்காலம் கிறிஸ்தவ மிஷனரிகள் ஆற்றிவரும் தொண்டு மிகவும் போற்றத்தக்கது. எந்த நாட்டிலேயோ பிறந்து வளர்ந்தவர்கள் உலகத்திலுள்ள பல்வேறு நாடுகட்கும் சென்று தங்

கள் கொள்கைகளைப் பிரசாரம் புரிந்துவருகின்றனர். இதற்காக ஏராளமான பொருளைச் செலவு செய்கின்றனர். நமது நாட்டில் கிறிஸ்தவ மிஷினரிகளின் பொருட் செலவில் எத்தனையோ கல்லூரிகளும், கலாசாலைகளும், மருத்துவசாலைகளும் நடைபெற்று வருகின்றன. மக்களைத் தங்கள் மதத்தில் சேர்க்கத் தீவிர முயற்சி செய்கின்றனர். இவர்கள் நமது அன்னதான முறையைப் பின்பற்றுகின்றனரா என்று கேட்கின்றோம்? இவர்களுடைய வேலையைக் கண்ணாரக் கண்டும் இன்னும் நம் மக்கட்கு உணர்ச்சியும் எழுச்சியும் தோன்றாதிருத்தல் வியப்பாகவே இருக்கிறது. கிறிஸ்தவ மிஷினரிகளின் முறை உண்மைத் தருமத்தின்பாற் படாதென்று யாரே கூறவல்லார்?

நமது நாட்டில் எத்தனையோ மடங்கள் இருக்கின்றன. இவைகளில் பொருள் வருவாய்க்கும் குறைவில்லை. இவ்வருவாய்கள் எவ்வாறு செலவிடப்படுகின்றன என்று யாரேனும் அறிய முயற்சிக்கிறார்களா? ஆண்டு ஒன்றுக்கு லட்சக்கணக்கான பொருள் வருவாயுள்ள தேவாலயங்களும் இருக்கின்றன. இப்பொருள்கள் எல்லாம் உற்சவங்களின் பேரால் தாசிகளின் நடனங்கட்கும், வாணவேடிக்கைகட்கும் வீண்விரயம் செய்யப்படுகின்றன என்று வருத்தத்தோடு குறிப்பிடவேண்டியிருக்கிறது. நம் முன்னோர்கள் மடங்கட்கும் ஆலயங்கட்கும் என்நோக்கங்கொண்டு மானியங்களைக் கொடுத்தனர்? சமய ஞானத்தையும் மொழியையும் நாட்டில் பரவச் செய்யவே அவர்கள் ஏராளமான பொருள்களை மானியங்களாகக் கொடுத்தனர். நம்முன்னோர் உண்மைத் தருமசிந்தனை இப்பொழுது பாழாக்கப்பட்டு வருகிறது. மக்கட்குக் கடவுளை வழிபடும் அறிவை உண்டாக்காமலும் தமிழ்மொழியைத் தக்க வழியில் பேணாமலும் இம்மடங்களும் ஆலயங்களும் எதற்காக இருக்கின்றன என்று வினவுகின்றோம்? சமயத்தையும் மொழியையும் வளர்க்கக் கடமைப்பட்ட இத்தர்ம கர்த்தர்களிடமே உண்மைத் தருமசிந்தனை சூனியமாயிருக்கும் பொழுது ஏனைய மக்களிடம் எவ்வாறு உண்மைத் தருமநோக்கம் இருக்க முடியும் என்பது எமக்கு விளங்கவில்லை.

சமூக முன்னேற்றத்திற்காகவும், அரசியல் முன்னேற்றத்திற்காகவும் உண்மையில் உழைப்பவர்களும் தரும சிந்தனையுடையவர்களே. இவ்விரு துறைகளிலும் நாம் மிகவும் பிற்போக்கடைந்திருக்கின்றோம். சமூக ஊழல்கள் இன்னும் நமது நாட்டு மக்களைத் தலைதூக்க விடாமல் அழுத்திக்கொண்டிருக்கின்றன. நமக்குரிய அரசியல் உரிமை இன்னும் வெகு தூரத்தில் இருப்பதாகவே கருதவேண்டியிருக்கிறது. சமூக சீர்திருத்தத்திற்காக அநேக அறிஞர்கள் அரும்பாடுபட்டிருக்கின்றனர். இதுபோலவே அரசியல் விடுதலைக்காகவும் பல பெரியோர்கள் அபாரமான தியாகம் செய்திருக்கின்றனர்—இன்றும் செய்து வருகின்றனர். சமூகவியல் அரசியல்



ஆகிய இவற்றின் பேர்களைச் சொல்லிக்கொண்டு சுயநல நோக்கத்தோடு போலிவேஷம் போடுகின்றவர்களும் நமது நாட்டில் மலிந்திருக்கின்றார்கள். இவர்கட்கு நாட்டைப்பற்றியோ மக்களைப்பற்றியோ ஒரு சிறிதும் கவலை கிடையாது. பொய்யும் புரட்டுங் கூறிச் சமயத்துக்குத் தக்கபடி வேஷம் போட்டுத் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவதில் மட்டுந்தான் இவர்கட்குக் கவலை அதிகம். தற்காலத்தில் பொதுஜன ஊழியத்தின் பேரால் அநேகர் சட்டசபை, ஜில்லாபோர்டு, தாலூகாபோர்டு, முனிஸிபாலிட்டி முதலியவைகளுக்குப் போட்டி போட்டுக்கொண்டு போக முற்படுகின்றனர். இவற்றிற்காக நடைபெறும் தேர்தல் விநோதங்கள் உலகப் பிரசித்தமானவை. தேர்தல் செலவு செய்து செய்து எத்தனையோ குடும்பங்கள் கடனில் மூழ்கிச் சீரழிந்துவிட்ட செய்திகளை வாசகர்கள் கேள்வியுற்றிருக்கலாம். ஏராளமான பொருட் செலவு செய்து இவ்வாறு போட்டி போட்டுக்கொண்டு செல்லுகின்றவர்கள் எல்லாரும் உண்மையான தருமசிந்தனையோடு பொதுஜன ஊழியம் புரியவே போகின்றார்கள் என்று கூற முடியாது. உண்மையாகவே பொதுஜன சேவையில் வேட்கையுள்ளவர்கள் தேர்தல்களில் வீண் செலவு செய்ய வேண்டியது அநாவசியம். இவர்கள் அப் பொருள்களை வேறு பயன் தரத்தக்க வழிகளில் உபயோகப் படுத்தலாம். ஆனால் புகழும் ஆடம்பரமும் கருதுகின்றவர்கட்கு எவ்வாறு உண்மைத் தருமம் செய்ய மனம் வரும்?

இப்போது மக்களை வாட்டி வரும் அறியாமையும், வறுமையும் பிணியும் நீங்கப் பாடுபட முன் வருகின்றவர்களையே உண்மைத் தருமசிந்தனை உடையவர்கள் என்று கூறவேண்டும். ஆங்காங்கு கலாசாலைகளையும், வாசக சாலைகளையும், கழகங்களையும் நிறுவித் தமிழ்மொழியை வளர்ச்சி செய்து மக்களின் அறியாமையை நீக்கவேண்டும். வியாபாரம், கைத் தொழில், விவசாயங்கள் செழித்து விளங்க, அவற்றிற்கான முறைகளையும் கல்வியையும் நாட்டில் பரப்ப விரைந்து முற்படவேண்டும். மக்களைப் பீடிக்கும் பிணிகள் நீங்க ஒவ்வொரு கிராமத்திலும் தக்க மருத்துவ சாலைகளை ஏற்படுத்தவேண்டும். சாதாரண மக்கட்குச் சுகாதார உணர்ச்சி வளருமாறு சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். இவற்றின் வளர்ச்சிக்காக நமது பண்டைய தரும ஸ்தாபனங்கள் தாராளமாகப் பொருளுதவி செய்ய முன் வர வேண்டும். ஆடம்பரங்கட்காக வீண் விரயம் செய்யும் செல்வர்களும் அநுதாபத்தோடு உதவி புரிய முற்பட வேண்டும். அப்பொழுது தான் நமது நாடு செழிக்கும். நாமும் மக்கள் எனப்படுவோம். உண்மையான தரும சிந்தனை உடையவர்கள் இந்தக் காரியங்களையே செய்யவேண்டும். நாம் எண்ணிய எண்ணியாங்கு முடியத் திருவருளை வழுத்துகின்றோம்.

ஓம் தத் ஸத்.




(திருச்சி. தி. போ. மாணிக்கவாசகம்.)

1. நன்மை கடைப்பிடி. நன்மை செய்தற்குச் சமயம் கிடைக்கும் போது செய்யாமற் போனால், பின் ஒரு காலத்தில் வாய்ப்ப தரிது.

2. பிறர்க்குச் செய்த உபகாரங்களை நாமே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

3. நாம் ஒன்றைப் பிறர்க்கு வாக்குத் தத்தம் செய்யுமுன் அது நம் மால் முடியுமா முடியாதா என ஓர்ந்து வாக்குறுதி செய்ய வேண்டும்.

4. நாம் சிறு துன்பங்களைச் சகிக்கப் பயிலல் வேண்டும்; பயில்வோ மாகில், மேலே பெருந் துன்பங்களையும் சகிக்க வல்லவராவோம்.

5. உள்ளது போதும் என்று அமைந்த மனமே குறைவற்ற களஞ் சியம். போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.

6. பிறருக்கு வரும் கல்வி செல்வங்களைக் காணும் பொழுது, பொறாமை இன்றி மகிழ்தலே நன் மனதிற் கழகு.

7. நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்கு எடுத்துரைத்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர் களே நமக்கு உத்தம சிநேகிதர்கள்.

8. எவ்வகைப்பட்ட பெரிய நன்றிகளைக் கொன்றவனுக்கும் உய்வு உண்டாம்; செய்ந் நன்றியைக் கொன்றவனுக்கு உய்வு இல்லை யாம்.

9. பிறருடைய இன் சொற்கள் தனக்கு இன்பம் தருதலை அனு பவித்து அறிகின்றவன். அது நிற்க, கடுஞ் சொற்களைப் பிற ரிடத்தே வழங்குவது என்ன பயன் குறித்து!

10. நாமே நம்மைப் புகழ்தல், விளக்கைப் பிரகாசிப்பிக்கக் கருதி அதனது தகழில் நீரை வார்த்தல் போலும்.

11. கல்வி அறிவால் ஆகிய மூப்பே மூப்பு; ஆதலால் அதனை உடையவர்களே யாவராலும் போற்றத்தக்கவர்கள்.

# ஆனந்த சந்திரோதயம்

தமிழாசிரியர் S. V. வரதராஜையங்கார்

"சிறுமாமனிசர்" இவ்வணம் திருவரங்கநாதனுடைய திருவருளுக்குக் குழந்தைப் பருவத்திலேயே பாத்திரரான பட்டர், எல்லோரும் கண்டு வியக்கு மாறு அற்புத ஞானத்தோடு "குழந்தையும் தெய்வமும் கொண்டாடு மிடத் திலே" என்ற பழமொழிக்கு உண்மையான இலக்காய் விளங்கி வந்தார். அந் நாளில், ஒரு சமயம் ஆழ்வான் திருவாய் மொழி யனுசந்திக்கும்போது

உறுமோ பாவியேனுக் கிவ்வுலகமூன் றுமுடனிறையச்
சிறுமாமேனி நிமிர்த்தவென் செந்தாமரைக்கட் டிருக்குறளன்
நறுமாவிரைநாண் மலரடிக்கீழ்ப் புகுதலன்றி யவனடியார்
சிறுமாமனிச ராயென்னை யாண்டா ரிங்கே திரியவே.

என்ற பாசுரத்தை யருளிச் செய்தார். அதுவரை கவனமாகக் கேட்டுவந்த பட்டர், மேற்குறித்த பாசுரத்தின் கடைசியடியின் தொடக்கத்தில் சிறுமா மனிசர் என்றுள்ளதைக் குறித்துத் தமது தந்தையாரை 'ஒன்றிற் கொன்று எதிரிடையான சிறுமை பெருமை என்னு மிரு குணங்களும் ஓர் பொருளி னிடத்தில் சேர்ந்திருப்பது எங்ஙனம்?" என்று கேட்டார். அதற்கு ஆழ்வான் சற்று யோசித்துப் பிறகு தன் குமாரனைப் பார்த்து "குழந்தாய்! இதற்கு உனக் குச் சமாதானம் கூறுகின்றேன் கேள். நீ இன்னும் உபநயன கிரமத்தை யடையவில்லை யாதலால் உனக்கு வேதாகமங்களைக் கொண்டு விஷய விளக் கம் செய்தல் கூடாது. கண்கூடான சில பிரமாணங்களைக் கொண்டு உனது சங்கையைத் தீர்க்கின்றேன்" என்றுரைத்து, அவ்விடம் வந்த சில பெரியார் களைக் குறிப்பிட்டுக் காட்டி "திருமேனி சிறுத்து ஞானம் பெருத்திருக்கும் சிறியாச்சான் அருளாளப் பெருமாளெம் பெருமானார் ஆகிய இவர்களை 'சிறுமா மனிசர்' என்று கூறத் தடையென்ன? முதலியாண்டான், எம்பார் முதலான பெரியோர்கள் உலகியலாரோடு ஒக்க உண்டு வாழ்வதுடன், திருமால் பக்தி யில் பரமபதத்தின்கண் ணுள்ள நித்ய சூரிகளைப் போன்றவர்களா யிருக்க வில்லையா? இவ்விதம் திருமேனி சிறுத்தும் மகிமையில் பெருத்து முள்ளவர் களை நோக்கியே ஆழ்வார் அங்ஙனம் அருளிச் செய்தார். இவர்கள் மனித ரென்று கருதுமிடத்து சிறுமை யிருந்தாலும் ஆத்ம ஞானத்தில் சாலப் பெரு மை யுடையாரல்லவா?" என, பட்டரும் "ஒக்கும்! ஒக்கும்!" எனத் தலையசைத் தார். "மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பேரிது" என்ற பழமொழியும் இங்கு நினைக்கத்தக்கது.

***

"பறப்பதன்குட்டி தவழுமோ" என்றொரு பழமொழியுண்டு. ஒரு நாள் பட்டர் வீதியிலே தம்போன்ற சிறுவர்களோடு தன் பொன்மேனி புழுதி

"கடன் இல்லாத கஞ்சி கால் வயிறு போதும்"

யடைய விளையாடிக் கொண்டிருந்தார். அதைக் காணப் பலரும் உகந்து உவளம் களித்தனர். இங்ஙனம் விளையாடி யிருக்கும்போது திருவீதி வழியே கலைகள் பலவற்றில் வல்லவனான ஓர் வித்வான் 'சர்வக்ஞபட்டர்' என்ற பட்டப் பெயருடன் பரிசனங்கள் 'சர்வக்ஞ பட்டர் வந்தார்' என்று விருது சொல்லவும் காளமூதவும் மிக்க ஆடம்பரத்துடன் பல்லக்கிலேறி பவனி வருவதுபோல் வர, பட்டர் "இவனாடா இவன்! உடையவர், கூரத்தாழ்வான், முதலியாண்டான், அருளாளப் பெருமாளெம்பெருமானார், எம்பார் முதலிய பெரியார்களிருக்கத் துணிவாக 'சர்வக்ஞபட்ட'னென்று விருதுசொல்லி வருமிவன் யாரோ! பார்ப்போம்" என்றெண்ணி, தாம் அளாவிக் கொண்டிருந்த புழுதியில் ஒரு பிடியெடுத்துக்கொண்டு, அப்பல்லக்கினருகே சென்று அவனைப் பார்த்து "நீ சர்வக்ஞனல்லவா? இது எவ்வளவு, சொல் பார்ப்போம்?" என்று அக்கைப்பிடியைக் காட்டி வினவ, திடீரென்று ஒரு சிறு குழந்தை முன்வந்து கேட்பதைக் கண்டதும் அவன் பொறி தட்டிப்போய் ஸ்தம்பித்து, பின்பு சற்று யோசித்து இன்னதென்று ஒன்றும் சொல்லமாட்டாதவனாய் மௌனம் காட்ட, பட்டர் "இது ஒரு கைப்பிடிமண்" என்று கூறித் தப்பித்துக்கொண்டு சர்வக்ஞன் என்னும் பெயரை இழக்காமற் செல்ல முடியாமல் அக்ஞானனாகி விட்டாயே!" என்று பரிகசித்து, தம்முடன் விளையாடும் சிறுவர்களைப் பார்த்து "இவன் விருதுகளைப் பறியுங்கள்" என்றார். அந்த வித்வான் மழலைச் சொல் மாறாத பட்டரின் சௌந்தர்ய ரூபத்திலீடுபட்டு "இப்படித் திருவவதரித்த பாலன் யாருடைய குமாரரோ?" வென்று சந்தேகப்பட்டு அங்கு நின்றுகொண்டிருந்தவர்களைக் கேட்டு, உண்மையுணர்ந்து மிக்க அன்புடன் தமது பல்லக்கிலேற்றி வைத்துக்கொண்டு ஆழ்வான் திருமாளிகையை நோக்கிச் செல்லலானார். சென்றவளவில் "பிள்ளை யுறங்கா வில்லிதாஸர்" என்பாரின் மனைவியான பொன்னாச்சியார் நடந்தவற்றைக் கேட்டு, பட்டரை வாரியெடுத்துக் கொண்டுபோய் மந்திர ரத்னத்தால் ரக்ஷையிட்டு திருஷ்டி கழித்து "இப்படிக் குழந்தையை வீதியில் போகவிடலாமா? நாலுபேர் கண் படுமன்றோ?" என்று ஆண்டாளை நோக்கிக் கூறிவிட்டுச் சென்றாள். "பல கற்றோர்க்கு அச்சாணி அன்னதோர் சொல்" பட்டரிடம் பரிமளித்தமை பற்றிப் பலரும் வியந்து மகிழ்ந்து "விளையும் பயிர் முளையிலே தெரியுமன்றோ?" என்றுரைப்பாரானார்கள்.

***

"நீ நினைத்ததென்ன?" வாழ்க்கைக்கு நற்றுணை புரிவது மனம். அதன் ஏவலின் வழி பொறிகளைந்தும் நிற்கின்றன; சரீரமும் அம் மனதின் தூண்டுதலினால் வேலை செய்கின்றது. ஆதலின் அம்மனத்தின் தன்மையைப் பொறுத்திருக்கின்றன சுகதுக்கங்களும் பலாபலன்களும். இருளில் சற்று தூரத்திலிருக்கும் ஒரு மரத்தை ஸ்வபாவ பயந்த குணத்தால் பேயென்று கருதிவிட்டால், உடனே பேய்க்குரிய ரூபங்களனைத்தும் மனதால் கற்பிக்கப்பட்டு, ஓர் பயங்கரத் தோற்றத்தையும் கட்புலனுக் களித்து மற்ற அவயவங்களும் நடுங்கி விடுகின்றன. ஆகவே, மனமே யாவற்றிற்கும் காரணமாயிருக்கின்றது. அது கர்மவயப்பட்டு, பொய்யும் காமமும் களவும் நிறைந்த மக்கள் பிறந்த இவ்வுலகில் பழக்கம் காரணமாக தீய வழியையே அவாவி நிற்கும் இயல்பினதாகி விடுகின்றது. அத் தீயவழிகளில் இறங்காதபடி அதனைத் திருப்பி நல்வழியில்

"தீப்புண் ஆறும், வாய்ப்புண் ஆறாது."



பழக்கிவிட்டால் அப்பொழுதுதான் ஆத்ம ஆனந்தமாகிய சந்திரன் உதயமாகின்றான். இத்தகைய ஆத்ம தரிசனத்தை யடைந்த பெரியார்கட்குக் கடவுள் தன்மை இன்னதென்ற உணர்ச்சி ஏற்படுகிறது. "தூய மனத்தடியவர்க்கு துணையாய் நின்றான்" என இறைவன் அவர்கள்பால் கருணை கொண்டு இன்னருள் சுரக்கின்றான். ஆனால் எவ்வளவு மன பரிபக்குவ மடைந்தவர்களாயினும் சற்றும் சலிக்கும் தன்மை இல்லாதிருக்க முடியுமா? அங்ஙனம், சற்று மாறுபட்டாலும் பகவான் தடுத்தருள் புரிகின்றார். தன்னை 'அன்னையே ஒப்பாய்' என்று அடிபணிவார்க்கு அன்புடன் தாயாகத் தண்ணளி புரிகின்றார். நண்பனென்று நயப்பவர்க்கும் நற்றுணையாகின்றார். தாஸனென் றடிபணிவாரின் பாசங்களை யறுக்கின்றார். அழுதழுது அடிவணங்கி அழைப்பார்க்கு ஆதரவளிக்கின்றார். அடித்தது கல்லாலாயினும் அன்புடன் செய்யப்படுமாயின் அதனை மலராக ஏற்று மனமுவக்கின்றார்; நாம் எப்படி நினைப்பினும் அப்படி யடிகாட்டி யருள்கின்றார். ஒருநாள் பட்டர் ஸ்ரீரங்கநாதனைச் சேவிக்கச் சென்றபொழுது, திருவரங்கன் திரைக்குள்ளாகப் பிராட்டியாருடன் ஏகாந்தமாக வீற்றிருந்தார். எனினும், பட்டர் தமக்குச் செல்ல உரிமையுண்டென்று திரைக்குள்ளே சென்று திருவடி வணங்கப் புகுமளவில், திருவரங்கன் குறிப்பால் வெளியே அகன்றேகும்படி பணிக்க, பட்டரும் வெளியே வந்தார். உடனே அரங்கன் அருள்கொண்டு அர்ச்சகர்பால் ஆவேசித்து பட்டரை உள்ளே அழைப்பிக்க, அவரும் பணிந்தேகி தண்டனிட்டு நின்றார். அர்ச்சகர் மீது ஆவேசித்த பெருமாள் "நீ முன்பு இங்கு வந்தபோது என்ன நினைத்தாய்?" என, பட்டர் "ஸ்ரீரங்கநாதனும் நாச்சியாருமாக நினைத்தேன்" என்றுரைக்க, அரங்கன் "முன்பு நீ கருதிய தெவ்விதம்?" என்றார். எனலும் பட்டர் "கூறத்தாழ்வானும் ஆண்டாளுமாக" என்று கூற, திருவரங்கன் "அங்ஙனமே கருதி வந்திருப்பின் நான் கோபித்து வெளியே செல்லுமாறு பணித்திரேன். வேறாகக் கருதியதென்ன? இனி என்றும் "ஆழ்வானும் ஆண்டாளுமாகவே கருதுக" என்று கட்டளையிட்டருளினார். என்ன புத்ர வாத்ஸல்யம்! இச்சந்தர்ப்பத்தில் கீதை ஸ்லோகத்தின் கருத்து இங்கு ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது "பார்த்தனே! யார் என்னை பஜிக்கின்றார்களோ, அவர்களை அப்படியே நானடைகின்றேன்" என்பதேயாகும். கண்ணனின் வாக்கின் அருமையே அருமை! கீதையில் காணப்படும் இந்த ஓரடியான லக்ஷணத்திற்கு எத்தனையோ மகான்களின் சரித்திரங்கள் லக்ஷ்யங்களாக வுள்ளன. எப்படி நினைத்தாலும் எளிதில் வந்து இறைவன் காப்பான். ஆனால் மனத்தூய்மை வேண்டும். "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்." ஆரணமும் தேடிக்காணா அமரர் குலக்கொழுந்து அவ்வடியவர்களுக்கு முன்னர் அருளொடு நிற்பான்.

---

ஒருவர் தன்னுடைய கஷ்ட நிஷ்டூரங்களை யெல்லாம் மற்றவரிடம் வாய் ஓயாமல் கூறிக்கொண்டே வருகிறார்; எனினும் கேட்பவருடைய மனமோ வேறொன்றில் செல்லுகிறது; மேலுக்குத் தலையைமட்டும் அசைக்கிறார்.

"மூடனுக்குக் கோபம் மூக்கின்மேல்"

# கம்பர் கவிநயம்.

(பண்டிதர், ரா. திம்மப்ப ஐயர்.)

"இரவி தன்குலத் தெண்ணில்பல் வேந்தர்தம்
பரவு நல்லொழுக் கின்படி பூண்டது
சரயுவென்பது தாய்முலை யன்னதிவ்
வுரவு நீர்நிலத் தோங்கு முயிர்க்கெலாம்"

என்பது இராமாயணத்திற் பாலகாண்டத்துள்ள சரயு வென்னும் ஆற்றினது பெருமையைக் குறித்துச் சொல்லும் பாசுரமாகும். இனி யிதனிற் பொதிந்துள்ள பல்வகை நயங்களையு மாராய்வாம்.

சூரியகுலத் துதித்த எல்லையற்ற பலவாகிய அரசர்களது யாவராலும் புகழ்ந்து கூறுதற்குரிய நல்லொழுக்கங்களுக் கேற்பத் தானும் அவற்றை மேற்கொண்டதாகிய சரயு வென்று எவராலு முயர்த்துக் கூறப்படும் நதியானது வலிமை பொருந்திய கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்தே செழித்தோங்குதற்குரிய ஜீவராசிகளுக்கெல்லாம் (காத்தளிக்குந் தன்மையில்) அன்னையினது சுரந்தமுதூட்டும் கொங்கைகளை நிகர்ப்பதாம் என்பது இதன் பொழிப்புரையாகும். வேந்தரது சீரிய குணங்களைப்போல் தானும் அவ்வொழுக்கங்களைக் கொண்டுளதென்றும், மன்னுயிரைப் பாதுகாக்குந் தன்மையிற்றாயை நிகர்த்துப் பெருமையுற் றிருக்கின்றதென்றும் புனைந்துரைக்கப்பட்டதி லடங்கியுள்ள செம்பொருள்களை விரித் தெழுதுவாம்.

கொடை யளி செங்கோல் குடியோம்பல் இந்நான்கும் அரசர்க்கின்றியமையாதனவாகிய நான்கு சிறந்த குணங்களாம். இதனைக் "கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும், உடையானும் வேந்தர்க்கொளி" என்னுந் தமிழ்மறையா லுணர்க. மற்றுத் தன்னிடத்துள்ள குற்றங்களை யறவே நீக்கிக்கொண்டு பிறரிடத்துள்ள குற்றங்களை யொருவன் ஆராய்வானாயின் அம்மன்னவனுக்கு வரக்கடவதாகிய குற்றம் வேறென்னுளது? ஒன்று மின்றாம். இதனைத் 'தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற் பின், என்குற்றமாகு மிறைக்கு' என்னும் பொய்யாமொழியா னுணர்க. இன்னும் வாய்மை, யாவருந் தன்னைப் பற்றுக் கோடாகக் கொள்ளுதற்குரிய களைகணும் பான்மை யாதியனவும் வேந்தர்க்குரிய விழுமிய குணங்களாம். இனி இப்பண்புகள் ஆற்றினிடமுளவேயோ என்பதையு நோக்குவாம். 'அற்றக்கடைத்து மகல்யாறகழ்ந்தக்காற், றெற்றெனத் தெண்ணீர் படும்' என்று சான்றோர் கூறியபடி, மறவாக்கொடையும் இயல்பிலேயே தண்ணியதாந் தன்மையோடு மன்னுயிர்களைத் தவறாமற் காக்குந்தண்ணளி யுடைமையும், யாவற்றினுந் தன்னை யின்றியமையாத் தலைமைத் தன்மையும், உலகுயிர்களைத் தான் பாய்ந்து விளையுளாதியவற்றாற் பாதுகாக்குந் தன்மையும் ஆற்றினிடத்துளவாதல் காண்க. தான் புனிதமாயிருந்துகொண்டு,தன்னில் மூழ்கியவரது மாசுபோக்கித் தூய்மை புரிவதும், என்றும் மாறுதலகிற் பெருகி யோடுவதாகிய வாய்மையைக்கொண்டிருப்பதும் அதனலியாவர்க்கும் பற்றுக்கோடா யிருப்பதும் இதனிடத்துங் காணற்பாலனவாம். எனவே வேந்தரது பெருங்குணங்களை இஃதுடையதா யிருத்தல் ஈண்டுக் கவனிக்கற் பாலதாம். வேந்தர்மாட் டொழுக்கங்களைப்



போல், தானிவ்வுலகத்துப் பெருமையாக நிறைந்தொழுகிப் பெருகியோடுவதை யிதற்குவமமாகக் கொள்வது பொதுப்பான்மையதாம். தாய், தான் பசித்திருப்பினும் தன் மக்கள தரும் பசியைக்காணச் சகியாது தன்னலியன்றவரையி லவாது பசியைப் போக்க முயன்று அதனைத் தீர்த்து மகிழ்தல் போலவே, என்றும் வற்றாச் சரயுவும் இவ்வுலகத்து மன்னிய உயிர்களது பசியைப்போக்கிப் போஷிக்குந் திறத்திற் சிறந்த உவமையாதல் பொருத்தமானதொன்றாம். இக்கருத்துப்போலவே புறநானூற்றிலும்,

* 'புனிறு தீர்குழவிக் கிலிற்றுமுலை போலச்
சுரந்த காவிரி மரங்கொல் மலிநீர்
மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருநன்'

என ஓர் புலவர் சோழமன்னனைப் புகழ்ந்துரைத் திருப்பதனை நன்கு காணலாம். தான் தளர்ந்த விடத்தும் உலகை யுபகரிக்கும் ஒப்புரவாந் தன்மையை இவ்வுவமை முகத்தாற் பாலியாற்றினிடத் தமைத்துத் தெய்வப்புலமைச் சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்திற்கூறி யிருக்குந் திறமும் ஈண்டாராய்தற் கவசியமாகலின் அச்சிறந்த பாசுரத்தையும் எழுதுவாம். அது

'பிள்ளை தைவரப்பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணற்றிடர் பிசைந்து கைவருட
வெள்ள நீரிரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயற் பருமடை யுடைப்பது பாலி'

என்னும் பாசுரமே யாம்.

† 'எருமை யன்ன கருங்கல் லிடைதோ
றானிற் பரக்கும் யானைய! முன்பிற்
கானக நாடனை நீயோ பெரும!
நீயோ ராகலின் நின்னொன்று மொழிவல்
அருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி
யளிதோதானே பெறலருங் குரைத்தே'

எனக் காவலரது பரிபாலனத் தன்மையைக் 'குழவி கொள்பவரி னோம்புமதி'

---

* ஈன்றணிமைபொருந்தி அது தீர்ந்த குழவிக்குச் சுரக்கு முலைபோல், நீர்மிக்க காவிரியினது கரை மரத்தைச் சாய்க்கும் மிக்க வெள்ளம் உலகத்து உயிர்ப்பன்மையைப் பாதுகாக்கும் நல்ல சோழநாட்டையுடைய வேந்தன். (புறப்பாட்டுப் பழைய உரை.)

† ("எருமை போலும் வடிவையுடைய கரியகற்பொருந்திய இடந்தோறும் பெற்றம் போலப் பரக்கும் யானையை யுடையவாய் வலியையுடைய காட்டிற்குள்ளாகிய நாட்டினை யுடையாய்! பெரும! நீ இங்ஙனம் பகைவரான் அணுகப்படாத இயல்பாகிய பெருஞ் செல்வத்தை யுடையனாதலால், நினக்கு ஒரு காரியம் சொல்லுவேன். அதனைக் கேட்பாயாக. அருளையும் அன்பையும் நீக்கிப் பாவஞ்செய்தாரை நீங்காத நரகத்தைத் தமக்கிடமாகக் கொள்பவரொடு பொருந்தாது, நீ காக்கப்படுந் தேயத்தைக் குழவியை வளர்ப்பாரைப் போலப் பாதுகாப்பாயாக. அளிக்கத்தக்கதொன்று அக்காவல், அது பெறுதற்கரிது" (புறப்பாட்டுப் பழையவுரை.)

எனப் பாராட்டிக் கூறி யிருத்தலும், அது சிற்சிலர்க்கேயன்றி யேனைய ரெல்லார்க்கும் பொருந்துதல் மிக வரிதாமென நுவலப்பட்டிருத்தலும், நோக்கத் தக்கனவாம். எனவே அரசனும், ஆறும், தத்தங் குடிகளைப் புரக்குந்தன்மையிற் சிறுமகார்களைக் காக்கும் அன்னையரைப் போன்றிருக்கும் பான்மை யீண்டு வருணிக்கப்பட்டமை சாலவும் இன்பம் பயத்தற்குரிய தாம். "ஆருயிரின் றாயே, அறத்தின் பெருந்தவமே, பொருளின் கண்ணே பெருமானே" எனப் புகழேந்தியார் நளவேந்தனை முதற்கண் 'ஆருயிரின்றாயே' எனப் புகன்றுள்ளமை காண்க. பிறபுலவர் பெருமக்களும் புவியரசப் பெருந்தகையார்களைப்போற்று மிடந்தோறும் இங்ஙனமே கூறி யிருத்தலும் அறியற்பாலதாம். குடிகளைப் பேணுந்திறத்தி லிம்மட்டோடு நில்லாது தம்முயிர் போலவுங் கருதிப் புரந்தளித் திடுதலும் வேந்தர்க்கியல்பே யாம். 'தன்னுயிரா மென உலகிற்றங்கிய மன்னுயி ரனைத்தையும் புரக்கு மாட்சியான்' என நளனரசியலை யதிவீரராமபாண்டியனார் புனைந்துள்ளமையும், 'நெல்லுமுயி ரன்றே, நீருமுயி ரன்றே, மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்' எனப் புறப்பாட்டிலோரிடத்தோர் புலவர் அரசனை யுயிராகவே கிளந்துரைத்தமையுங் கவனிக்கற்பாலன. 'மன்னனுயிர்த்தென்ற கருத்து உயிரையாக்கும் நெல்லும் நீரும் உளவாவது மன்னன்முறை செய்து காப்பி னென்றதாம்' என்னும் அப்புறப் பாட்டின் பழைய உரை நயம் நம்மனத்திற்குப் பேருவகை விளைத்தல் காண்க.

வேந்தர்கள் மன்பதைக் கெல்லா முயிராவரென்பதை யடியில் வரும் பெரியபுராணம் மூர்த்திநாயனார் புராணப் பாசுரத்தானு மினிதிற்றெளியலாகும்.

பன்முறை யுயிர்களெல்லாம் பாலித்து ஞாலங்காப்பான்
றன்னெடுங் குடைக்கீழ்த் தத்த நெறிகளிற் சரித்துவாழும்
மன்னரையின்றி வைகுமண்ணுல கெண்ணுங்காலை
இன்னுயி ரின்றிவாழும் யாக்கையை யொக்கு மென்பார்.

'சரயுநதி—கைலாசகிரியிலுள்ள மானசமடுவில் தோன்றுவது—மானச சரஸிலிருந்து தோன்றுவதனால்தான் இதற்குச் சரயுவென்று பெயர். கைலாசமும் இமயமலையின் ஒரு பகுதியே யென்றுகொண்டு கவியிரண்டனையும் அபேதமாகக் கூறியுள்ளா ரென்க. தாயின் முலைப்பால் குழந்தையை வளர்த்தல் போலச் சரயு, தன்னீரை இவ்வுலகத்தாரை யுண்பித்து வளர்க்கு மென்க. சூரியகுலத்து மன்னவரின் நல்லொழுக்கம் என்றும் மாறாது ஒருபடிப் பட்டிருக்கும். அதுபோலவே இந்தச் சரயூநதியின் ஒழுக்கும் (நீர்ப்பெருக்கும்) என்றும் இடையறாது ஒருபடியாக ஓடுமென்க. உரவுநீர்—உலாவுகின்ற நீர் (உரவுதல்—உலாவுதல்) என்பர் உரையாசிரியர் ஸ்ரீமத். வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர்.

---

எந்த நூதன பாட்டும் முதன் முதலில் நாடக மேடையில் பாடப்படுகிறதாம்! பிறகு கிராமபோன் ரிகார்டில் வருகிறதாம்!! அதன்பின் பலரும் பாட ஆரம்பித்துவிடுகின்றனராம்!!! உண்மைதானா?

---

" கண்ணாடியில் கண்ட பணம் கடன்தீர்க்க உதவுமா?"

# அறிவு விளக்கம்.

(பி. நா. ராம ஐயங்கார் பி. ஏ.)

## சந்திரமண்டல மனிதர்

தற்காலம் இரு ஐரோப்பிய வானசாஸ்திர விற்பன்னர் சந்திரமண்டலத்திற்குப் பிரயாணஞ் செய்ய உத்தேசித்துளர். அவர்கள் ஏற்பாட்டின்படி பெரிய துப்பாக்கிக் கூண்டொன்று செய்து, அதனுள் ஆகாயக் கப்பல்களுக்கு வேண்டிய வசதிகளும் உண்டாக்கி, துப்பாக்கியின் வேகத்தாலும், ஆகாயக்கப்பல் ஓட்டும் இயந்திரத்தின் சக்தியாலும் அவ்விரு வாலிபரும் சந்திரமண்டலம் போகப் பிரயத்தனம் செய்யப்போவதாக அறிகிறோம். அவர்கள் முயற்சி அபாயம் விளைக்கும் தன்மைத்தாக இருக்கிறது என்பதைப்பற்றி நாம் இப்பொழுது எடுத்துக்காட்ட உத்தேசிக்கவில்லை. ஆனால் அவர்கள் சந்திரமண்டலத்தைப் போய்ச் சேர்ந்தாலும் அபாயம் இல்லாமல் இருப்பார்களா என்பதைக் கவனிப்போம்.

சந்திரமண்டலத்தில் நாம் நினைத்திருப்பதுபோல் உயிருள்ள மனிதர்கள் கிடையாது. அதில் யாரேனும் வசித்துள ரெனினும் அவர்கள் நம்மைப்போலிருக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். அதற்கு முக்கிய காரணம் அங்கு வாயு (Atmosphere) கொஞ்சமேனும் இல்லை. வாயுவால் மனிதர்களின் இயற்கையும் நிலைமையும் மாறும். வாயு இல்லா விட்டால் நம்மால் யாதும் செய்ய முடியாது. முதன் முதல் சுவாசிப்பது நமக்கு அரிதாகும். நம் மில்லங்களில் விளக்குகள் எரியா. தோட்டங்களில் செடி கொடிகள் வளரா. உண்பதற்கு யாதுமில்லாமலும் சுவாசிப்பதற்குக் காற்றில்லாமலும் நாம் அனைவரும் மரிப்போம். அதுமட்டு மல்ல. வாயுவின் பரிமாணமும் கனமும் நம் உயரத்தையும் பலத்தையும் மாற்றும். வாயு அதிகமாகப் பரவியுள்ள இடங்களில் வசிப்பவர் குள்ளமாக இருப்பர். அவர்களால் சிறிய பளுவைத்தானும் தூக்க முடியாது. வாயுவின் கனம் மிகவும் அதிகமானால் நம்மால் நிமிர்ந்து உட்காரவும் நடக்கவும் முடியாது. ஆனால் நம் மேலுள்ள வாயுவை யகற்றி விட்டால் நாம் உயரமாக வளர்வது மட்டுமல்ல, மிகவும் வியக்கத்தக்க வேலைகளையும் செய்வோம். மலைகளையும் குன்றுகளையும் யாதொரு பிரயாசையுமில்லாமல் எகிரிக் குதித்துத் தாண்டி விடலாம். பெரிய பெரிய பாரங்களையும் கஷ்டமில்லாமல் தூக்கி யெறிந்து விடலாம்.

நாம் முன்னரே சந்திரமண்டலத்தில் வாயுவின் பரிமாணம் கிஞ்சித்தும் கிடையாது என்றுரைத்தோம். ஆகவே, அங்குள்ளவர்கள் நம்மைப்போல் மூச்சுவிடமாட்டார்கள். அவர்களுக்கு மூக்கே இருக்காது என்றும் சொல்லலாம். சுவாசிப்பதற்கு நாசித்துவாரங்களும் மூக்கு மில்லாவிடில் காற்றுப் பையும் அவர்தம் தேகத்துள்ளிருக்காது. அவர்கள் நாட்டில் மழை பெய்

---

" கருமத்தை முடிக்கிறவன் கஷ்டத்தைப் பாரான் "

யாது. ஆகையால் அவர்கள் கட்டும் இல்லங்கள் என்றும் கேடடையா. காற்றடித்து வீடுகள் விழா. தண்ணீரில் நனைந்து பாசிகள் கொள்ளா. இடி மின்னல்களால் உடைந்து போகா. அவர்கள் பூமியில் விளக்கு நெருப்பு முதலியவைகள் எரியா. ஆகையால் அவர்களுடைய வீடுகளில் சமையலறையே இருக்காது. அவர்கள் ஒருவரோடொருவர் தொண்டை நீர்வற்றக் கத்தினாலும் ஒருவர் பேசுவது மற்றொருவருக்குத் தெரியாது. அங்குச் செடிகொடிகள் இருப்பது அசாத்தியம். அவ்வாறு இருந்தாலும் அவைகளில் பூக்கும் புட்பங்களின் வாடை இன்பம் பயக்கா. ஏனெனறால் வாடை யிருந்தால்தான் மலர் வாசம் எங்கும் பரவும்.

ஆகவே கீழுரைத்துள்ள ஐரோப்பியர் இருவரும் சந்திரமண்டலத்திற்குப் பிரயாணஞ் செய்ய உத்தேசித்திருப்பது வீணே யாகும். அவர்களுடைய உயிருக்கே ஏதேனும் கஷ்டம் உண்டாகும். ஆயினும் அந்தத் தீரர்கள் இந்த அபாயமான பிரயாணத்தைச் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் தயார் செய்து விட்டனர். அவர்களுடைய முயற்சியால் ஏதேனும் நன்மை உலகத்திற்கு உண்டாகிறதா கவனிக்கலாம்.

## இலைகள் பார்க்கின்றனவா ?

இந்தக் கேள்வியை உங்களைக் கேட்டால் நீங்கள் யாதொரு ஆலோசனையுமில்லாமல் "இலைகளாவது, பார்ப்பதாவது? உனக்குப் பித்தம் பிடித்திருக்கிறதா?" என்று உத்தரம் அளிப்பீர்கள். ஆயினும் உண்மை யென்ன வெனில் இலைகளுக்குப் பார்க்குஞ் சக்தியுண்டு, அவைகள் பார்க்கின்றன என்பதே யாகும். ஆனால் நாம் நம் கண்களால் பார்ப்பதுபோல் அவைகள் பார்ப்பதில்லை யென்று நான் ஒப்புக்கொள்கிறேன்.

இலைகள் நிரம்ப விழிகளைப்போல விருக்கும் தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் (Lenses) இருக்கின்றன. ஆனால் அவைகளோ கண்ணாடிகளால் செய்யப்பட்டிருப்பதில்லை. இவைகள் நிரம்பவுள்ள இலைகளைக்கொண்டு புகைப்படங்களும் பிடிக்கலாம். இத்தகைய இலைகளுள்ள செடிகள் நிழல் நிரம்பின இடங்களில்தான் காணப்படும். இந்தக் கண்ணாடிகளால் செடிகளுக்கு இரண்டு வித உபயோகங்கள் உண்டு. இவை வெளிச்சத்தை இலைகளுள் கொண்டு போக, அவ்வெளிச்சத்தின் உதவியால் ஆகாயத்தில் எங்குக் கரியமில வாயு இருக்கின்றது என்று கண்டுபிடித்து அவைகளைக் கிரஹித்துச் செடிகள் தின்கின்றன. அது மட்டுமல்ல. இவைகளின் ஒத்தாசையால் செடிகள் இருட்டான இடங்களையும் வெளிச்சமுள்ள இடங்களையும் அறிந்து அவைகள் பக்கமாகத் திரும்பி வளர்கின்றன. இவ்வாறு வளர்வதால் அவைகளுக்குக் கரியமிலவாயு வேண்டிய மட்டும் கிட்டுகிறது. இதற்கு உதாரணமாகத் தென்னை மரங்களைக் கவனியுங்கள். அவைகளில் சில நேராகவும், சில சாய்வாகவும் வளருகின்றன. அவைகள் சாய்வாக வருவதன் காரணம் வெளிச்சம் நோக்கிப்போவதே யாகும். அப்பொழுதே அவைகளுக்கு நிரம்ப கரியமில வாய கிட்டும். இக்காரணங்கொண்டுதான் தோட்டங்களில் செடிகளை அடர்த்தியாகப் பயிராக்கக்கூடாது என்று விவசாயிகள் சொல்லுகிறார்கள்.



4 - OCT 1930




# முக்கூடற்பள்.

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.)

அழகக் குடும்பனது ஆணையை யேற்று அழகர் வயலில் நாற்று முடியை நன்றாய்ப் பதித்துப் பணிசெய்த பள்ளியாது ஊக்கம் பாராட்டத் தக்கதாகும். மேகத் தடுக்குப்போல் தலைச் செருக்கும், முல்லை அடுக்கும்போல் பல் நெருக்கும், வஞ்சிக் கொடியைப்போல் இடையும், இளம்பிடியைப்போல் நடையும் அமைந்த குருந்தி யென்னும் பள்ளி விரும்பிப் பணிசெய்த பான்மையைப் பள்ளன் கண்டு வியந்தான்.

"படைகொண்டே வருகரனையும்—பொரு
விடையம்சேர் திரிசிரனையும்
பண்டுமுடித்த கணையினார்—குகன்
கண்டுபிடித் ததுணையினார்
குடைகுன்றாய் பசுக் கிடைநின்றார்—முக்
கூடலழகர் வயலுள்ளே
கொண்டாடிக் கொண்டு நடச்செய்தே—இன்று
கண்டோ மென்ன புதுமையே
துடையென்றால் வாழைத் தண்டைப்போல்—விழிக்
கடையென்றால் கணை இரண்டைப்போல்
செருக்கென்றால் மேகத் தடுக்குப்போல்—பல்
நெருக்கென் றால்முல்லை யடுக்குப்போல்
இடையென்றால் வஞ்சிக் கொடியைப்போல்—வரு
நடையென்றால் இளம்பிடியைப்போல்
இருந்த சாயலுக்கிப்பால்—குருந்தி
திருந்தின ளடிப்பள்ளீரே"

என்று பள்ளுக்கவிஞர் அமைத்த நடுகைப் பாட்டில் முக்கூடல் அழகர் பெரு

மையும், குருந்தியின் திருந்திய பணியும் குன்றாதிலங்கக் காணலாம். கானகத்தில் கடுஞ்சினத்தோடு எதிர்த்த கரனையும், விரிசினத்தோடு எதிர்த்த திரிசிரனையும், வெஞ்சின வாளியால் அழித்த அஞ்சன வண்ணனை "பண்டு முடித்த கணையினு"னென்று பள்ளன் போற்றும் முறை புதியதோர் அழகு வாய்ந்ததாகும். இவ்வாறு அறத்திற்குப் பகையா யமைந்த அரக்கரைப் பண்டு முடித்த கணையாளனுய கமலக் கண்ணனே குகன் கண்டுபிடித்த துணையானாகை விளங்கினுனென்று குடும்பன் கூறுமுறை கனிந்த நயம் சான்றதாகும். இன்னும் குற்றமற வாழ்ந்த கோவலரைக் காக்குமாறு கோவர்த்தன கிரியைக் குடையாய் நிறுத்திய கண்ணனது பெருமையை "குடைகுன்றாய்ப் பசுக்கிடை நின்றார்" என்று பள்ளன் பண்புறப் புகழ்ந்து போந்தான். இவ்வாறு நல்லோர்க்குத் துணையாகவும் அல்லோர்க்குப் பகையாகவும் அமைந்த அழகரது திருவயலில் அங்குமிங்கும் நடந்து ஆர்வமுறப் பணிசெய்த பள்ளியின் நடையையும், இடையையும், தொடையையும், விழிக்கடையையும் கவிஞர் வியந்து எழுதும் முறை அறிந்து மகிழத்தக்கதாகும்.

இன்னும் அழகர் வயலில் பள்ளியர் நாற்றுமுடியை அலைத்து நடும்பொழுது பணிதீர்ந்த பள்ளர்கள் வடித்த கள்ளை வயிறாக்குடித்து மயக்கமும் தியக்கமும் எய்தி, வரம்பிற் சாய்ந்து கிடந்த கோலத்தைப் பள்ளன் வாயிலாக எடுத்துரைக்கும் கவிஞரது மொழிகள் பண்பு வாய்ந்தனவாம்.

"கடிக்கும் அரவில் நடிக்கும் இறைவர்
கஞ்சனுர்க் கொரு நஞ்சனுர்
கடையும் அமுதை உடையும் திரையில்
காட்டியண் டருக் கூட்டினுர்
அடிக்கு ளடங்கும் பிடிக்கு முதல்வர்
அழகர்முக் கூடல் வயலுளே
ஆடிப் பாடி நாற்று முடியை
அலைத்துக் குலைத்து நடச்செய்தே
வடிக்கும் மதுவைக் குடிக்கும் மாசி
மயக்கமும் பெரு தியக்கமும்
வரம்பிற் பாய்ந்து பாம்பிற் சாய்ந்து
வாட்டமும் முகக் கோட்டமும்
துடிக்கும் இதழைக் கடிக்கும் எயிறும்
சோர்ந்து விரிந்த கூந்தலும்
தொடையும் நெகிழ்ந்த உடையும் கிடந்த
கிடையும் பாரும் பள்ளீரே"

என்று பள்ளுக் கவிஞர் அருளிய கவியில் அழகர் பெருமையும் மதுவுண்ட மள்ளர் சிறுமையும் ஒருங்கே இலங்கக்காணலாம். கடுநிறைந்த நாகத்தை வென்று அதன் தலையில் காளிங்க நடனம் புரிந்த கண்ணனை "கடிக்கும் அரவில் நடிக்கும் இறைவன்" என்று கவிஞர் வியந்து புகழ்ந்தார். மாதுலனை

" இருந்தகால் மூதேவி, நடந்தகால் சீதேவி "



யும் எதிலனுகிய வஞ்சக் கஞ்சனை வதைத்த கண்ணனை "கஞ்சனுர்க் கொரு நஞ்சனுர்" என்று கவிஞர் செஞ்சொற்களால் புகழ்ந்து போந்தார். இன்னும் அலைகடலில் எழுந்த அமுதை அண்டருக்கு அருத்தி அவரை அமரராக்கிய அருமையை கவிஞர் அருமொழிகளால் புகழ்ந்து போற்றினுர். மூவுலகும் ஈரடியால் அளந்து மாவலி மன்னனை முறையாய் முடித்த முதல்வனது பெருமையை "அடிக்கு ளடங்கும் படிக்கு முதல்வன்" என்று கவிஞர் நயம்படப் புனைந்து போந்தார். இத்தகைய பெருமை வாய்ந்த அழகர் திருவயலில் அருதி மருதி ஆதிய பள்ளியர் நாற்றுமுடியை நன்றாய்ப் பிரித்து நடும்பொழுது பணிதீர்ந்த பள்ளன் மதிமயங்கி, பல்லாலே இதழதுக்கிக் கிடந்த பான்மையை கற்போர் கண்ணெதிரே நிறுத்திய பள்ளுக் கவிஞரது பாநயம் அறிந்து பாராட்டத்தக்கதாகும். வாட்டமுற்ற உடலும், கோட்டமுற்ற முகமும், விரிந்த தலையும், நெகிழ்ந்த உடையும், மதுவுண்ட மாந்தரது மெய்க்குறியாகக் கவிஞர் எழுதிய முறை அறியத்தக்கதாகும். கள்ளுண்டு களிக்கும் கயவரது கீழாய நிலையை உணர்த்தும் வாயிலாக மாந்தரை நல்வழிப்படுத்தக் கருதும் கவிஞரது மனநலம் இக்கவியிற் கனிந்து இலங்குவதாகும்.

இன்னும் மதுவின் வெறியால் மதிமயங்கிய மற்றொரு பள்ளனது செயலையும் பள்ளுக் கவிஞர் பரந்த சொற்களால் பாரித்துரைக்கின்றார்.

"வெள்ளானைக் கிறை வத்துவார்—ஒரு
புள் ளாடற் கொடி யேற்றுவார்
வேதர் பரவும் பாதர் வைகுண்ட
வீடா னமுக் கூடலார்
உள்ளூர்ப் பண்ணை வயலுள்ளே—தெற்கு
வெள் ளூர்ப்பள்ளி வெயிலும்
உளக்குடிப் பள்ளி உடைச்சியும்—மேல்
களக்குடிப் பள்ளிச் சடைச்சியும்
தள்ளாடிக் கொண்டு நடச்செய்தே—பள்ளர்
துள்ளாடிக் கூட்டமிடச் செய்தே
தையிலிமகள் பொய்யிலி கிட்டச்
சாடிப் பெரியான் ஓடிப்போய்
கள்ளால் உத்தர மீறியே—நிலை
கொள்ளா மற்றடு மாறியே
காப்பைக் காட்டென்று கையைப் பிடிக்கும்
கோப்பைப் பாரும் பள்ளீரே"

என்று எழுந்த பள்ளுக் கவியில் சாடிக்கள்ளை நாடிக் குடித்த பள்ளனது மயக்கம் பளிங்குபோல் விளங்கக் காணலாம். உள்ளூர்ப் பண்ணை வயலிலே உளக்குடிப் பள்ளியும் களக்குடிப் பள்ளியும், மற்றைய பள்ளியரும் பணிசெய்யும் பொழுது மயக்கும் கள்ளை மாந்திய ஓர் பள்ளன் பொய்யிலி என்னும் பள்ளியை நோக்கி ஓடிப்போய் காப்பைக் காட்டுமாறு கையைப் பிடிக்கும் கோலத்தைக் கவிஞர் எழுதிக் காட்டிய முறையில் கள்ளின் கொடுமை கலக்கமற விளங்குவதாகும். மாந்தரது அறிவை மயக்கி நரம்பை முறுக்கி பித்தர்போலவும் பேதையர்போலவும் இயக்குந்தன்மை மதுவினிடம் அமைந்

" எத்தால் வாழலாம்—ஒத்தால் வாழலாம் "

திருத்தலாலேயே "தேட்கடுப்பன்ன நாட்படுதேறல்" என்று முன்னோர் கள்ளின் தீமையைக் குறிப்பாராயினர்.

இன்னும் முக்கூடல் அழகர் வயலில் பணிசெய்த மற்றொரு பள்ளன் பழங்கள்ளை மாந்திப் போதையுற்று வயலில் தட்டிமுட்டி விழுந்து மானமழிந்த நிலையினை எழுதப்போந்த கவிஞர்,

"செழுந்திருப்பதம் தொழும்தவத்தினர் சித்தமுருகி நித்தமும்
தேடி வரும்முக் கூடலழகர் சித்தாற்றுக் கால்பத்திலே
உழுந்தொளிப்படு பழந்தொளிப்புனல் உடைத்துமுடங்க நடச்செய்தே
ஒண்டி வயிற்றுப் பண்டிப்பானை தொண்டிக் கள்ளை மண்டியே
எழுந்து நெட்டையன் கழுந்து மொட்டையன் இருவக்குடும்பன் மரு
ஈச்சக் குடும்பன் பாச்சக் காலன் எட்டிமுட்டித் தட்டித்தன் [மகன்
கொழுந்தி பக்கத்தில் விழுந்ததுக் கவள்கூடப் பிறந்தமாடன்போய்
கொண்டையைப்பிடித் திழுக்குறான் வம்புச் சண்டையைப் பாரும்
[பள்ளீரே"

என்று சேரியில் வழங்கும் இயற்கைச் சொற்களால் எழுதி யமைத்தார். மும்மைசால் உலகுக்கெல்லாம் முதல்வனாய முக்கூடல் அழகரது பெருமை அறிந்து சித்தமுருகி நித்தமும் செழுந்திருப்பாதம் தொழுந் தவத்தினரது செம்மையையும், அந்நகரிலேயே பண்டிப் பானையிலமைந்த தொண்டிக்கள்ளை மண்டிப் பித்தர்போல் நடக்கும் பேதையர் நிலையையும் முன்பின்னாக எடுத்துரைத்த கவிஞரது சொல்லின்சுவை அறிந்து இன்புறத்தக்கதாகும். புற்றுமாய் மரமாய் வற்றிக்கிடந்து நற்றவம் புரியும் விழுமியோர் வாழும் நகரிலேயே கல்லாக்கயவர் கள்ளுண்டு களித்து இருமைப் பயனையும் இழந்து நின்ற நிலை உலகியலை இனிது உணர்த்துவதாகும்.

இவ்வாறு பண்ணையார் வயலிற் பணிசெய்து கரையேறிய பள்ளியர் கும்மியடித்து மகிழுங்கோலம் கற்போர் கருத்தைக் கவர்கின்றது. கழுத்திலணிந்த அணிகள் குலுங்கவும், காதிலிசைந்த பணிகள் அசையவும், அங்குமிங்கும் செங்கை நீட்டிப் பள்ளியர் கும்மியடித்த பான்மையை,

"புங்கவர் தமிழ்ச்சங்க மேறிய புலமைத் தலைமை அழகனார்
பொருனையாற் றணைபெருகும் கார்ப்புனல் பொருத மருதூர் வயலுளே
தங்கள் வேலைநாற்றுக்கும் பள்ளர் அங்கலாய்க்கும் சோற்றுக்கும்
தாமதப் படவே மதத்தொன்றை காட்டிமேட்டி கூட்டமாய்
எங்கும் ஆர்ப்பொலி பொங்கவே அதற்கெதிர் சங்கொலி அதிரவே
இலங்கு மணிகள் குலுங்கவே காதில் இசையும்பணிகள் அசையவே
அங்குமிங்கும் செங்கை நீட்டி அருதியும் சின்ன மருதியும்
அரியாளும் கட்டைப்பெரியாளும் கும்மி அடிப்பதைப் பாரும் பள்ளீரே"

என்று பள்ளுப் புலவர் பண்புறக் கூறிப்போந்தார். அழகர் வயலிற் பணிசெய்த மருதியும் அருதியும் அரியாளும் பெரியாளும் அகமகிழ்ந்து கும்மியடித்தாரென்றும் அவ்வாறு அங்குமிங்கும் ஆடி வருகையில் அவர் புனைந்திருந்த அணிகளும் பணிகளும் அழகுற அசைந்து ஆடின என்றும் கவிஞர் எழுதிப் போந்தமுறை இன்பம் பயப்பதாகும்.

" ஒரு ஊருக்கு ஒரு வழியா ?"

# தமிழ்மொழியின் பெருமை

(o)

(போ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம். ஏ., பி. எல்.)

தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவ ளென்றுண ராத
இயல்பின ளாமெங்கள் தாய். (பாரதி)

பாஷாபிமானம் மிகுதியாய்ப் படைத்த ஜனங்களில் தமிழ் மக்களே தலைசிறந்தவராவர். அபிமான மிகுதியால் அவர்கள் தங்களுடைய தாய் மொழியைப் புகழ்வதில் சலிப்படைவதிலர். தம் மொழியே தரணியில் தலையாயது என்று சாதிப்பர். இவர் புகழ் உண்மையானது தானா அல்லது வெறும் தற்புகழ்ச்சியா?

தமிழே தலைசிறந்த பாஷை என்பதற்குத் தக்க ஆதாரங்கள் உளவா என்று வினவினால் பல காரணங்கள் பகர்வர். அவற்றை ஆராய்ந்தால் அவை புராணக் காரணங்கள் சரித்திரச் சான்றுகள் என இருவகையாய்ப் பிரியும்.

அவற்றுள் முதலில் காணப்படும் புராணங்கள் புகலும் புகழுரைக் காரணங்களை ஆராய்ந்தோம். அவை உண்மை என்று ஒப்புக்கொள்ளும் தன்மை உடையன அல்ல என்று கண்டோம். இக்காலத்தவர் அறிவு ஆராய்ச்சியில் நம்பிக்கை யுள்ளவர் யாரும் அவைகளை நம்ப மறுப்பர். ஒருவேளை நம்பினாலும் அவை ஒரு மொழியின் மாண்பை ஸ்தாபிக்க வன்மை பெறா என்று கூறுவர்.

ஆனால் தமிழ் மக்கள் கூறும் சரித்திர சம்பந்தமான காரணங்களைப் பொய் என்று யாரும் எளிதில் புறக்கணித்துவிட இயலாது. சரித்திரக் காரணங்கள் புராணக் கூற்றுக்களைப்போல கட்டாயம் பொய்யாகவே இருக்க வேண்டு மென்பதில்லை. அவை உண்மையாகவும் இருக்கக்கூடும். ஆனால் அக்காரணங்கள் தமிழ்மொழியின் தலைமையை நிலைநிறுத்த முடியுமா என்பதே கேள்வி. இக்கேள்வி சம்பந்தமாய் ஆராயப் புகுமுன் சரித்திரக் காரணங்கள் எவை, அவற்றில் உண்மைக்குரிய சான்றுகளும் எவை என்று அறிந்துகொள்ளுதல் அவசியம்.

தமிழ் மக்கள் தங்கள் தாய்மொழி மாண்பிற்கு சரித்திர பூர்வமாய்க் கூறும் காரணங்கள்:—

(1) தோன்றியகாலத் தொன்மை
(2) பயின்றநில விஸ்தீரணம்
(3) தோற்றுவித்த மொழிகளின் தொகை

" கடன் இல்லாத கஞ்சி கால்வயிறு போதும் "

(4) இன்றுகாறும் இறவாது இலங்கும் இளமை
(5) உலகிற்கு எழுத்தறிவித்தமை
(6) தனிக்குழு அரசு

ஆகியவைகளாகும். அவற்றுள் தொன்மைக்குரிய சான்றுகளை முன் வியாசங்களில் விவரித்துள்ளேன். தமிழ்மொழி மிகப் பழைய காலத்தில் தோன்றியிருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். வாசக நேயர்களும் அதை வாஸ்தவம் என்று அங்கீகரிப்பர் என்று நம்புகிறேன்.

ஆதிகாலத்தில் தமிழ் மொழி இப்பொழுதுபோலல்லாது அதிக விஸ்தீரணமுள்ள நிலப்பரப்பில் பயிலப்பட்டு வந்தது என்பதற்குரிய சான்றுகளில் சில இதற்குமுன் எழுதிய கட்டுரையில் கூறினேன்.

## தென் குமரி நாடு

இப்பொழுது தமிழ் வழங்கும் நாடு திருவேங்கடம் குமரிமுனை இரு கடல் இவற்றிற்குள் அடங்கிய சுருங்கிய தேசமாகும். ஆனால் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் குமரி முனைக்குத் தெற்கே சுமார் ஏழாயிரம் மைல்கள் தூரம்வரைக் கடலுக்குப் பதிலாக நிலமே இருந்தது என்றும் அந்நிலம் மேற்கே ஆப்பிரிக்கா கண்டத்தை அடுத்து நிற்கும் "மடகாஸ்கர்" தீவுமுதல் கிழக்கே "சந்தா"த் தீவுகள் வரை பரவி இருந்தது என்றும் அவ்வளவு நீண்டு அகன்று கிடந்த நிலமுழுவதிலும் தமிழ் மொழியே பேசப்பட்டு வந்தது என்றும் முன் எழுதிய வியாசத்தில் அறிந்தோம். ஆனால் தமிழ் பயிலப்பட்டு வந்த பூமி அதோடு அடங்கிவிடவில்லை.

## வட இந்தியா

இப்பொழுதுள்ள கன்னியாகுமரி முனைக்குத் தெற்கே பல ஆயிரக் கணக்கான மைல்கள் தூரம் பரவியிருந்ததுபோலவே தமிழ் மொழி வட எல்லையாகிய திருவேங்கட மலைக்கு வடக்கிலும் பல ஆயிரக்கணக்கான மைல்கள் தூரம் பரவியிருந்தது என்பதற்குப் பல சான்றுகள் உள. அவற்றுள் சில இவண் தருகின்றேன்.

## திராவிடர் விஜயம்

ஆரியர்கள் இந்தியாவுக்கு வருமுன் இங்கே வசித்துவந்த ஜாதியாரில் முக்கியமானவர்கள் திராவிடர் ஆவர். திராவிடர்கள் தாம் உலகில் தோன்றிய மனிதர்களில் ஆதிவகுப்பார் ஆவர் என்றும் அவர்கள் முதலில் வசித்து வந்தது முற்காலத்தில் குமரிநாடு (லெமூரியா) என்று வழங்கிவந்து இப்பொழுது குமரிமுனைக்குத் தெற்கே கடலில் ஆழ்ந்து கிடக்கும் அகன்ற பெரிய நிலத்திலேயே என்றும், அங்கிருந்துதான் அவர்கள் அந்நிலம் கடலால் கொள்ளப்பட்ட பொழுது வடக்கிலும் இதர திசைகளிலும்போய் வசிக்கலாயினர் என்றும், அப்படி வசிக்க நேரிட்ட காலத்தில் அத்திராவிடர் இந்தியாவின் வட எல்லையாகிய இமயமலை வரை பரவியிருந்தனர் என்றும் சில சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இவர் கூற்றை மறுத்து வேறு சில ஆசிரியர்கள் திராவிடர் தெற்கிலேயிருந்து இந்தியாவிற்குள் புகுந்தவர் அல்லர்; அவர்கள் வடமேற்குக் கணவாய்கள் வழியாகவே பஞ்சாப் பிரதேசத்தில் புகுந்து இந்தியா முழுவதும் கன்னியா குமரிவரை பரவி வந்தவர் ஆவர் என்று கூறுவர்.



## ஆரியர்க்கு முன் தமிழ்

இவ்விருவர் அபிப்பிராயங்களில் எவருடையது சரியானது என்று இப்பொழுது நாம் நிர்ணயிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் கூறுவதிலிருந்து ஒன்று மட்டும் நாம் நிச்சயமாய் அறிந்துகொள்ளக் கிடக்கின்றது. அதாவது ஆரியர் வருமுன் இந்தியாவில் பஞ்சாப் முதல் குமரிவரை வாழ்ந்து வந்தவர் திராவிடரே என்பதாகும். ஆகவே ஆரியரும் அவருடைய தாய்மொழியாகிய சமஸ்கிருதமும் இந்தியாவில் காணப்படுமுன் காணப்பட்ட பாஷை திராவிடர்களின் மூல பாஷையாக ஆசிரியர்கள் அனைவராலும் நிச்சயிக்கப்பட்டுள்ள தமிழ்மொழியே யாகும் என்பது வெளிப்படை.

ஆரியர் இந்தியாவிற்கு வந்தது சுமார் 5-ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னராக இருக்கலாம் என்று ஆசிரியர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இன்னும் சிலர் அவ்வருஷத் தொகை அற்பம், அதற்கும் பல்லாயிர வருஷங்களுக்கு முன்னராகும் என்று வாதிப்பர். எவர் கூறுவது உண்மையாயினும் ஆகுக. ஆரியர் வரும் முன்னர் தமிழ்மொழி இந்தியநாடு முழுவதும் வியாபித்திருந்தது என்பது மட்டும் திண்ணம். அங்ஙனம் பரவியிருந்த காலத்தின் தொன்மையைக் கணித்தறிதல் கஷ்டமாகும்.

ஆரியர் வருமுன் தமிழ் மொழியே பஞ்சாப் முதலிய வட இந்திய மாகாணங்களிலும் பேசப்பட்டு வந்தது என்பதற்கும், ஆரியர் வந்து திராவிட மக்களை வென்று தென்னாட்டிற்குத் துரத்திவிட்டு வடநாட்டில் வசித்து வந்தனர் என்பதற்கும், அப்படிச்செய்த நாளில் ஆரியர் திராவிடரின் பாஷைப் பதங்களில் பலவற்றைத் தங்கள் தாய்மொழியாகிய சமஸ்கிருதத்தோடு சேர்த்துக்கொண்டனர் என்பதற்கும் சரித்திர ஆசிரியர்கள் சான்றுகள் கூறுகின்றனர்.

இப்பொழுதும் பஞ்சாபில் வடமேற்குச் சிந்துநதிச் சமவெளியில் ஒரு ஜாதியாரும், விந்திய மலையின் கிழக்கு முனையில் உள்ள "சோட்டா நாக்பூர்" என்னும் பிரதேசத்தில் ஒரு ஜாதியாரும் வசித்துவருகின்றனர். அவர்கள் பேசும் பாஷை தமிழ்மொழியின் சிதைவே என்று ஆசிரியர்கள் நிச்சயிக்கின்றனர்.

தவிர இப்பொழுது வடநாட்டில் பேசப்படும் பல சுதேச பாஷைகளும் ஸம்ஸ்கிருதத்தையே தாயாகக் கொண்டிருப்பினும் தமிழ் மொழிகள் பல கலந்திருக்கவும் காணப்படுகின்றன. அக் கலப்புக்குக் காரணம் முன்னாளில் தமிழ் மொழி வடநாடு முழுவதும் வழங்கப்பட்டு வந்ததே யாகும்.

ஆகவே இதுவரை கூறியவாற்றால் தமிழ்மொழி குமரிக்குத் தெற்கே பயிலப்பட்டது போலவே வேங்கடத்துக்கு வடக்கேயும் பயிலப்பட்டது என்பது விளங்கும். முன் காலத்தில் இப்பொழுதுள்ள இந்தியா முழுவதும் இமயம் முதல் குமரி வரை தமிழ் வழங்கி வந்தது என்று கூறினால் தவறாகாது.

அம்மட்டோ தமிழ்மொழி பேசப்பட்டது இந்தியாவில் மட்டுமன்று. இந்தியாவிற்கு வெளியிலும் தமிழே முன்காலத்தில் பயிலப்பட்டது என்றும் தமிழ் மக்கள் கூறுகின்றனர். அவ்விஷயம்பற்றி அடுத்த வியாசத்தில் ஆராய்வேன். (தொடரும்.)

---

" கபடச் சொல்லினும் கடிய சொல்லே மேல்."

# தேகப் பயிற்சி.

N. நஞ்சப்பா.

தேகப்பயிற்சி என்பது உடலிற்குப் போதிய அப்பியாசம் கொடுத்து வருதல். நமக்கு காற்று, உணவு, உடை முதலியன எவ்வளவு அவசியமோ, அதுபோலவே, சுகத்தை விரும்பும் ஒவ்வொருவருக்கும் தேகப்பயிற்சி இன்றியமையாதது. ஒரு நாளில் சில மணி நேரமாவது தேகப்பயிற்சிக்கென ஒத்தி வைத்தல் அவசியமாகும். தேகப் பயிற்சியினால் உடல் உரம்பெற்று ஆரோக்கிய நிலை அடைகின்றது.

நமது தேகத்தினின்று சில பொருள்கள் கழிந்து கொண்டே இருக்கின்றன. அவற்றை நிறைவிக்க நாம் ஆகாரத்தை உட்கொள்ளுகிறோம். அவ்வாகாரம் பல மாறுதல்களடைந்து இரத்தமாக மாறுகின்றது. இரத்தம் சுத்தமாக இருக்கும் வரையில் ஒரு நோயும் அணுகுவதில்லை. நோயின் காரணம் இரத்தத்தின் மாறுபாடே. ஆகையினால் உடலினுள்ளிருக்கும் அசுத்தத்தை அவ்வப்போது வெளியேற்றப்பட வேண்டியது அவசியம்.

இவ்வசுத்தம் நாம் மூச்சு விடுவதாலும், வியர்வை வெளிப்படுவதாலும் வெளியேறுகின்றது. தேகப்பயிற்சி செய்யுங்காலத்து, விரைவாக மூச்சுவிடுவதாலும், வியர்வையாலும், உடலினுள்ளிருக்கும் அசுத்தம் தீவிரமாக வெளிப்படுகின்றது. இரத்த ஓட்டம் அதிகரிக்கின்றது. தேகத்திலுள்ள பல பாகங்களுக்கும், இரத்தம் விரைவாக செல்லுகின்றது. அவ்விடத்திலுள்ள அசுத்தங்களைச் சேர்த்துக் கொண்ட இரத்தம், ஹிருதயத்தை அடைகின்றது. நாம் உட்கொள்ளும் காற்று உட்சென்று அவ்வசுத்தத்தை ஏற்றுக் கொண்டு வெளிப்படுகின்றது. இதனால் தேகாரோக்கியம் அதிகரிக்கின்றது. தேகப்பயிற்சி செய்யாததால் உடலினுள்ளிருக்கும் அசுத்தம் உடனுக்குடன் வெளிப்படுவதில்லை. இரத்த ஓட்டம் குறைகின்றது. தேகத்திற்கு அசௌக்கியம் ஏற்படுகின்றது. இதனால் தேகப் பயிற்சியின் அவசியம் தெற்றென விளங்கும்.

தேகப்பயிற்சியின் பூரண நன்மையையும், அடைய விரும்புகிறவர்கள் கவனிக்க வேண்டிய சில முக்கியமான விஷயங்களை கீழ்க் கூறுவாம்.

## காலம்.

தேகப்பயிற்சி செய்வதற்கு ஏற்ற காலம் காலை, மாலை நேரமே. மாலைக் காற்று மித சீதோஷ்ணமுள்ளது. அப்போது தேகப்பயிற்சி செய்வது தேகத்திற்குப் பலனைக் கொடுப்பதாகும். அதிக குளிர்ச்சியான காலத்திலும்

" சூடுண்ட பூனை அடுப்பங்கரை சேராது "



வெப்பம் பொருந்திய காலத்திலும், தேகப்பயிற்சி செய்வதனால் தேக சிரமமும், காற்றினால் பாதகமும் ஏற்படும்.

சாப்பிட்டவுடன் தேகப்பயிற்சியைக் கைக் கொள்ளுதல் அபாயகரமானது. குறைந்தது சாப்பிட்ட ஒரு மணி நேரஞ் சென்ற பின்பே தேகாப்பியாசம் செய்ய முற்படல் வேண்டும். இன்றேல் தேகத்தின் இயந்திரங்களுக்கு அதிக வேலை ஏற்பட்டு அசௌக்கியம் ஏற்படும். தேகப்பயிற்சிக்கு முன் போதுமான ஓய்வு பெற்றிருக்க வேண்டும்.

## இடம்.

தேகப்பயிற்சி செய்வதற்கு நல்ல காற்றோட்டமுள்ள இடமே ஏற்றது. ஜன நெருக்கமுள்ள இடங்களிலும், அசுத்தமான இடங்களிலும் தேகப்பயிற்சி செய்வது கெடுதியையே உண்டாக்கும்.

## உடை.

தேகப்பயிற்சி செய்யும்போது சீக்கிரம் வியர்வையைக் கிரகித்துக் கொள்ளுகின்ற உலன், ட்வில் முதலியவைகளினாலாகிய உடைகளை அணிந்துகொள்ள வேண்டும். அவை, வெளிப்படுகின்ற வியர்வையைச் சட்டெனக் கிரகித்துக் கொண்டு நிதானமாக வெளிவிடுகின்றன. இதனால் உஷ்ணமடைந்த தேகம் கிரமமாகத் தன்னிலை யடைகின்றது.

மற்றும், தேகப்பயிற்சி செய்தவுடன், உடைகளை நீக்குதலும், குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதும் கூடாவாம். அவ்வாறு செய்வதனால், தேகம் திடீரென்று குளிர்ந்து ஜலதோஷம் முதலிய நோய்களுக்கு ஆளாக இடம் ஏற்படுகின்றது,

## முறை.

தேகப்பயிற்சி செய்பவர் தேர்ந்த ஆசிரியர் ஒருவருடைய ஆலோசனையின்படி செய்வது உசிதமானது.

தேகப்பயிற்சி செய்யும்போது மூக்கின் வழியாகவே சுவாசிக்க வேண்டும். வாயின் மூலமாய் சுவாசிப்பதனால் காற்றில் கலந்துள்ள தூசு முதலிய அசுத்தங்கள் தேகத்திற்குள் செல்லுகின்றன. மூக்குக் கீழ்நோக்கி அமைக்கப்பட்டிருப்பதனால், உரோமங்கள் அடர்ந்திருப்பதனாலும் அசுத்தம் நீங்கிய காற்றே உட்செல்லுகின்றது. மேலும் மூக்கினால் சுவாசிப்பதனால் சீக்கிரம் களைப்பு தோன்றாது.

உடம்பின் பல்வேறு பாகங்களும் உரம்பெறத்தக்கப் பலவிதமான அப்பியாசங்களைக் கைக்கொள்ளுதல் வேண்டும். தண்டால் எடுத்தல், குஸ்தி பழகுதல், ஆயுதம் பயிலல், சவாரி செய்தல் முதலிய விளையாட்டுகள் தேகத்திற்குப் பலம் கொடுக்கக்கூடிய சிறந்த விளையாட்டுகள். நாள் முழுதும் உட்கார்ந்து வேலை செய்யும் ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள் ஆகியவர்களுக்கு நடத்தல் மிகவும் சிறந்த அப்பியாசம். குறைந்தது ஒரு நாளில் பத்துமைல் தூரமாவது நடக்க வேண்டுமென காந்தி கூறியிருக்கிறார். நடக்கும் பொழுது

" அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது "

இயற்கை விநோதங்களைக் கவனித்துச் செல்வது மனதிற்கு உறசாகத்தைக் கொடுக்கும். இவ்வாறு அவரவர்களும் தங்களுக் கேற்ற தேகாப்பியாசங்களைக் கையாடி வந்தால், தேகம் நல்ல நிலைமையில் நின்று சுகவாழ்வைக் கொடுக்கும்.

### அளவு.

தேகப்பயிற்சியும் மிதமாகவே செய்தல் வேண்டும். அளவுக்கு மீறிய தேகப்பயிற்சி நன்மைக்கு மாறாகத் தீமையே பயக்கும். தம் உடல் வலிமைக்கேற்ப, தேகப்பயிற்சியை ஆரம்பித்துப் படிப்படியாக அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

தேகப்பயிற்சியின் அவசியத்தை உத்தேசித்தே நமது முன்னோர்கள் ஆங்காங்கு பல சிலம்பக்கூடங்களை அமைத்திருந்தனர். இப்பொழுது அவை அதிகமாகக் காணப்படாவிட்டாலும், தேகப்பயிற்சியின் அநுகூலங்களை அவை தெளிவாக விளக்கி இருக்கின்றன. திறந்த வெளிகளில் உடல் வருந்த உழைக்கும் குடியானவர்கள், நாகரிகமாக காலம் கழிக்கும் நகர வாசிகளைவிட தேகபல முடையவர்களாயிருப்பது தேகப்பயிற்சியின் பயனை நிரூபித்துக் காட்டுகின்றது அல்லவா?

மனோ முயற்சிக்கும், தேகப்பயிற்சிக்கும் மிகுந்த சம்பந்த முண்டென்பது அறிஞர்கள் கொள்கை. நன்றாக தேகப்பயிற்சி செய்து சிறந்த நிலைமையிலிருக்கும் உடலே உரமான மூளையைப் பெறுகின்றது. இதனால் கல்வியில் சிறந்த ஞானம்பெற விரும்பும் சிரோமணிகளும், தேகப்பயிற்சியைக் கைக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

உபயோகிக்கப்படாத யந்திரம் எவ்வாறு துருப்பிடித்துத் தன்னிலை கெட்டுப் பயனற்றுப் போகின்றதோ, அப்படியே தேகப்பயிற்சி செய்யாத தேகமும், வளமை குன்றி பலவித நோய்களால் பீடிக்கப்படும்.

**உங்களைத் தேடிவந்தால்**

தமிழ் மக்களுக்கு ஆனந்தங் கொடுப்பதையே தன் முதற் பெருங் கடமையாகக் கொண்டுள்ள "**ஆனந்தபோதினி**" உங்களைத் தேடிவந்தால் ஏதோ வழி தவறித் தெரியாமல் வந்துவிட்டதென்று நினைத்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கை நலத்தில் சிரத்தைகொண்டே உங்களைத் தேடி வருகிறது என்று நினையுங்கள். உங்கள் உதவி எல்லாம் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரே ரூபாய்தான்.



# அபிஸாரிகா வஞ்சிதகம்

(ஒரு நாடகம்)

R. ராமமூர்த்தி ஐயர், எம். ஏ. (ஆனர்ஸ்)

**வ**டமொழியில் நாடகங்கள் கணக்கின்றி இருந்தன. ஞானக் களஞ்சியமான புராதன புஸ்தகங்களை நாம் ஊக்கத்துடன் உற்று நோக்குங்கால், நமது முன்னோர்கள் எழுதிய நாடகங்கள் கணக்கின்றி இருந்தன என்பது சட்டெனப் புலப்படும். கி. மு. 150-வது வருடத்திலிருந்து 19-வது நூற்றாண்டு வரையில் பல்லாயிரக் கணக்கான கவிமணிகள், நீதி நெறிகளை நிகரற்றபடி புகட்டுபவைகளும், காப்பிய ரஸத்தால் கொந்தளிப்பவைகளும், இயற்கையின் வசீகரமான வடிவழகை இன்பு சுரக்க வருணிப்பவைகளுமான பல சிறந்த நாடகங்களை இயற்றினார்கள். ஆனால் அவைகள் யாவும் இப்பொழுது காணப்படவில்லை. சிலவற்றைப் பெயர்களால் மாத்திரம் அறிகின்றோம். சிலவற்றைக் கூறப்பட்ட உதாஹரணங்களால் ஊகிக்கின்றோம். மற்றும் சிலவற்றை, அவைகளைப் பற்றிய சிறப்புப் பாயிரங்களால் அனுமானஞ் செய்து கொள்கின்றோம். துளிர்த்துச் செழித்து உவமையற்றுப் பார்த்த பெருமையோடிருந்த கவிச் செல்வம் இப்பொழுது ஒளி மழுங்கி ஆதரிப்பாரின்றி அன்பற்றுச் சீர்குலைந்து கிடக்கின்றது. என்னே காலத்தின் கொடுமை!

மேற்கூறியவாறு, காலத்தின் கோலத்தால், கவனிப்பாரற்று நசித்துப் போன ரமணீயமான நாடகங்களில் "அபிஸாரிகா வஞ்சிதகம்" என்ற நாடகமும் ஒன்றாகும். விசாகதத்தர் என்ற கவிஞர் இதனை யியற்றியவராவர். ராஜதந்திரம் நிரம்பியதும் வீரரஸ விளக்குமான "முத்திரா ராக்ஷஸம்" என்ற நாடகத்தைக் கேட்போர்க்கும் படிப்போர்க்கும் அளவற்ற இன்பை அபரிமிதமாக அளிக்கும்படி இயற்றியவரும் அவரே யாவர். சில காலம் யாவரும், இவரால் இயற்றப்பட்ட நாடகம் ஒன்றே என்று—ஒருமிக்க இசை பாடுவது போல் கூறி வந்தார்கள். ஆனால் இவ்வபிப்பிராயத்தை, வடமொழியில் ஒப்பற்ற வல்லமையுள்ள பீடர்ஸன் என்ற பெரியார் மாத்திரம் மாசற்ற காரணங்களால் மறுத்துக் கண்டித்துவந்தனர். எப்பெயர் பூண்ட நாடகம் விசாகதத்தால் இயற்றப்பட்டது என்பது மாத்திரம் இவ்வறிஞரால் அறியப்படவில்லை. சென்ற வருடம் வரையில் ஸர்வ கலாசாலையில் ஆராய்ச்சி வேலையிலமர்ந்திருந்த யான் இச் சிக்கலான விஷயத்தைப் பற்றிச் சிந்திக்க அவகாசம் ஏற்பட்டது. அரசாங்கக் கையெழுத்துப் புத்தக நிலயத்தில் (Government Manuscripts Library) இதுவரையில் அச்சிடாது காணப்படும் "அபிநவ பாரதீ" "ச்ருங்கார ப்ரகாசம்" என்ற இரு பெரிய நூல்களில், விசாகதத்த

ரால் இயற்றப்பட்ட நாடகங்கள் மூன்றெனக் கூறப்பட்டிருக்கின்றது. அவையாவன :—

"முத்திரா ராக்ஷஸம்"
"அபிஸாரிகா வஞ்சிதகம்"
"தேவீ சந்திர குப்தம்"

"அபிஸாரிகா வஞ்சிதகம்" என்னும் இந் நாடகமானது,

சிருங்காரச் சுவையின் சாங்கமென்றே சொல்லலாம். அடியிற் காணப்படும் இந்நாடகத்தின் கதையே மேற்சொன்ன வாக்கியத்தின் பொருளை உரைபோல் செவ்வனே சீர்தூக்கிக் காட்டும்.

இயற்கை யழகும் செயற்கை யழகும் ஒருங்கே சேர்ந்து உலாவும் உஜ்ஜயினி என்ற பெரும் பட்டினத்தை உதயனன் என்ற அரசன் ஆண்டுவந்தான். கடுந்தவம் புரியும் முனிவர்களுக்குப் பேரின்பத்திற் போல் இவ்வரசனுக்குச் சிற்றின்பத்தில் அடங்காத ஆவல் உண்டு. அழகிய அணங்கென்றால் ராஜ்ய பாரத்தை மந்திரியின்பால் விட்டுப் பெண்ணை நாடிச் செல்வது இப் பூபாலனுக்குப் புதிதல்ல. அரண்மனையில் மனதைக் கவரும் மடவன்னங்கள் மிகுந்திருந்தாலும் மகிபன் மனம் மற்றொரு மடந்தையையே மேவும் மனப்பான்மை பெற்றிருந்தது.

இப் பூபனுக்கு, அவதரித்த ஆண்மைபோலும்—உதித்த உயர்ந்த உலகானுபவம் போலும் — உருவெடுத்த ராஜதந்திரம் போலும் அமைச்சனொருவன் இருந்தான். அவன் யௌகந்தராயணன் என்ற பெயர் பூண்டவன். தன் அரசனது ராஜ்யம் தளராது தழைத்து வட இந்தியா முழுவதும் அவன் ஆட்சிக்குள் அடங்கி அமைதியுடனிருக்க வேண்டுமென்ற விஷயத்தில் அமைச்சனுக்கு அடங்கா ஆர்வமுண்டு. இம்மனோரதம் அல்நாஸ்கரின் மனோராஜ்யம் போன்றதல்ல. ஏனெனில், தளராத மனவுறுதியையும், அதற்கிசைந்த புகலவொணுப் புத்திக் கூர்மையையும், வெற்றிபெற்று ஜெயக்கொடியை நாட்டவல்ல இயல்பையும் உடையவர்கட்கு, எடுத்த முயற்சி ஈடேறுமென்பதில் ஐயமுமுண்டோ! யௌகந்தராயணனும் இறைவனது ராஜ்யப் பெருக்குக்காகப் போரைப் பின்பற்றவில்லை. ஒரே புதல்வியை யுடைய பூபர்களை நயத்தாலும் பயத்தாலும் தனது கோட்பாட்டுக் குட்படுத்தி உதயனனுக்குப் பெண்ணை மணம்புரிந்து கொடுக்குமாறு அவர்களிடம் கடினமொழி கூறிக் கட்டாயப்படுத்துவது இவனது இயற்கைக் குணமாகிவிட்டது.

இவ்விதமாக மணமகள்களாய் வந்த நாரீ ரத்னங்களில் வாஸவதத்தை, பத்மாவதீ என்ற இரு சுந்தரவதனிகளே அரசன் அன்பிற்கு முக்கிய பாத்திரமாக விருந்தார்கள். கணவனது மனதைக் கவர்வதிலேயே மனைவியின் மதி முனைந்திருப்பது சகஜமே. ஆகையால் பத்மாவதியும் வாஸவதத்தையும், உதயனனைத் தமது மோக வலையில் வீழ்த்தித் தமது இச்சைக்கு இசையச் செய்து, பகிரப்படாத அவனது அன்பைத் தாமருந்த வேண்டுமென்று புதிரதப் பிரயத்தனம் செய்து வந்தார்கள்.

" அன்பற்ற மாமிக்குக் கும்பிடுங் குற்றமே "



இப்போராட்டத்தால் அரண்மனையில் பிளவேற்பட்டது. சில பாங்கிமார்கள் பத்மாவதியைச் சேர்ந்தார்கள். மற்றுஞ் சிலர் வாஸவதத்தையை நாடினார்கள். இருதிறத்தாரும் நேரிட்ட சமயத்தில் மன்னன் மனதை மாற்ற முயன்றனர். ஒரு சமயம், வாஸவதத்தையைச் சார்ந்த தாதியொருத்தி, பத்மாவதியை வேந்தன் மனதிலிருந்து விலக்க ஒரு கொடிய சூழ்ச்சி செய்தாள். தன் தலைவியின் தனயனைத் தனிமையான தலத்தில் ஒளித்துவிட்டுப் பொறாமையின் பெருக்கால், "பத்மாவதி வாஸவதத்தையின் புத்திரனைக் கொன்றுவிட்டாள்" என்ற ஓர் அம்பலைப் பரவச்செய்தாள். இவ்வம்பலானது காட்டுத் தீபோல் பரந்து பரவி அலராகிவிட்டது. மன்னனும் கேட்டு மனோதிடமற்று மனமுடைந்து மஹிஷியின் அறையை நோக்கி விரைந்து நடந்தான். சென்று, உடலை நடுங்கச்செய்யும் உத்தண்ட சப்தத்தாலும், அம்புபோல் ஊடுருவிச் செல்லும் கூரிய பார்வைகளாலும், வச்சிராயுதத்துக் கொப்பான சொற்களாலும் பத்மாவதியைப் பத்தினி யெனப் பார்க்காது நிந்தித்தான்; அவமதித்தான்; சீர்குலைத்தான். "கல்வியிற் பெரியார்"* கூறியபடி

"கண்டே னெஞ்சங் கனிவாய்க் கனிவாய் விடநா னெடுநாள்
உண்டே னதனு னீயென் னுயிரை முதலோ டுண்டாய்
பண்டே யெரிமுன் னுன்னைப் பாவீ தேவீயாகக்
கொண்டே னல்லேன் வேறோர் கூற்றந் தேடிக் கொண்டேன்"

இறந்த மைந்தனைக் குறித்துக் கல்லும் கரையும்படி கதறினான். கவிகுல கதிரவன் கம்பன் இயற்றியபடி :

"எற்றே பகர்வே னினியா னென்னை யுன்னிற் பிரிய
வற்றே யுலகம் மெனினும் வானே வருந்தா தெனினும்
பொற்றே ராசே தமியேன் புகழே யுயிரே யுன்னைப்
பெற்றே னருமை யறிவேன் பிழையேன் பிழையே" னென்றான்.

பொங்கி யெழும் கோபத்தில் கோதையைக் காட்டிற்கு விரட்டினான். அரசனின் கடுமொழிகளால் பலனற்று அசைவற்ற சிலை போன்றிருக்கும் பத்மாவதி, மன்னன் மொழிகளை மறுத்துக் கூறினாள். தான் மாசற்றவளென்று மனமிளகும்படி மன்றாடினாள். அரசன்பால் தனக்கிருக்கும் அளவற்ற அன்பின் பெருக்கைப் பிரியத்துடன் எடுத்துரைத்தாள். தஞ்சமென்று தளர்ச்சி மொழி மொழிந்தாள். ஆனால் அரசனோ சினத்தால் நாகம்போல் சீறினான். "கானகத்திற்குக் கடிதே செல்" எனக் கர்ஜித்தான். பிறகு பேசுவது பேதைமையென் றுணர்ந்த பத்மாவதி கானகத்திற் கேகிவிட்டாள். ஆனால் அங்கும் கணவனின் கனிந்த அன்பைக் கவரக் கடும் முயற்சியிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தாள்.

வனத்தில் இவளது வனப்பைக் கண்ணுற்ற விருத்தாப்பிய வேடுவ வேந்தன் இவளைத் தனதில்லத்திற் கழைத்துச் சென்று மகள்போல் போஷித்து வந்தான். பத்மாவதியும் தனது புதிய நிலைமைக் கேற்ப வேடுவ ஸ்திரீவேஷம் பூண்டாள். 'இயற்கை யழகு எங்குதான் இனிக்காது' என்று காளிதாஸன்

*"கல்வியிற் பெரியார் கம்பர்" என்பது முதுமொழி.

சொன்னபடி, பத்மாவதியும் புதிய வேஷத்தால் குன்றாத அழகுடன் பூர்ணிமா சந்திரன்போல் பிரகாசித்தாள்.

பத்மாவதி இவ்வாறிருக்க, உதயனன் வாஸவதத்தையின் மோகவிலாசத்தில் மூழ்கித் தனயனிறந்த துக்கத்தையும் மறந்திருந்தான். கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் கூறியபடி

"கற்றவர் ஞானமின்றேல் காமத்தைக் கடக்கலாமோ"

ஒரு சமயம் உதயனன் வேட்டைபுரிய அடவியை யடைந்தான். அங்குத் தற்செயலாக மனதை மகிழச்செய்யும் ஒரு மதிவதனியைப் பார்த்து மோகங்கொண்டு, வேடுவப்பெண் என்பதையும் வேரூன்றிப் பார்க்காமல், தனது செருக்கு, செல்வாக்கு, செங்கோல் இவைகளை அறவே மறந்து அவளுடன் அகப்பொருளடங்கிய சொற்களால் பேசலுற்றான். அரசனை யாரென்வறிந்த அப்பெண்மணியான பத்மாவதி, இடங்கொடுத்துப் பதில் கூறாமல் மன்னனது காமத்தீயைத் தீவிரமாகத் தூண்டினள். இப்புதிய மோகத்தில் வேந்தன் வாஸவதத்தையை மறந்தான். ராஜ்யத்தை இகழ்ந்தான். அவ்வடவியையே அரண்மனை யென நினைத்தான். சிலநாள் சென்றபின் மன்னன் தன் நாட்டிற்குச் சென்றானாயினும், வேடப் பெண்ணாகிய பத்மாவதியின் மோகபாசமானது அவனைப் பன்முறை அடவியின்கண் இழுத்தது. மோகத்தின் வன்மைதான் என்னே! பத்மாவதியும், தன்பால் அரசனுக்கு, எவ்விதத்திலும் மாறாத ஆழ்ந்த அன்பு ஏற்பட்டிருக்கிறதென அறிந்து, மாறு வேஷத்தைக் களைந்து மன்னன் முன் புன்சிரிப்புத் தவழ்ந்த முகத்துடன் நின்றாள். அதுவே தக்க தருணமெனக் கருதி, தான் நிரபராதியென நவின்றாள். உதயனனும், கோபத்தால் காதலிக்குச் செய்த கடுந் துன்பத்தை நினைத்து மனமிளகி, இதுகாறும் அடைபட்டிருந்த அன்பெனும் ஊற்று அபாரமாய்ப் பெருக, அவளது அதிசயிக்கத்தக்க குணகணத்தை மெச்சி மிகுந்த உற்சாகத்துடனும் பூரிப்புடனும் பத்மாவதியுடன் பட்டினத்தை நோக்கிப் புறப்பட்டான். சென்றதும் தீவிர விசாரணைசெய்து, தனயனை யொளித்த தாதியைக் கண்டித்துத் தனது மனைவிகளுடன் இனிது வாழ்ந்திருந்தான்.

இதுவே நாடகத்தின் வரலாறாகும். இப்பொழுது, ஏன் "அபிஸாரிகா வஞ்சிதகம்" என்னும் பெயர் இதற்கு ஏற்பட்டதெனச் சற்று விசாரிப்போம். வடமொழியில் "அபிஸாரிகா" என்ற பதத்திற்கு இரண்டு பொருளுண்டு. (1) காமம் மேலிட்டுத் தனது தலைவனைத் தேடுகிற தலைவி (2) தலைவன் தன்னை நாடி வரும்படி செய்கிற தலைவி. இந்நாடகத்தில் பத்மாவதி, தனது தலைவனைக் கானகத்திற்குப் பன்முறையும் வரும்படி இழுத்து, சுந்தரவடிவத்தால் மயக்கியபடியால் "அபிஸாரிகா" என்ற பெயர் அவளுக்குச் செவ்வனே ஒவ்வும். அவளால் அரசன் வஞ்சிக்கப்பட்டபடியால் "அபிஸாரிகா வஞ்சிதகம்" என்ற பெயர் இந்நாடகத்திற்குப் பொருந்தும். இப்பெயரே நாடகத்தின் விஷயங்களைத் தெளிவாய்ப் புலப்படுத்துகிறது.

இதுகாறும் வடமொழி வல்லுநர்கள், விசாகதத்தர் வீரரஸ வருணனையிற்றான் வல்லமையுள்ளோர் என்று நினைத்திருந்தார்கள். சிருங்கார ரஸச் சுவை ததும்பிய இந்நாடகத்தை ஊன்றிப்படிப்போர், எப்படி இவ்விஷயத்

"அன்பான நண்பனை ஆபத்தில் அறி"



திலும் விசாகதத்தருக்கு வல்லமை வாய்ந்திருந்ததென்பதை யான் கூறாமலே அறிந்து கொள்ளக்கூடும். சிருங்கார சுவைச்சுரங்கம் என்று இதைச் சொல்வதும் மிகையாகாது.

வருணனையிலும், உல்லேஹத்திலும், காப்பிய நடையிலும், நவரஸங்களின் பரிபோஷணத்திலும் வடமொழியிலுள்ள நாடகங்கள் இணையற்றவைகளாக இருக்கின்றன. அவைகளிலும், சிருங்கார ரஸம் நிறைந்த நாடகங்கள் மானிடர் மனதைக் காந்தம்போல்பற்றிக் காதலிபோல் இனிக்கச் செய்வதால் கவிகள் இந்த ரஸத்தைக் கைப்பிடித்து ஒப்புவமையில்லாத நாடகங்களையும் செய்யுட்களையும் இயற்றியருளினர். அத்தகைய சிறந்த நாடகங்களில் "அபிஸாரிகா வஞ்சிதகம்" ஒன்றென்பதை யாவரும் ஒப்பவே வேண்டும். "எத்தேயத்தார்கள் தங்கள் நாட்டில் தோன்றிய சிலாக்கியமான நூல்களை மறக்கின்றார்களோ அவர்கள், அழியாப்புகழையே அடியோடு அழிக்கின்றார்கள்" என்று பேகன் என்ற ஆங்கிலப் பேராசிரியர் கூறியுள்ளார். இப்பெரும் பாதகத்திற் குள்ளாகாமல் இனியாவது முதிர்ந்த தேசீய உணர்ச்சியையுடைய நாம் நமது புராதனமான—வடமொழியிலும் தென்மொழியிலும் உள்ள நூல்களை நுண்ணறிவுடன் படித்து நுகர்ந்து, நவீன நச்சுப்பொய்கையில் வீழ்ந்து நமனுலகத்திற்குச் சென்றிருக்கும் நமது காப்பியங்களை ஆராய்ந்து கண்டுபிடித்துப் பரவச்செய்து பாரத மாதாவுக்கு இம்முக்கியமான திருத்தொண்டு செய்வோமாக. எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பானாக.

காந்தி மகான் ஜனங்களைச் சாகவும் விடுகிறதில்லை! பிழைக்கவும் விடுகிறதில்லை என்று சில வியாபாரிகள் கூறுகின்றனர்.

* * *

கடைக் குமாஸ்தா கடையில் தக்ளியில் நூல் நூற்பதைக் கண்ட கடையின் சொந்தக்காரன் வயிறெரிந்து சாகிறான்.

## சந்தா நேயர்களுக்கு

நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியிலும் எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தப்படாமல் தபாலில் சேர்க்கப்பட்டு வந்தும் சிலர் சஞ்சிகை கிடைக்கவில்லை என்று எமக்கு அடிக்கடி தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் அந்த அந்த ஊர் போஸ்டு மாஸ்டருக்கு விஷயந் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைத்து வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ப-ர்.

"பள்ளிக் கணக்குப் புள்ளிக்குதவாது"

# மதுரைமா நகர்.

(எஸ். சேஷையர்.)

நிலைமண்டில ஆசிரியப்பா

உலகமெங்கு மிலகு நகர்பல
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயரத்
தான்மாத் திரையின் வான்மீத் திரியும்
வளமழை பொய்த்து விளைபொருள் குன்றி
மயங்குறு காலை வயங்குமேற் றிசையோர்
மகிதலத் தின்கட் பகிரதன் போலப்
பேரியா றதனை மாரியு நாணிமெய்
விளர்ப்ப வையையோ டளவக் கூட்டி
விளைவெலா மலியுமா விரும்பிச் செயவொளிர்
மதுரைமா நகரே! மதுரைமா நகரே!
செல்வப் பொருளே சிறப்புடைப் பொருளென
வொல்வகை யுண்மை யுணர்கிலை கொண்டனை
அதனை யாக்கும் விதமறிந் தவற்றிற்
றலைப்பட் டுழலுந் தனிப்பெரு நகரே!
நிலைப்பட் டிருக்கு நீர்மையெய் தினையோ?
நினைக்குறித் தந்தோ நினைக்குந் தோறுந்
துன்ப மிகுந்து சோரு மென்னுளம்!
இன்பமீ தூரு மெவர்க்குந் தாந்தாம்
பிறந்த நகரெனில்; பேசிய விந்நிலை
யென்னிட மாறிய தென்னைகொல்? அறியேன்
நின்னிற் பிரிந்து நெடுங்கலை கற்பேன்
சென்னை போந்துஞ் சிறியனே னுள்ளம்
பன்னாள் சென்றும் பரிந்து நிற்காண்
வேட்கை மேவி விரைந்தாண்டு தோறு
மிருமதி நின்வயி னிருந்தேன், அம்ம! நீ
யுயர்நிலை தவறி நயமெலாந் தொலைந்து
வீழ்நிலை யுற்றனை! மேதக்க மதுராய்!





எவன்கெலோ விவ்வா றவநிலை யெய்தினை?
நச்சிப் பாண்டியர் மெச்சி வளர்த்த
சங்க மிருந்து பொங்கிய நன்னகர்
மதுரையென் றான்றோர் வகுத்துக் கூறிய
தெதிர்மறை யிலக்கணை யென்பது பற்றியோ
வஞ்சப் புகழ்ச்சியோ? மற்றெனோ? அறியேன்
நஞ்செனக் கருதியோ நற்றமி ழமுதைப்
பேதமை கந்தா மாதய ருறுவாய்
பருகலை யதன்சுவைக் குருகலை யிருத்தி?
மறையெலாம் புகழு மிறையவ ரொன்னு
நறுந்தமிழ்ப் புலவர் சிறந்துவீற் றிருந்த
வளநகராகிய மதுரையு நீகொலோ?
ஆல வாயி னவிர்சடைக் கடவுளை
யேலவா தித்த வின்றமிழ்க் கீரன்
வந்தவ தரித்த மதுரையு நீகெலோ?
தமிழ்மண மிகுந்து கமழு நாடெலா
முள்ள பாவல ருள்ளிநின் பெருமையைத்
தந்தம நூல்களி விந்தை யாங்கினி
லேற்றி நூற்பொருள் சாற்றல் வேண்டியு
மரசர்பாற் பற்பல பரிசு கருதியுங்
காடெலாங் கடந்து நாடொறும் போந்து
முத்தமிழ் கொழித்த மதுரையு நீ கொலோ?
பதினெண் கூலமு மிதன்க ணுளவெனச்
சாற்றுவார் போலச் சாத்தனு ரொன்னு
மேற்றகைப் புலவர் வேட்டினி திருந்து
மதுரா நூல் யாத்த மதுரையு நீகொலோ?
நால்வர் குரவரு மேல்வகைத் தமிழிற்
பண்ணிசைப் பாட்டிற் பரிந்து புகழ்ந்த
மண்ணில்விண் ணகரெனு மதுரையு நீகொலோ?

(தொடரும்)

குறிப்பு:—தாய் மொழியாகிய தமிழினை மறந்து செல்வப் பொருளீட்டலிலேயே காலம் போக்கியுழலும் மதுரையாகிய தாம் பிறந்த நகர்க்கிரங்கி யாற்றாது, காலஞ் சென்ற வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ. பாடியது. இதனால், அப் பழம்பதியின் பண்டைச் சீருஞ் சிறப்பும் நன்கு விளங்கும்.




## இல்லற வொழுக்கம்

(சிவானந்தசாகர யோகீஸ்வரர்.)

(125-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதனை 'ஏற்பதிகழ்ச்சி' என்றதனால் ஔவையார் கூறினர். இல்வாழ்வான் தான் பிறரிடம்போய் யாசிப்பது அவனுக்கு இகழ்ச்சியாகும். இதனை, 'உரவோ ரென்கை இரவா திருத்தல்' என்னும் வாக்கியமும் வலியுறுத்தும். அறிவுடையான் பொருள் வருவாய் பலவற்றையும் ஆராய்ந்து, தன் சக்திக்குரியதொரு தொழிலைப்பற்றிச் சம்பாதித்துச் சக்திக்கேற்றவாறு ஏழைகளுக்குதவித் தானும் உண்டு மகிழ்வதே தகுதியாம். கிடைத்தபொருளுக் கேற்றவாறு சிறிது தருமத்தையும் செய்யவேண்டுமேயல்லது பிறரிடத்தில் யாசிப்பது பொருந்தாது.

'நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று'

என்றார் பொய்யா மொழியாரும்.

எல்லோரும் கொடுப்பவரேயாயின் இரப்பவர் யாரென்று குதர்க்க வாதிகள் கேட்பதுண்டு. அது யுக்தியன்று. உன்னிடம் வந்து யாசிப்பவர்க்கு இடுவென்றதே யொழிய இரப்பவர் உலகத்தில் இல்லாதிருக்க வேண்டுமென்பதில்லை. முற்பிறப்பி லியற்றிய தீவினைவசத்தா லிரப்பவரும் புண்ணிய வசத்தாற் பொருளீட்டும் முயற்சியுடையாரும் உலகின்கண் உளராதல் இயற்கை.

'இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று'

அதாவது தீவினைப் பயனால் யாசிப்பவ ரில்லாவிட்டால் புண்ணிய வசத்தாற் பொருளுடையார் புகழுடையாமல் சூத்திரத்தாலாடும் மரப்பதுமையை யொப்பார் என்பதாம்.

ஆதலாற் பொருளுடையார் யாசியாமல் யாசித்தவர்க் கீந்து புகழ்பெறுக. தம்மாலியன்றதை ஏழைகட் கீந்து தாமிரவாமலிருப்பதே மேன்மையாமென்க.

இதுகாறும் கூறிப்போந்த வதனால், இல்லறத்தார்க் கீவதே புகழும் புண்ணியமுமாய் இம்மை மறுமைப் பயன்களை யளிக்கும் என்பதும் பிச்சை





யிடும் செயல் பெண்களுக்கே விதிக்கப்பட்டபடியால் கற்புடைய பெண் இயன்றவாறு ஐயமிடல் வேண்டுமென்பதும் இதனைக் கணவன் தன் மனைவிக் கவசியம் கற்பிக்க வேண்டுமென்பதும் விளக்கப்பட்டது. இதுவே சான்றோ ராண்ட இல்லற நெறியாம்.

அயலகம் செல்லுதல், வீண் வம்பளத்தல், பிறரைப் பழித்தல், வேறு புருஷனை விருப்பத்தோடு பார்த்தல், பரிகாசப் பேச்சுப் பேசுதல், சங்கீதம், நாடகம், வேடிக்கை விநோதம் பார்த்தல், இவற்றில் பிரியம் வைத்தல், ஆடையாபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு வீதியிலே திரிதல், அயல் வீட்டுக் காரியங்களை விசாரித்தல், தன் குடும்ப காரியங்களைப் பிறருக்குச் சொல்லுதல், தன் குறைகளைக் கூறல் இவைபோல்வன வெல்லாம் கற்புடைய மாதருக் காகாவாம். ஏனெனில் இவையெல்லாம் உலகாசையைப் பெருக்கிக் கற்பின் வேரை யறுத்து அபவாதத்தை யுண்டாக்கி, மறுமையில் நரகத்திற் சேர்க்குமாதலாலென்க.

நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு காவலாளரைத் தனக்குக் காவலாக வைத்துக்கொண்டு கற்புடைமையைக் காப்பாற்ற வேண்டும். கணவனது சுகமே தன் சுகமாகவும் அவன் துக்கமே தன் துக்கமாகவும் கொண்டு வாழவேண்டும்.

அவனுக்கு வியாதிகளாலாவது மற்றைய லௌகிக விஷயங்களாலாவது துன்பம் நேரிடுமாயின் மனம் பதைத்து அதனை நிவர்த்தித்தருளும்படி எல்லாம் வல்ல ஈசுவரனைப் பிரார்த்திக்கவேண்டும். அதற்குத் தக்க முயற்சிகளை மனந்தளராமற் செய்து பாதுகாக்க வேண்டும்.

'துடியாப் பெண்டிர் மடியினெருப்பு'

என்று கூறியவதனால் கணவன் துன்பங்கண்டு மனம் பதைக்காத பெண் அவனுடைய மடியிலே கட்டிக்கொண்ட நெருப்பைப்போல்வாளென்று அன்னையார் கூறுதலாலுணர்க.

இக்குணமுடைய பெண்ணைச் சன்மார்க்கமுடையார் நிந்திப்பார்கள். கணவனுடைய குற்றங்குறைகளைப் பிறரிடங்கூறி அவனை நிந்திக்கும் பெண்ணை அந்தக் குடும்பத்துக்கு எமனென்று நல்லோர் கருதி இகழ்வார்கள். இதனை,

'தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்'
'கூற்றமே, இல்லிருந்து தீங்கொழுகுவாள்'

என்று அன்னையார் கூறியதனால் காண்க.

உலகத்தில் பழியும் பாவமுமுண்டாய் நரக வேதனையை யடைய நேரிடுமாதலால் கணவனைத் தூற்றாமல் இல்லறம் நடத்தவேண்டும். தன் மாமியார் மாமனார்களையும் நிந்திப்பதாகாது. மாதா பிதாக்களே குருவும் தெய்வமுமாவாரென்று முன்னர்க் கூறியுள்ளோம். கணவனுடைய மாதா பிதாக்கள் அவனுக்குக் குரு தெய்வங்களாகிறபோது அவன் மனைவிக்கும் அவர்கள் குரு தெய்வங்களே யாவார்களன்றோ? இதனைச் சாவித்திரி, சீதை, திரௌபதி இவர்கள் சரித்திரங்களா லுணர்க. கணவனது சுற்றமே தனக்குச் சுற்றமாதலால் அவர்களுடன் பகை கொள்ளாமலும், அவர்களுக்குத் தீமை செய்யாமலும், அவர்களுடன் அன்பாய்ப் பேசி அவர்கள் விரும்பிய பொருள்களைக்

கணவன் அனுமதி பெற்றளித்து அவர்களை மகிழ்விக்க வேண்டும். அவர்களிடத்தில் வெறுப்பான வார்த்தைகளைப் பேசக்கூடாது.

இதனையே 'வெட்டெனப் பேசேல்' என்று அன்னையார் கூறினர். அலட்சியஞ் செய்திகழ்ந்தால் அவர்கள் கிட்ட அணுகார். அதனால் அநேக காரியத் தாழ்ச்சிகளுண்டாகும்.

'சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்'

என்றபடி சுற்றத்தார் தன்னைச் சூழும்படியாக வாழ்வதே இல்லறத்துக் கழகாகும் என்றதனால் அவர்களிடத்திலுள்ள குற்றங்களைப் பாராட்டக் கூடாது. பாராட்டினால் 'குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை' என்றபடி சுற்றத்தார் நீங்கிவிடுவார்கள்.

சுற்றத்தாரே யன்றி யண்டை அயலகத்தாருடனும் பகை கொள்ளாமற் பழகிவர வேண்டும். தான் அவர்களோடு பகைகொண்டால் தன் கணவனது லௌகிக விருத்திக்குக் கெடுதி நேரிடும். இதனால் இல்லறம் கெடும். தன் குடும்பமும் கஷ்டதசையை அடைய நேரிடும். இத்தகைய குற்றங்களுக்கு இடங்கொடாமல் எல்லோரையும் தழுவ நடப்பதே நன்றாம்.

கணவனுக்கு அமுதூட்டுங்கால் தாய்போன்ற அன்புடையவளாய் இனிய வுணவுகளை அன்புடன் படைத்தல் வேண்டும். கணவன் தன்மையை அறிந்து அவனுக்குப் பிரியமான பதார்த்தங்களை இனிய சுவையுள்ளனவாகச் செய்து வைத்தல் வேண்டும். அன்னத்தைப் படைத்துவிட்டு அங்குமிங்கும் செல்லுதல், பிறருடன் பேசி விளையாடுதல், வேறு காரியங்களைப் பார்த்தல், குழந்தைகளை வைது அடித்தல், வேலைக்காரர்களைக் கோபித்தல், வீட்டில் இல்லாத பண்டங்களை வாங்கிவரும்படி சொல்லுதல், ஆடையாபரணங்களில்லை வாங்கித் தரவேண்டுமென்று கேட்டல், பிறரது வாழ்வை யெடுத்துச் சொல்லி அவன் மனதைப் புண்படுத்தல், மாமி நாத்திகள் செய்த கொடுமைகளைக் கூறி வருத்தல், இவற்றையும் இவைபோல்வனவான பிறவற்றையும் செய்தல் கூடாது. தாய்போல் மனக்கனிவுடன் அமுது படைத்து, வேலைக்காரர்களைப்போல் பக்கத்தினின்று பணிவிடை செய்து உபசரிக்க வேண்டும். கணவன் எக்காரணத்தாலாவது மனம் மெலிந்திருந்தால் சிநேகிதனைப்போல் இனிய மொழிகளைக்கூறி மனந் தெளிவித்துத் துன்பத்தை நீக்கவேண்டும். இல்லற தர்மம் நடத்தும்போது மந்திரிபோல் தந்திர யுக்திகளைச் சொல்ல வேண்டும். சரசமாய்ப் பேசுங் காலத்தில் நாணத்தை விட்டு மதுரமான பேச்சுக்களாலும் செய்கைகளாலும் களிப்பிக்க வேண்டும். புஷ்டியுண்டாகும் நல்ல உணவுகளைக் கணவனுக் கூட்டி மதுரமும் சீக்கிரத்தில் ஜீரணமாகக் கூடியதுமான பதார்த்தங்களைத் தான் மிதமாய்ப் புசிக்கவேண்டும். இல்லாக்கால் சந்ததி யுண்டாகாது. சற்சந்ததி யுண்டாவதற்கே இல்லறம் புரிவது, சற்சந்ததி யுண்டாகாவிட்டால் தேவர்கடன், பிதிர்க்கடன், ரிஷிகடன் என்கிற மூன்று கடன்களையும் தீர்க்கமுடியாது. அதனால் இல்லறம் பயன் பெறாது. வலிய வுணவுகளை மிதமிஞ்சிப் புசிப்பதனால் ஆண் சந்ததி குறைந்து பெண் சந்ததியே விருத்தியாகும். ஆண் சந்ததியில்லாத குடும்பம் நாசமாகும். ஆதலாலேயே,

'உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு'

என்று அன்னையார் கூறினர்.




# வேதாந்த சூடாமணி வசனம்

(பண்டிதர். பூ. ஸ்ரீநிவாசன்.)

(கடந்த வைகாசி மாத இதழில் தொகுதி 15—பகுதி 11-ல் ஜீவன் சாக்கிராவத்தையில் வியஷ்டி தூல சரீரத்தை யபிமானிக்கும் பொழுது விசுவன் என்றும், சொப்பனாவத்தையில் சூக்கும சரீரத்தை யபிமானித் திருக்கும்பொழுது தைசதன் என்றும், சுழுத்தி யவத்தையில் காரண சரீரத்தை யபிமானித்திருக்கும் பொழுது பிராஞ்ஞன் என்றும் பெயர் பெறுகிறான் என்றும், ஆத்மாவும் ஜீவாத்மா அந்தராத்மா பரமாத்மா என மூவகைப்படுமென்றும், அவற்றுள், அக்கினியிற் காய்ந்த இரும்புபோல தேகம் முதலியவற்றோடு கலந்துள்ள குடும்ப விவகாரத்திற் பொருந்தியிருப்பவன் ஜீவாத்மா எனப்படுவான், தாமரை யிலைத் தண்ணீர்போல குடும்ப விவகாரத்திற் பொருந்தியும் பொருந்தாதிருப்பவன் அந்தராத்மா எனப்படுவான், உலக விவகாரங்க ளனைத்திற்கும் சூரியன் சாக்ஷிமாத்திரமாயிருப்பது போல ஜீவாத்ம அந்தராத்மாக்களின் சகல விவகாரங்களுக்கும் சாக்ஷி மாத்திரமாக விளங்குவோன் பரமாத்மா எனப்படுவான் என்றும் கூறப்பட்டன. இனி,

சாக்கிர சொப்பனங்களில் அவித்தையின் காரியமாயுள்ள அந்தக் கரணத்திலும், சுழுத்தியில் அவித்தையிலும் ஆத்மா ஜீவ வடிவாய்ப் பிரதிபலித்திருக்கின்றது; ஆதலின் இவ்வியவகார கற்பனை யனைத்தும் அந்தப் பிரதிபிம்ப வடிவ ஜீவனுக்கே யுண்டன்றி ஆத்மாவிற்குச் சிறிது மில்லை யென்பது கூறப்படுகின்றது.)

## ஆத்மாவின் வியவகார கற்பனை

"நீர்விழுந் தொருவெங் கதிர்தடுமாறி நின்றதென் றுரைப்பதுபோலுங்
கார்விரைந்தோட வோடுகின் றதுதண் கலைமதி யென்பது போலு
மோர்வருந்திரிவில் போதவான் மாவிற் குடல்முதலாகிய வுபாதிப்
பேர்வருஞ் சீவபாவனை யுலகப் பெருவிவ காரமென் றறியே."

வேதங்களாலும் இத்தன்மையான தென்று அறிதற்கரியதும் எக்காலத்தும் எவ்வித மாறுபாட்டையு மடையாமல் ஒரே தன்மையாயிருப்பதும் ஞான வடி

"தன்னைச் சரிப்படுத்திக் கொள்ளுகிறவன் உலகைச் சரிப்படுத்தியனாவான்."

வாயுள்ளதுமாகிய ஆன்மாவிற்குத் தூலம் சூக்குமம் காரணம் என்னும் மூவித தேகோபாதிகளால் விசுவன் தைசதன் பிராஞ்ஞன் என்னும் பெயர்கள் வருதற்கேற்ற ஜீவபாவனையானது உலகத்தில் பெரிய கற்பனையாகவுள்ள விவகாரமே யன்றி உண்மையன்றாம். இக்கற்பனை எதனை யொத்திருக்கின்றதெனின், ஓர் நீர் நிலையில் காணப்படுகின்ற சூரியனது பிரதிபிம்பமானது அந்நீரின் அசைவால் அசையும் பொழுது, அது நீரினசைவென்றறியாமல், சூரியனே நீரில் விழுந்து தத்தளித்துக்கொண்டிருக்கிறான் என்பது போலும், ஆகாயத்தில் மேகங்கள் விரைந்தோடுகையில் அவ்வுண்மையை யறியாது அருகிலுள்ள சந்திரன்தான் ஓடுகின்றான் என்றறிவது போலுமாம் என்றறிக.

(வியஷ்டியாகத் தனித்தனி தூல சூக்கும காரண சரீரங்களை யபிமானித்து நிற்கும் ஜீவன் விசுவன் தைசதன் பிராஞ்ஞன் என்னும் பெயர்களால் முறையே அழைக்கப்படுதல் போல, ஈசுவரனும் சமஷ்டியாக (எல்லாச் சரீரங்களையும் ஒரு சரீரமாக) அம்மூன்று சரீரங்களையும் அபிமானித்து நிற்றலால் அடையும் பெயர்களையும் அவற்றின் பரியாய நாமங்களையுங் கூறுகின்றார்.)

### ஈசுவர னெய்தும் வேறு பெயர்கள்

"அருவிராட் புருட னிரணிய கருப்ப னந்தரி யாமியென் றீசன் றிரிவிதம்." ஈசுவரன் விராட் புருஷன், இரணிய கருப்பன், அந்தரியாமி என்னும் மூன்று வகையாக விளங்குவான். அவற்றுள்,

(1) "தூலவாகத்துச் சமட்டியா கியவபிமானி விரிவுறும்வை
சுவா னரனெனல் முதல விராட்புரு டன்பெயராகும்."

(ஜீவன் தனித்தனி ஒவ்வொரு (வியஷ்டி) தூல சரீரத்தை அபிமானித்துக் கொண்டிருத்தலால் விசுவன் என்றழைக்கப்படுதல் போல) ஈசுவரனும் சமஷ்டியாக எல்லாத் தூல சரீரங்களையும் தனது தூல சரீரமாக அபிமானித்துக் கொண்டிருத்தலால் விராட் புருஷன் என்னும் பெயராலழைக்கப்படுகின்றார். இவர்க்குரிய பரியாய நாமங்கள்: தூல சரீர சமஷ்டியபிமானி, வைசுவாநரன் முதலியனவாம்.

(2) "மருவுறு மிலிங்க மெனுமுடற் சமட்டி மானிமாப் பிராணனே
யன்றி, சூத்திராத் மிகனென் பெயர் முதலாகச் சொற்றனரிரணிய
கருப்பற்கு."

(ஜீவன் தனித்தனி ஒவ்வொரு (வியஷ்டி) சூக்கும சரீரத்தை யபிமானித்துக் கொண்டிருத்தலால் தைசதன் என்ழைக்கப்படுதல் போல) ஈசுவரனும் சமஷ்டியாக சூக்கும சரீரங்க ளெல்லாவற்றையும் தன் சூக்கும சரீரமாக அபிமானித்துக் கொண்டிருத்தலால் இரணிய கருப்பனென் றழைக்கப்படுகிறார். இவரது பரியாய நாமங்கள்:—இலிங்க (சூக்கும) சரீர சமஷ்டி யபிமானி, மகாப் பிராணன், சூத்திராத்மா முதலியனவாம்.

(3) "எத்துகாரணமா முடம்புறு சமட்டி யெனுமபி மானியவ் வியத்
தன், வாய்த்தகாரணமா முபாதிகனனந்த மயன்பர தேவதை

"அதிகம் கஷ்டப்பட்டு வேலை செய்தல் அநேகம் பாஷைகளைக் கற்பதற்குச் சமம்."



பரம, ஞத்ததற் பதமுக் கியார்த்தனென் பெயர்மு னந்தரியாமி
பெற்றிடுமே."

(ஜீவன் தனித்தனி ஒவ்வொரு (வியஷ்டி) காரண சரீரத்தை யபிமானித்துக் கொண்டிருத்தலால் பிராஞ்ஞன் என்னும் பெயரைக் கொண்டிருத்தல் போல) ஈசுவரனும் சமஷ்டியாக காரண சரீரங்க ளெல்லாவற்றையும் தன் காரண சரீரமாக அபிமானித்துக் கொண்டிருத்தலால் அந்தர்யாமி என்னும் பெயர் பெறுகிறார். இவரது பரியாய நாமங்கள்; காரண சரீர சமஷ்டி யபிமானி, அவ்வியக்தன், காரணோ பாதிகன், ஆனந்தமயன், பரதேவதை, தத்பத முக்கியார்த்தன் முதலியனவாம். (மேற் கூறியபடி ஈசுவரன் விராட்டு முதலிய பெயர்களை யுடையவனாதலெப்படி யென்பது திருஷ்டாந்த வாயிலாகக் கூறப்படுகிறது.

### ஈசுவர சரீர திருஷ்டாந்தம்

"சித்திரப் படமோர் பொருளொடுங் கூடாத் திகழ்வினிற் றௌதமே யெனவு, நெய்த்த கூழ் வருடக் கடிதமே யெனவு நீனிறத் திலாஞ்சித மெனவும், பத்தியோ வியஞ்சேர் திராஞ்சித மெனவும் படுதல்போற் பிரமமுமாயை, வைத்த காரியங்கள் கடந்துறு நிலையில் வயங்குஞ்சித் தெனும் பெயர் புனைந்தே."

"அகிலகாரணமா மாயையை மருவி யந்தரி யாமியா மாயை,
சகலகாரியமாஞ் சூக்கும வுடம்பு சார்ந்துபொன் கர்ப்பனென்றாகி,
விகிலமில் தூலவுடம்பினை மேவி விராட்டென நிற்குமென் றறிவாய்."

ஒருவன் நாடகசாலைக்குத் திரை யொன்று எழுதக்கருதி படம் (படம்=வஸ்திரம்) கொணர்ந்து சித்தப்படுத்துகிறான். அதன் மேல் சித்திரம் தீட்டப் படப்போகிறது; ஆனால் இன்னும் எழுதப்படவில்லை. அந்த நிலையில் அது தௌத படம் (வெள்ளை வஸ்திரம்) எனப்படுகின்றது. அதுபோல, பிரஹ்மமானது மாயையையும் அதன் காரியமாகிய பிரபஞ்சங்களையும் கடந்து விளங்குகையில் சித்து எனப்படுகிறது. பிறகு, அவ்வஸ்திரத்தின் மீது கஞ்சி பூசுகிறான். அப்பொழுது அது கடிதபடம் எனப்படுகிறது. அதுபோல, பிரஹ்மம் எல்லாப் பிரபஞ்சங்களுக்குங் காரணமாயுள்ள மாயையோடு கூடுகிறபொழுது அந்தரியாமி யெனப்படுகின்றது. பின்னர், அவ்வாடையில் நீல நிறம் பூசப்படுகிறது. அப்பொழுது அது இலாஞ்சித படம் எனப்படுகிறது. அதுபோல, பிரஹ்மம் மாயாகாரியமாயுள்ள சூட்சும சரீர சமஷ்டியோடு கூடுகிறபொழுது இரணிய கருப்பனெனப்படுகிறது. முடிவில், அவ்வாடையில் பல நிறத்த சித்திரங்கள் வரையப்படுகின்றன. அப்பொழுது அது இரஞ்சித படம் எனப்படுகின்றது. அதுபோல, பிரஹ்மமும் ஸ்தூல சரீர சமஷ்டியோடு கூடுகிறபொழுது விராட் புருஷன் எனப்படுகின்றது என்றறியக் கடவாய்.

(இந்தத் திருஷ்டாந்தத்தைக் காட்டி இதன்படி பிரஹ்மம் மூவகைப் பெயர்களை யெய்துகின்றது என்பதில் ஓர் ஐயம் நிகழும் எனச் சங்கித்து, அச்சங்கைக்குச் சமாதானம் கூறுகிறார்.)

"நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்."

சங்கை:—“திகழுறு பிரமஞ் சித்திரபடமேல் சித்திரம் யாது?”

பிரஹ்மம் சித்திரப் படம்போன்ற தெனக் கூறினல் அச்சித்திரபடத்தி லமைந்துள்ள சித்திரம் போன்றிருப்ப தெது?

சமாதானம்:—“விரிஞ்சனே முதலாஞ் சேதனமோடு வெற்பெழு
[வாயசே தனமாய்,
விரிந்துள வுலகஞ் சித்திர மென்பர்.”

பிரமன் முதலாகிய சேதனப் பொருள்களும் (சேதனப் பொருள்=அறிவுடைப் பொருள்) மலைமுதலாகிய அசேதன (சட)ப் பொருள்களுமாக விரிந்துள்ள பிரபஞ்சமே சித்திரம் போன்றிருப்பதாகும் எனக் கூறுவர் பெரியோர்.

சங்கை:—ஆயின், “பரம்பொருளா மொருபிரமத், திருஞ்சடா
சடமா முலகது தோற்ற மெவ்வணம்?”

பரம் பொருளாகிய சித்தாயுள்ள பிரஹ்மத்தினிடத்து சேதன சேதன வடிவப் பிரபஞ்சம் தோன்றிய தெவ்வாறு? இதற்குத் திருஷ்டாந்தம் என்ன?

சமாதானம்:—“படந்தன்னில் வரைந்தபன் னிறமாய்க் குளிர்
முதல் மாற்றவல் லனவல துகிற்போலி.”

“ஓர் வடிவாகிக் குளிர் முதல் மாற்று முறைமையாஞ் சித்திரப் படம்போன்
றூர்வுற வெழுதுங் கிரிமுத லாய வதனெடொப் புறுகிலா வனபோற்,
றேர்வரும் பிரமத் தெழுந்து பற்பலவாஞ் சீவர்கள் சித்தொ டொப்பாகப்,
பார்முத லொவ்வா சடங்களா தலினற் பரத்திலாஞ் சடாசட வுலகம்.”

பலவகைப்பட்ட நிறங்களை யுடையதாய்ச் சித்திரிக்கப்பட்ட அச்சித்திர படத்தில் அப்படத்தை (வஸ்திரத்தை)ப் போன்ற வஸ்திரங்களும் மலை முதலியவைகளும் வரையப்பட்டிருக்கின்றன வென வைத்துக்கொள்ளுவோம். அவ்வுண்மையான ஆடையில் வரையப்பட்ட ஆடை உண்மையான தன்று; குளிர் முதலியவற்றைப் போக்குந் தன்மையுடையது மன்று. ஆகலின், அது துகிற்போலி; அதாவது வஸ்திராபாசம் எனப்படும். ஆனல் அது வடிவத்தில் உண்மையான வஸ்திரத்தோடு ஒத்திருக்கின்றது. எனினும், அச்சித்திர படத்தில் வரையப்பட்டுள்ள மலை முதலியவை அச்சித்திரபடத்தோடு சமானமாவதில்லை. அதுபோல, சித்வடிவப் பிரஹ்மத்தின் கண் கற்பிக்கப்பட்டுள்ள சிதாபாசங்கள் அந்த சித்வடிவப் பிரஹ்மத்திற்குச் சமதையாயிருக்கின்றன. சட வஸ்துக்கள் சமானமின்றி யவையாயிருக்கின்றன. (இங்கு வஸ்திரம் அதிஷ்டான சேதனமும், சித்திரக்காரன் மாயையும், சித்திரம் சேதன சேதன வடிவப் பிரபஞ்சமுமாம் (துகிற்போலி சிதாபாசங்களாகிய சேதனங்கள்; மலை முதலியன அசேதனங்கள்) என்பது அறியக்கிடத்தல் காண்க).

தமிழ் வைத்தியம் வேண்டாம்! இங்கிலீஷ் வைத்தியமே வேண்டும் என்று கூறுகிறவர்களுக்கு வாங்கிக் கொடுக்கும் மருந்தெல்லாம் வீணே.

“எந்த நேரத்தில் எது செய்யவேண்டுமோ, அந்த நேரத்தில் அது உன் முழு மனதோடு செய்து முடிக்க.”

# பழவினையும் பகுத்தறிவும்

(ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மையார்.)

பகுத்தறிவென்பது மக்களினத்திற்கே உரித்தாகிய ஆறுவதறிவாகும். விலங்கினங்களினின்றும் மனிதவருக்கத்திற்குச் சிறப்பளிப்பது இப்பகுத்தறிவே யாகும்.

இதன்முன் நாம் எடுத்த பிறவிகளில் ஈட்டிய நல்வினை தீவினைகளுக்கீடாக இப்பிறவியில் எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நம்மை வந்தடையும் இருவகைக் குணங்களே இப்பிறவிக்கு இயற்கைக் குணங்களாக அமைந்து பருவத்திற் கேற்ப மலர்ச்சியுறுகின்றன. பழவினைப் பயனை மாற்றுவது சகுணமூர்த்திகளாலு முடியாததாகும். இதனை,

“வினைப்பயனை வெல்வதற்கு வேதமுதலா
அனைத்தாய நூலகத்து மில்லை”

என்னும் சான்றோர் உரையால் உணரலாம்.

பொய்யாமொழித் தெய்வப் புலவரும்

“ஊழிற் பெருவலி யாவுள” என்றும் விதந்தோதினர். எதிபாராது வரும் நிகழ்ச்சிகளை ஊழ் என்று கொள்ளலாம். அவ்வாறின்றி மனவடக்கம் புலனடக்கமின்றி நாம் தெரிந்து செய்யும் பிழைகளையும் ஊழின்யாற்படுத்திச் சிலர் பேச இடந்தரல் கூடுமென்றே அதே அதிகாரத்தில்

“ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்”

என்று மனிதன் பகுத்தறிவைக் கொண்டு தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளல் கூடுமென விசேடக் கருத்தினையும் அறிவுறுத்தினர்.

இத்தகைய ஆண்மை யுடையவரே மனிதரில் மனிதர்—தன்னைத் தூய்மைப் படுத்திக்கொள்ளும் அறிவாற்றலோடு தன்னைச் சேர்ந்தோர்களையும் திருத்தித் தூயராக்கிப் பரந்த நோக்குடன் சுயநலமறுத்துப் பொதுநல நாடித் தான் என்னும் முனைப்பறுத்து அவா வொழித்து பிறர்க்கென வாழும் பேரறிவாளர்களே மனிதரில் தேவராவர். இவர்களே மகான்களென்றழைக்கத் தக்கவர்.

ஐந்து வயதுள்ள துருவனுக்கு அசையாதெழுந்த அதிதீவிரமான தவ வுறுதிக்கும், அதே வயதுள்ள பிரகலாதரின் திடபக்தி, துன்பத்தைச் சகிக்கும் சத்தியாக்கிரக ஆற்றல் இவைகட்கும்—காரணம் பழவினையின் பயனேயன்றி வேறுண்டோ? இது போலவே தீய குணங்களும் எவர் உபதேசமுமின்றி விரைவில் வந்தெய்துகின்றன.

“தவறுதல் எளிது, பொறுத்தலே பெரிது.”

207688

இதற்கு சூரபன்மன் குமாரனான பானுகோபன் குழவியாக இருக்கையில் தொட்டிலின் மீது தாக்கிய சூரிய வெப்பம் கண்டு உடனே கோபித்தெழுந்து தாவிச் சூரியமண்டலம் சென்று சூரியனைப்பற்றி மீண்டனனென்றும், பிறகு சூரியனை வேண்ட விடுத்தனனென்றும் காந்தத்தில் ஒரு குறிப்புண்டு. அதுபற்றியே பானுகோபனென்பது காரணப் பெயராக வழக்கில் வந்தது. இதுவும் கருவிலேயே அமைந்த உணர்ச்சிதான். இவைகளினால் நல்வினையோ, தீவினையோ, இரண்டும் மறுபிறவியில் தொடர்ந்து வந்து பற்றுவதும் அதற்கேற்ற இருவிதப் பலன்களையும் துய்க்கத் தகுந்த எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் ஆற்றல்களையும் இயற்கையாகவே அமையப் பெறுகின்றனர். இது நிறைவேற வேண்டியது நியதி. இது குறித்தே 'ஊழின் வலி மற்றொன்று சூழினும்—தான்முந் துறும்' என்றருளினார் வள்ளுவரும்.

ஸ்ரீராமர் வாலியை மறைந்து அம் பெய்தது தவறென்பதை நமது நூல்கள் ஆதரிக்கின்றன. அதன் பயனாக கிருஷ்ணாவதாரத்தினை விவரிக்கும் பாகவதத்தில் கண்ணன் ஓர் மரத்தில் தானே மறைப்படுத்துத் தனது காற் பெருவிரல் மட்டில் புறத்தே தெரியும்படி அசைத்துக் காட்டியதாகவும், அதனை ஓர் பட்சியெனக் கருதி வேடனொருவன் அம்பெய்ததாகவும் அதனை எதிரேற்றுச் சுவர்க்கம் சென்றார் என்றும் பொருத்தமாக வரையப்பட்டுளது. ஈண்டு கதை வரலாற்றினைக் கவனிப்பது நமது நோக்கமன்று. இதனால் நாம் தீவினையில் ஈடுபடுவதற்கு ஏற்படும் சந்தர்ப்பங்களை எதிர்த்து நிற்கும் ஆற்றலைப் பெறுவதற்குள்ள சாதனமே கவனிக்கத்தக்கது. இதுபோல் ஜனக புத்திரியும் தன்னுடைய நாயகனால் தனக்குக் காவலாக நியமிக்கப்பட்ட இளையவராகிய இலக்குவனை வன்சொற் கூறி அகற்றியதும், பெண்மைக்கியலாத வண்ணம் தனித்திருக்கத் துணிவுற்றதும், பின்னர் எய்திய கேடனைத்திற்கும் விதையாயின. இதனைப் பிராட்டியே யுணர்ந்து அசோக வனத்தில்

"வஞ்சனை மானின்பின் மன்னனைப் போக்கியென்
மஞ்சனை வைதுபின் வழிக்கொள் வாயென
நஞ்சனை யானகம் புகுந்த நங்கைநான்
உஞ்சனன் இருத்தல் இவ்வுலகங் கொள்ளுமோ?"

என்று புலம்பியதாக வரைந்துள்ள குறிப்பும் இதனையே வலியுறுத்தும். உடல் வரின் உபாதியும் உடனே வரும். மூவரும் தேவரும் தவிர்க்க முடியாதபடி வரும் வலிய வினையின் பயனே இயற்கையென மறுபிறவியில் வேறு பெயர் கொண்டு தன் கடமையைச் செய்ய முற்படுகின்றது. இதனை நன்குணர்ந்த பெரியார் பலர்

"இல்லாத தில்லை யுளது தவிராதென்று
நல்லோர் துணிபொருளை நாடுங்கால்—எல்லாம்
அமைந்தபடி யேவருமால் ஆங்கதைவென் னெஞ்சே
சமைந்தபொருள் தாமறிவார் தாம்" என்றும்





"நீடுந் தலைகீழ்கால் மேலாகி நின்றாலும்
கூடும் படியன்றிக் கூடாதால்—ஓடி
வருந்தாம லுள்ளபடி வந்திடக்கண் டாறி
இருந்தாலோ நெஞ்சே யினி"

எனவும் பலபடக் கூறியுள்ளார்.

கடந்த பிறவியின் பயன் இப் பிறவியிற் காரியப் படுவதுபோலவே இப் பிறவியிற் செய்யும் நல்வினை தீவினையின் பயன்களும் இனி வரும் பிறவிகளில் காரியப்படு மாதலின் இப் பிறவியில் பழவினைக் கீடாக அனுபவிக்கப்படும் துன்பங்களுக்கு வருந்துவதும், அவ்வருத்தம் காரணமாய் மனவமைதி யிழந்து தீமை செய்யத் துணிவதும் விவேகமன்று. நல்லோர் துன்புறுதலினால் இக் காலத்தில் நன்மை செய்வது தவறு; தீமையாளரே சுகிக்கின்றனர் என்று தீமையைப் புகழ்ந்து போற்றும் பற்பலரைக் காண்கின்றோம். இஃது மனமயக்கமன்றி உண்மையன்று. இதற்கொரு கதை உதாரணமாக வழக்கிலுண்டு. அதாவது—நல்லொழுக்கமுடைய ஒரு வாலிபனும் தீயொழுக்கமுடைய ஒரு வாலிபனும் ஒரு சாலையில் சென்றனர். தீ யொழுக்கினன் தனது கொள்கையைச் சிறப்பித்து அதையே கடைப்பிடிக்க வேண்டுமெனக் கூறினன்.

மற்ற நல்லொழுக்கினனும் தனது கோட்பாடே சிறந்ததென வாதாடினன். இதற்குள் தீயவன் காலடியில் ஒரு சிறு நாணயம் அகப்பட்டது. நல்லோன் காலில் ஒரு கூரிய முள் தைத்தது. தீயவன் வாதம் நிலைப்பதற்கு இச் சம்பவம் துணையாயிற்று. நல்லோன் தனது உறுதியில் நின்றும் கலக்கமெய்தினான். எனினும் அவன் மனம் அமைதி பெறாது அடுத்திருந்த ஒரு பெரியாரை யடைந்து தங்களுக்குள் நேர்ந்த விவாதத்தினையும் ஏற்பட்ட நிகழ்ச்சியையும் எடுத்துக் கூறி இதன் உண்மைக் காரணத்தினை யுணர்த்தித் தெளிவுபடுத்த வேண்டினான்.

அப்பெரியார் மனமகிழ்ந்து இளைஞர்களை நோக்கி அறம் சிறந்ததே. மறம் தாழ்ந்ததே. அவை ஒருபோதும் பிறழா. தீயவன் தனது தீமையினால் தனக்குக் கிடைக்கவிருந்த பெருநிதியை இழந்து சிறிய ஓர் நாணயத்தினையே பெற்றான். நீ உனது நன்மையைப் பற்றுதலினால் ஒரு கிருஷ்ண ஸர்ப்பத்தின் பற்களுக் கிலக்காக வேண்டிய கேடு நீங்கப் பெற்றுச் சிறு முள்ளினால் கீறப்பட்டனை. இவ்வாறு கண்டுகொள்ளுங்கள் என்றருளினார். தீயவனும் திருந்தினான். இக் கதையினால் நாம் அறியக் கிடப்பது தற்காலம் நாம் படும் துன்பத்தினால் மனமருண்டு நன்மையில் தவறக்கூடாதென்னும் செம்பொருளேயாகும். தீயோரும் பலர் சுகிப்பது அவரது முற்பிறவியின் நல்வினைப் பயனேயாகும்; இப்போது செய்யும் தீமையின் பயனன்று என்பது மறுக்க முடியாத உண்மை. ஆதலினால் பெரியோர் குறித்த நெறியையே கடைப்பிடித்தொழுகுதல் மறுமைக்கு நலம் பயப்பதாகும். இப் பகுத்தறிவினாலாகிய பேரறிவாண்மை மனிதருக்கே உரித்தாய் உளது. இவ்வறிவு கொண்டே அடங்கா மதமும் உடல் வன்மையும் உடைய யானையை மெலிந்த வுடல் உரமுடைய மனிதன் அடக்கி யாள்கின்றான். மிருகேந்திரனாகிய சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களும் தம் வன்மையை மறந்து சில சமயங்களில் மனித

னால் ஆட்டி வைக்கப்படுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இவைகளினால் எல்லாப் பிறவிகளிலும் மனிதப்பிறவி அரிதென்பது தெளிவாகின்றது. உடல் உரத்தினைவிட அறிவின் வன்மையே சிறந்ததென்பதும் விளங்குகின்றது. இதைப் பயன்படுத்த முயலாத பேதையர்கட்கும் பயன்படுத்திச் சிறந்த பெரியார்கட்கும் உதாரணமாக,

மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு மரமுமுண்டு
மனிதரிலும் நீர்வாழும் சாதியுண்டு அநேககுல மனிதருண்டு
மனிதரிலே மனிதருண்டு வானவரு மனிதராய் வருவதுண்டு

மனிதரிலே பிறப்பதுக்க ளுருவதே யருமையென வகுத்தார் முன்னோர் என்ற செய்யுளும் நிலவிவருகிறது. பகுத்தறிவினால் வினைசெய்வோர்களிலும் இரு பிரிவினர்களைக் காண்கின்றோம். அவர்கள் சாமானிய தருமத்தைப்பற்றி ஒழுகுவோர் விசேஷ தருமத்தைப்பற்றி ஒழுகுவோர் எனப்படுவர்.

பகுத்தறிவின் பயனாக மேலும் ஒருபடி சென்று எத்தகைய எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது தமதறிவின்படி ஒழுகுபவரே விசேஷ தருமம் மேற்கொண்டவராவர். இதற்கு விபீஷணர், பிரகலாதன், துருவன், பரதன், திருநாவுக்கரசர், வாதவூரடிகள் முதலியோரைக் குறிப்பிடலாம். இவர்களைப் போல் அஞ்சுவ தெவ்வகையிலுமின்றி உயிரையும் துரும்பென மதித்து உண்மைத்தியாகியாவோர்களைத் தற்காலத்தில் நமது மாபெருந் தலைவர் ஸத்தியாக்கிரகிகள் எனும் பெயரால் அழைக்கின்றார். சுயநலம் என்பதை முற்றிலும் துறந்தாலல்லது உண்மை ஸத்தியாக்கிரகி அல்லது விசேஷ தர்மாநுஷ்டானி ஆக முடியாது. தந்தை சொல் தாங்கிய சாமானிய தருமம் இராமர் கொள்கை. தவறெனக் கண்டதால் எவர் சொல்லையும் ஏற்காது மறுத்துத் துறவுபூண்ட பரதர் கொள்கை விசேஷ தருமத்திற்கு உதாரணமாகும்.

சகோதரனுக்கு ஆபத்துற்றுழி சத்துருவைச் சார்ந்த மன உறுதி விபீஷணரின் விசேஷ தருமத்திற்கு இலக்கியம். குற்றமென்று தெரிந்தும் மாற்றானுக் கிடங்கொடுத்தல் பிழையென வுணர்ந்து போர்க்களத்தில் உயிர்விடத் துணிந்த கும்பகருணன் செயல் சாமானிய தருமத்திற்குதாரணம். விதுரர் விசேஷ தருமத்தினை மேற்கொண்டவர். தற்காலத்திலும் நம் கண்முன் விசேஷதரும வீரராக மகாத்மா காந்தியடிகள் சான்றாக விளங்குகின்றார்.

அப்பமூர்த்திகள் அருளியவாறு அடிகளுக்கு அச்சம் எதிலுமில்லை. அஞ்ச வருவதுமில்லை. சுயநலம் சுட்டெரித்த சுத்தர்களுக்கு அஞ்சத்தக்கது எது? உலகில் மறலிபயம், மன்மதபயம் இரண்டே யுண்டு. அவ்விரண்டையும் வென்றவராக சிவபெருமானைச் சுட்டியிருப்பதே அவரது ஒப்புவமையற்ற ஒரு தனிக் கடவுள் என்பதை யுணர்த்தும் என்று ததீசி முனிவர் தக்க யாகத்தில் எடுத்துக் காட்டுகிறார். பின்னாளில் அரத்த சிவாசாரியாரும் இதனையே குறிப்பிட்டிருக்கிறார். இத்தகைய செயற்கை யறத்திற்குத் தான் பெற்ற அரிய பகுத்தறிவினால் தன்னை தத்தம் செய்துகொள்ளுவதற்கு பயிற்சி பெறலே சிறந்ததாகும். இத்தகைய வீரம் எந்நாட்டினரிலும் எம்மதத்தினரிலும் உதித்

" எக்காலத்தும் ஒழுக்கத்தை ஒரு ஆபரணமாகக் கொண்டிரு."



திருக்கின்றது. மகம்மதிய மதத்திலுதித்த கபீர் தாஸரும் இத்தகையாண்மைப் போறிவாளரே. சாமானிய தருமிகளுக்கு விசேஷ தருமிகளின் போக்கு அங்கீகரிக்க முடியாததும் புறக்கணிக்கக் கூடியதும் ஆகவே தோன்றும். பாரமார்த்திக விஷயத்தில் மட்டிலன்றி இலௌகிக மார்க்கத்திலும் இவ்விரு வேற்றுமைகளும் இருப்பதியற்கை. உதாரணமாக அரசியல்வாதிகளில் சாமானிய தருமிகளுக்கு இணையாக மிதவாதிகளையும் விசேஷ தருமிகளுக்குவமையாக அமிதவாதிகளையும் காண்கின்றோம். அவரவர்கள் கொள்கை அதிக நேர்மையுள்ளதென அவரவர்கள் கருதினாலும் நடு நிலையிலுள்ளோர் விசேஷ தருமிகளாகிய அமிதவாதிகளைப் போற்றுவர், புகழ்வர், தொடர்வர். ஏன்? அவர்கள் துன்பத்தீயில் பிரவேசிக்கின்றனர்! எல்லாச் சுகங்களையும் துறக்கின்றனர்! உண்மை ஞானம் வந்தாலன்றி ஒதுக்க முடியாத ஆத்ம பந்துக்களை மறக்கின்றனர். தேசப்பணிவிடைக்கு ஆட்பட்டோம் என்கிற பெரிய ஆறுதல் பெறுகின்றனர். சாமானிய தருமிகளாகிய மிதவாதிகளுக்கோ செல்வாக்கில் சுகத்தில் சிறிதளவு நஷ்டமும் இல்லை. புத்திசாதுரியத்தால் தீர்மானங்களை நிறைவேற்றுகின்றனர். வெளிவரவேண்டிய தக்க தருணத்தில் நொண்டிச் சமாதானம் கூறி விலகி நிற்கின்றனர். பொதுவுலகம் எவர்களைப் போற்றும்? இதுபோலவே ஸநாதன தருமங்களை அநுஷ்டிப்பதிலும் இரு பிரிவினர் உண்டு. அவர்களில் விசேஷ தருமத்தைச் செயற்கையின் பாற்பட்ட பகுத்தறிவினால் மேற் கொள்பவரே அழியாது என்றும் புகழுடம்பு கொண்டு பொலிகின்றனர். இத்தகைய விசேஷ அறிவாற்றலினால் வினை செய்பவர் ஒருவர் இருப்பினும் அவர் உலகமே யாவர். உலகமே அவராகும். அவ்வொருவர் பொருட்டாலேயே மக்களினம் பெருமை பெறுகின்றது. இத்தகைய பெரிய ஆற்றலின் கண் இடையீடின்றி ஊடுருவி நிற்கவேண்டியது தெய்வ நம்பிக்கை.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்றருளிய நாயனாரின் தெய்வ வாக்கு இதனையே சுட்டும். தெய்வ நம்பிக்கையற்ற பகுத்தறிவு உயிரற்ற ஓவிய அமைப்பிற்கே இணையாகும். அகிலவுலகத்தினரும் ஒரு மனதாய்ப் பெரியார் எனப் போற்றும் நம தாண்டகையடிகளார் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஆண்டவன் அனுமதி பெற்றே சட்ட மறுப்பு முதலிய எல்லாத் தலையீடுகளிலும் பிரவேசிப்பதாக விளக்கி வருகின்றார். உலகில் நிலவும் பழைய சரித்திரங்களில் எண்ணிறந்த பெரியார் உளர் —இறந்தாரை யெழுப்பியவர்களும் ஐம்பெரும் பூதங்களின் இயற்கை யாற்றலையும் கட்டுப்படுத்தியவர்களும் உண்டு. எனினும் அஃதெல்லாம் அவர்கள் ஆத்மசக்தியின் வளர்ச்சியினாலேயே சாத்தியப்பட்டன. அதே ஆத்ம சக்தியினால் தான் அடிகளும் உலக எண்ணத்தையே ஒரு முகப்படுத்தியிருக்கிறார். ஆனால் அத்தகைய செயற்கரும் சித்துகளைச் செய்தோரும் ஒரு சிலரை அல்லது ஒரு பிரிவினரை வசப்படுத்தினர் என்பதும் நமது அடிகள் எவ்விதச் சித்தும் செய்யாமலே பலகோடி மாந்தர்களையும் (ஸ்பரிசவேதி காரிரும்பைத் தங்கமாக்குவதுபோல) தன்னலந் துறந்து ஆசாபங்கமற்றுத் துன்பமேற்கும் துணிவுள்ள ஆண்மைச் சத்தியாக்கிரகிகளாக்கி விட்டனர்.

" ஏர்த்தொழிலே சீர்த்தொழில்."

பண்டைப் பெரியார் ஒரு சிலரை வசப்படுத்தினரேயன்றித் தம்மைப்போல் தியாகத்திற்குத் தொடர்ந்து வரும்படி செய்யவில்லை. அடிகள் தீவிர ஆன்மசக்தியின் முதிர்ச்சி மிருக வுணர்ச்சியுடைய பலரையும் பற்றற்ற பரம யோகிகளின் தன்மைக்கு ஒப்பிடும்படி செய்யவல்லதாகியது. இதனால் எல்லா யுகங்களிலும் எல்லா நாட்டினிலும் தோன்றிய பெரியார்களின் ஆன்மசக்தியின் வளர்ச்சியளவை விட மிக மிக மேம்பட்டதென்பது உண்மை. இத்துணைப் போராற்றலை மனிதன் தனது பகுத்தறிவினால் பெறுவது சாத்தியமா யிருப்பதினாலேயே பகுத்தறிவின் பெருமை மதிக்கமுடியாததாகின்றது. பகுத்தறிவை எவ்வளவு தூரம் பயன்படுத்த முடியுமென்பதற்கு மேற்கோளாகவே அடிகள் நிலை எடுத்துக் காட்டலாயிற்று.

இவ்வுண்மையிலும் ஒரு சிலர், தன்னை நேரில் காணாத கோடிக்கணக்கான பிரஜைகளையும் (தன் பெயரையும் ஆணையையும் கேட்டமாத்திரத்தில்) பெருந் தியாகிகளாகும்படி செய்விக்கவல்ல ஆற்றலைவிடச் சித்து விளையாடல் செய்வது அரிதென எண்ணுகின்றனர். இது தவறு. தாருகா வனத்திலிருந்த தபோநிதிகள் தமது தவ வன்மையால் யானை, புலி, மான் முதலிய பலவற்றினையும் ஓமத் தீயில் உற்பவிக்கச் செய்தனர். அத்துணையாற்றல் படைத்திருந்தும் அவர் பெற்ற சிறப்பொன்றுமில்லை. தான் என்னும் முனைப்பு மிக்குத் தலைமைக் கடவுள் உண்டென்பதைப் புறக்கணித்ததே அவர் செய்த தவம் வீழ்ந்து பட்டமைக்குக் காரணம். ஆபிசார ஹோமத்தில் பிறரைக் கொல்லும் துர்த் தேவதைகளை யுற்பவிக்கச்செய்யம் வன்மையுள்ள துறவிகள் சிலருடைய வரலாறுகளும் கேட்டிருக்கின்றோம். மனமடக்கமில்லாமலும் தெய்வநம்பிக்கையில்லாமலும் ஒருவர் அபிவிருத்திசெய்யும் தவமும் ஆன்மசக்தியும் அவலமாகப் போவதன்றி வேறுண்டோ? இத்தகைய உயரிய பயிற்சியையே ஆன்றோர் பிரம்ம வித்தையெனக் கூறினர். அதற்குத் தங்களைப் பண்படுத்திக்கொள்ளுவது ஒவ்வொருவருக்கும் கடமையாகும். அரசியல் வழியிலும் இத்தகைய பயிற்சிபெறத் தேசமக்களை ஈடுபடுத்தியிருக்கும் பெரியாரின் புதுமுயற்சிக்குத் தேசம் என்ன கைம்மாறியற்றப் போகின்றது? காரியசித்தியாயினும் இப்பயிற்சி குன்றாது வளர்ந்துவரல் வேண்டும். அவ்வாறு வளர்க்கப்படுமேல் அத்தகைய குடி மக்களால் அலங்கரிக்கப்படுவதே ராமராஜ்யம். இதையே ஸ்தாபிக்கவேண்டுமென்பது மகாத்மாவின் விருப்பம். அவர் வேட்கை வெற்றி பெறுகின்றது. பெற்றது. ஓம் சுபம்.

சிலர் செய்யும் அக்கிரமச் செயல்களுக்குக் கடவுள் சிறிது நாட்கள் கழித்து தண்டிக்கிறார். சிலருக்கோ உடனுக்குடனேயே காட்டிவிடுகிறார்.

***

நான்கைந்து முறை இன்ஜக்ஷன் செய்துகொண்டவர்களுக்கு அது ஒரு கஷ்டமாகத் தோணுகிறதில்லை. புதிதாகச் செய்துகொள்வோர் படும் திகிலுக்கோ ஓர் அளவில்லை.

***

நாடகம் நடந்துகொண்டே யிருக்கும்போது இடையில் எழுந்து வீட்டுக்கு வந்துவிடுவதிலும் ஒரு கௌரவம்போலும்.

---

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்."

# "காகுத்தன் கன்னிப்போர்"

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பி. ஏ.

"விரிந்திடுதீ வினைசெய்த வெவ்வியதீ வினையாலும்
அருங்கடையின் மறையறைந்த அறஞ்செய்த அறத்தாலும்
இருங்கடகக் கரதலத்து எழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலையென் பவள்பயந்தாள்"

என்பது முனிவர் மொழிந்த முதுமொழியாக, இராம காதையில் இராமன் பிறப்பு இலங்கக் காண்கின்றோம். இக் கலைகளின் பெருங்கடல் கடந்த கல்வியாளனான காகுத்தனின் கன்னிப்போர், கன்னிப்போராயே அமைந்தது போற்றத் தக்கதொரு பொருளாகும். இவ்விராமனோ இளவயதுடையவன், படையூற்றமில்லாத சிறியவன், அவன் ஏற்று நிற்கும் போரையும், அப்போரில் அவனது அம்பிற்கு இலக்காய் நிற்கும் அரக்கியின் ஆற்றலையும் ஒப்பிட்டு நோக்கில் உவமை சிறிதும் இன்று என்று காண்போம். இப்போரேற்று நிற்குமுன், விற்பயிற்சியாவது உடையவனா இவன் என்றாலோ அதுவுமில்லை. இந்த நிலையில் ஏற்ற போரில் வெற்றிபெற்ற வீரனது வீரமே வீரம். இந்தக் காகுத்தன் கன்னிப்போரைக் கவியரசர் கம்பர் பெருமான் தமது கவிநலத்தில் அமைத்துக் காட்டும் திறன் நாம் கண்டு மகிழ்வதற்குரிய ஓர் இடமாகும். இந்தப் போர் இராமனே உவந்தேற்ற போர் என்பர் சிலர், அன்று முனிவிதியை மேற்கொண்டு மாமுனி பணி மறாத காகுத்தன் இக்கன்னிப் போரை ஏற்று நின்றான் என்பர் பலர். இவ்விருவரது கூற்றையும் உற்று நோக்கி, இத்தாடகை வதையின் தன்மையை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

முனிவன்பின் போந்த மன்னவன் மைந்தன், கண்டால் நயனமும், நினைத்தால் உள்ளமும், சொன்னால் சொல்லிய நாவும் வேகும் வெம்மையையுடைய கடுஞ்சுரத்தைக் காண்கின்றான். அறநெறிவழாத அரசனது நாட்டில் நீர்வளமும் நிலவளமும் எவ்விடத்தும் குறையா என்பது தமிழர் தம் கொள்கையாதலின், தன் தாதை தயரதன் தண்ணளியால் உலகு புரக்கும் பொழுது, இக் கடுஞ்சுரம் ஒன்றும் அவனது அரசியலில் இருக்கவேண்டுவது அவசியமின்றே என்று எண்ணுகின்றான் காகுத்தன். இப் பாலைவனம், பொன்விலைப் பாவையர் மனம்போல் பசையற்றிருப்பதற்குக் காரணம், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் நெற்றிக் கண்ணின் வெப்பத்தால் நேர்ந்ததா யிருக்கலாமோ என்ற ஐயமும் இவன் உள்ளத்தில் எழுகின்றது. இவ்வையங்களைத் தீர்த்து, உண்மை யறிவான் விரும்பி,

சுழிபடு கங்கையந் தொங்கல் மௌலியான்
விழிபட வெந்ததோ வேறுதா னுண்டோ
பழிபடா மன்னவன் படைத்த நாட்டினூங்
கழிவதென் காரணம் அறிஞ! கூறென்று

இராமன் முனிவனைக் கேட்கின்றான். கேட்ட கேள்விக்கு மாற்றமுரையாது, இராமனை நோக்கி,

"......................................இன்னுயிர்
கொன்றுழல் வாழ்க்கையள் கூற்றின் தோற்றத்தள்
அன்றியும் ஐயிரு நூறு மையன்மா
ஒன்றிய வாயினள் உறுதிகேள்"

எனத் தாடகையின் கதையைச் செப்ப விரைகின்றார் விஸ்வாமித்திரர். அவ ளது வெருவரு தோற்றத்தையும், அவளது ஆற்றலையும், அவளது வரலாற்றை யும் விரித்துரைத்து, அவள் தன் மக்களாம் மாரீசனும் சுவாகுவும் பழிபடா மன்னவன் படைத்த நாட்டினை அழித்துத் திரியும் திறனையும் இயம்பி,

"உளப்பரும் பிணிப்புறு உலோப மொன்றுமே
அளப்பருங் குணங்களை அழிக்கு மாறுபோல்
கிளப்பருங் கொடுமைய அரக்கி கேடிலா
வளப்பரு மருதவைப் பழித்து மாற்றினாள்"

என்று வளம்பொருந்திய நாடு பாலையாக மாறிக் கிடப்பதற்கு காரணம் காட்டுகின்றார்.

முற்றுந் துறந்த முனிவன், புனைவன புனைந்து, புதுவது புதுக்கி தன் ஆற்றல் முழுவதையும், தாடகையின் ஆற்றலையும், அவளது கொடிய செய்கை யையும் எடுத்துரைப்பதில் செலவழித்து, இராமனுக்குச் சினமூட்ட விரும்பி யும், அக் கோமகன், தன்னிடம் இயற்கையாய் அமைந்த அமைதியோடு,

"கொங்குறை நறைக்குல மலர்ச்செனி குலக்கா
எங்குறை வதித்தொழி லியற்றுபவள்"

என்று கேட்கின்றான். அவ் வுரைகேட்ட முனிவன், அவள் இவ்வனத்தில் உறைபவளே என அவளது உறைவிடம் கூறுமுன், அப் பெருமகளே இராம னது தோற்றத்தில், மைவரை நெருப்பெரிய வந்ததெனவந்து சேர்கின் றாள். அவளது தோற்றத்தையும் அவள் தொடங்கிய வினையின் பயனையும், அவள் வந்த பரிசினையும் உணர்ந்தும் இப் பெருந்தகையான இராமன், "பெண்ணென மனத்திடை நினைந்து தான் போரேற்று நிற்க நினைந்திலன்" அவளது "ஆவி உண்ண அடுகணை தொடுக்கிலன்." இந்த நிலையில் இராமனைக் கண்ட மாதவன், இப் பெருமகளைக் கொல்வதே நீதிமுறையாகும் என்று கூறி, அதற்குச் சான்று பகர விரைகின்றான். "மன்னர் மன்னவன் காதல்! பிறப்பினால் இவள் பெண் தோற்றமுடையவளே யாயினும், உருவத்தாலும், அவள் ஏற்றுநிற்கும் தொழிலாலும், பெண் தன்மை இழந்த பெரியாளாகவே விளங்குகின்றாள். பெண்ணைக் கொல்லுதல் பாபம், அது அரச தருமம் அன்று என்று கூறுவையாயின், பிருகுவின் மனைவியான கியாதியைத் திரு மாலும், குமதி என்பவளை இந்திரனும் கொன்றுள்ள செயல்களை உற்று நோக்குக. மற்றும் எல்லாவிடத்தும் கொலைதீது, என்று எனக்கும் நீதி கூறுவாயாயின், தீச்செயல் புரிவோர் எப்பாலவராயினும், அவர்க்குச் சிறிதும் இரக்கம் காட்டாது, ஒறுத்தலே முறையாகும்; அதுவே அரச தருமமும் ஆகும்" என்று பன்னிப்பன்னி, இத் தாடகையைக் கொல்லவேண்டுவது அவசியமே என்று பல காரணங்களை எடுத்துக் காட்டுகின்றார் முனிவர் பெருமகன். முனிவரது உள்ளத்தில், தாம் ஏவி இக்கருமஞ் செய்தான் இராமன் என்னும் பழி தம்மைச் சேர்வதைக் காட்டிலும், அக்கோமனை

" கழுதை யறியுமோ கற்பூர வாசனை."



சிந்தை பொருந்தி அவ்வரக்கியைக் கொல்வது தன் கடனே என்பதை உணர்ந்து செய்வதே பொருத்தமுடைத்து என்று கருதி அதற்கு வேண்டும் முயற்சிகள் பலவும் செய்து பார்க்கின்றார். ஆனால் அப்பெருமகனோ தாட கையை வதைப்பது தன் கடன் அன்று என்பதை உணர்ந்தவனாய், முனிவ ரது ஏவலையே எதிர்பார்த்த வண்ணம், விற்குனியாது நிற்கின்றான். இனி, தமது முயற்சி பயன்படாதது கண்ட முனிவர்,

"ஈறினல்லறம் பார்த்திசைத் தேனிவட்
சீறினல்லது செப்புகின்றே னலேன்
ஆறிநின்றது அறனன்று அரக்கியை
கோறியென்றெதிர் அந்தணன் கூறினான்"

"ஐயனங்கது கேட்டற னல்லவும்
எய்தினாலது செய்கவென் றேவினால்
மெய்யநின் னுரைவேத மெனக்கொடு
செய்கையன்றோ அறஞ்செய்யு மாறென்றான்"

முனிவர் தம் பணியை தலைமேற்கொண்ட காருத்தன் முனிவர் தம் பணியை முடிப்பது கடனெனக் குறித்தானே யன்றித் தான் ஏற்றுநின்ற செயலைத் தனக் குவந்த செயலாகக் கொண்டிலன் என்பதே கம்பர்தங்கருத்தாய் இலங்கக் காண்கின்றோம். இக் கருத்தையே கம்பர் பலவிடத்தும் வலியுறுத்தவும் பார்க்கின்றோம்.

"வயதின் இளமையாலும் போரின் முதன்மையாலும், போருக் கிலக்காய் நின்ற அரக்கியின் ஆற்றலாலும்," இராம சரிதத்திலேயே இராமனது புகழிற்கு முக்கியமான ஒரு சான்றாய் இவ்வெற்றி அமைந்திருக்க, இவ்விராம காதையில் வரும் மற்றும் பாத்திரங்கள் பலரும் இவ் வெற்றியை எடுத்தியம்பாதே செல்கின்றார் என்பது குறிக்கத்தக்கது. தண்ணளி மிகுந்த தயாதன், தன் காதல் மைந்தனது புகழை, ஐவரை அறுவராக்கிய வசிட்டர் எடுத்தியம்பக் கேட்டபொழுது அப் பெரு மகனைப் "பெற்றவன்றினும் பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில் இற்ற அன்றி னும், எறிமழுவாளன் இழுக்கம் உற்ற அன்றினும் பெரியதோர் உவகைய னாய்" இலங்குகின்ற பெருமையைப் போற்றி யுரைக்கும் கம்பர் கவிநலத்தில் தாடகையை வதைத்த பெருமை இடம் பெற்றிலது. இராமகாதை முழு வதையும் ஆய்ந்து பார்த்தாலும், இவ்வரிய செயலைப் போற்றுவார் விசுவாமித் திரரை யன்றி வேறொருவருமிலர் என்று காண்போம். அரக்கரில் ஒன்றிரண்டு பேர் இப் போரைப்பற்றிப் பேசுவார்களானால் அதுவும் ஆத்திரத்தால் பேசும் சொற்களேயன்றி இராமனது ஆற்றலைப் புகழ்ந்து பேசும் சொற்களாக அமைய வில்லை என்பது வெள்ளிடை மலை. ஆனால் பணியேவிய முனிவன் மட்டும், எவ்விடத்தும், எவரிடத்தும், எக்காலத்தும், இராமன் தாடகையை வதைத்த பெருமையையே எடுத்தெடுத் தியம்பி மகிழ்கின்றான். கற்பிழந்த காரிகை கல்லா யமைந்திருக்க அக்கல்லில், இராமனது பாததூளியின் பரிசமெய்தவும், சாபம் நீங்கி நிற்கின்றனள். அவ்விடத்து, இக்கோமகனது கால் வண் ணத்தைப் போற்ற விரும்பிய முனிவர், "மழைவண்ணத் தண்ணலே! உன் கைவண்ணம் அங்குக் கண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்" என்று கூறித் தாடகையைக் கொன்ற புகழை இராமனுக்குப் புனைந்து பார்க்கின்றார்.

"வித்தையின் பொருட்டுச் செலவிட்ட பணம் வீண்போகாது"

பின்னும் கோதமன் காதலன் சதானந்தரிடம் இவ்விராமனை அறிமுகம் செய்துவைக்கும் வாயிலாய்,

"வடித்த மாதவ! கேட்டி! இவ்வள்ளல்தான்
இடித்த வெங்குரல் தாடகை யாக்கையும்
அடுத்தென் வேள்வியும் நின்னன்னை சாபமும்
முடித்து என்னெஞ்சத்திடர் முடித்தா னென்று"

போற்றி யுரைக்கின்றார். இம்மட்டன்று, இன்னும் ஜனகனது பேரவையில் மன்னன் மைந்தனின் குலமுறை கிளத்தி வீரனின் ஆற்றலைப் போற்றி யுரைக்கும் மாற்றமாய்,

"அலையுருவக் கடலுருவத் தாண்டகைதன் நீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை நீயுருவ நோக்கையா
உலையுருவக் கனலுமிழ் கட்டாடகைதன் உரமுருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவிற் றொருவாளி"

என்று தான் கொண்ட கருமத்தை மறவாது ஏற்ற இடந்தோறும் போற்றி யுரைக்கின்றார்.

இவையெல்லாம் ஒருபுற மிருக்க இன்னும் ஒரே ஒரு இடமட்டும் உற்று நோக்கத்தக்கதாய் அமைந்திருக்கின்றது. இராமனது முடிசூட்டை நிறுத்து வான் விரும்பி, சூழ்ச்சி செய்யத் துணிந்த கிழக் கூனி, தன் தலைவியை யடுத்து, இராமனது முடிசூட்டுவிழா நாளையே அமைந்துளது என்று கூறி அவ ளது மனத்தில் இராமன் பால் ஓர் குற்றங்கற்பிக்க விரும்பியவள், வேறொரு செயலையும் எடுத்தாளாது, இத்தாடகை வதையையே எடுத்தியம்புகின்றாள்.

"ஆடவர் நகையுற ஆண்மை மாசுற
தாடகை எனும் பெயர்த் தையலாள்படக்
கோடியவரிசிலை இராமன் கோமுடி
சூடுவன் நாளை வாழ்விதெனச் சொல்லினாள்."

இதனால் கேகயர் கோமகளின் மனம் திரும்பியதும் திரும்பாததையும் ஆராய்ச்சி செய்யப் புகுந்தேமல்லேம். மற்றும் இராமனது புகழையும், இச் செயலை உரையாணியாகக் கொண்டு ஆராயப் புகுந்தேமல்லேம். ஆனால் ஒன்று மட்டும் கூற விழைகின்றேம். இப் பெண்ணைக் கொன்ற பெரும்பிழை இராமனது பகைவர்கள் இராமன்பால் ஓர் குற்றம் கற்பிக்க விரும்பிய காலையில் ஓர் வாயிலக்காக அமைந்ததே யொழிய, புகழ் பொருந்திய செயலாக அமைய வில்லை என்பதே கவியரசர் கம்பர் கருத்தாகும். அதுவே என் தாழ்மையான கருத்தும் ஆகும்.

இக் கருத்தை வலியுறுத்தவும், இப்பழி இராமனைச் சாராது முனிவரைச் சாரவும் உதவிபுரிந்த பெருமகன் நமது கவியரசர் கம்பரே யாவர். முனிவிதியை மேற்கொண்டு நின்றவனே இராமன் என்பதும், இராமன் ஏற்றுகின்ற போர் கவியரசர் கம்பர் கவிநலத்தில் மாமுனி பணிமறுத காகுத்தன் கன்னிப் போராய் அமைந்திருக்கிறதென்பதும் இதுவரை கூறிய ஒரு சில சான்றுகளால் தெள்ளிதில் விளங்கும் என்று கூறி என்பணி முடிக்கின்றேன்—திருவருள் முன்னிற்க—சுபம்.

---

"உடையவன் பாராத பயிர் ஒரு முழங் கட்டை."

# மேனாட்டுத் தத்துவம்

(கி. பாலசுப்பிரமணியன், M. A.)

தத்துவ ஆராய்ச்சியின் வாஸஸ்தலம் நம் பரதநாடே. அநேக மகான்கள் தேவானுக்கிரகம் பெற்று அரியபெரிய நூல்களை இயற்றியிருப்பது மல்லாமல், எண்ணிறந்த பேர் அரிய சித்தாந்தங்களையும் மதக் கோட்பாடுகளையும் தத்தம் சிஷ்யர்களுக்குப் போதித்து அவர்கள் மூலமாக உலகத்தில் பரவ ஏற்பாடும் செய்திருக்கின்றனர். நம் நாட்டில் ஜாதிமத வித்தியாசங்களின்றி எல்லோரும் உலகத்தின் தன்மையைப்பற்றி அடிக்கடி யோசிப்பது வெளிப்படை. சிறு குழந்தைகளும் இம்மஹா ரகஸியங்களைப் பற்றிப் பேசுவதைக் காணும்போது பெரும்பாலார் நமது தேக அமைப்பிலேயே தத்துவம் ஓர் அங்கமோ என்று வியக்கின்றனர்.

நமது தேயத்தின் தத்துவ் நூல்கள் அநேகருக்குத் தெரிந்திருக்கின்றன. ஒவ்வொரு தேயத்திலும் இம்மாதிரி நூல்களை இயற்றிய மகான்கள் பாராட்டப் படுகின்றனர். ஜாதி, மதம், நிறம் முதலிய பேதங்களிருந்தும் சாதாரணமாக மனிதருடைய நடவடிக்கைகளும் குணாதிசயங்களும் உலகத்தின் எல்லாப் பக்கங்களிலும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கின்றன. அப்படியே அவர்கள் எண்ணும் எண்ணங்களும் ஒன்றாகவே இருக்கின்றன. ஆகவே நமது தேயத்தில் இத்தேகம் எத்தன்மையது? நம் மனத்திற்கும் தேகத்திற்கும் உள்ள சம்பந்தமென்ன? இவ்வுலகத்திற்கும் நமக்கும் ஏதேனும் பற்றுளதா? இவ்வுலகத்தைப் படைத்தோன் ஒருவன் உளனாயின் அவனுக்கும் நமக்கும் யாது சம்பந்தம்? என்பனபோன்ற ஆராய்ச்சிகள் இருப்பது போலவே, உலகத்தில் அநேகரால் பண்டைக்காலத்திலிருந்து நடைமுறையிலும் வந்திருக்கின்றன. நம் நாட்டுத் தத்துவம் கசடறக் கற்றறிந்தோர் மேல் நாட்டுத் தத்துவத்தையறிய விரும்புவராதலின் அத்தத்துவ சரித்திரத்தை எடுத்துரைக்கத் துணிந்தனன்.

முதலில் தத்துவம் என்பது எதைக் குறித்தது? ஒரு குழந்தை பிறந்தவுடன் அதற்கு ஒன்றும் தெரிவதில்லை. எதிரிலிருக்கும் மனிதரையோ பொருளையோ பார்ப்பதற்கும் கூடுவதில்லை. கொஞ்ச நாட்கள் பொறுத்தே, தாயார், தந்தை, உறவினர், அன்னியர் முதலிய வேறுபாடுகள் தோன்றுகின்றன. தான் பார்க்கும் விஷயங்கள் ஒவ்வொன்றிற்கும் பெயர் அறிந்தவுடன் அவைகளை மனதில் பதியவைத்துக் கொள்ளுகிறது. காக்கையைப் பார்த்தால், "காகம் கருமை நிறமாகவிருக்கிறது. சரி, கருமை நிறமுள்ளதெல்லாம் காகம்" என்று ஒரு சித்தாந்தை ஏற்படுத்திக் கொள்ளுகிறது. பிறகு எவரேனும் அது

---

"கற்பும் நல்லொழுக்கமும் இல்லாத அழகு மணமில்லாத மலர்போன்றதாகும்."

தவறு என்றும் வித்தியாஸம் இன்னதென்றும் சொன்னால் அந்த வித்தியாஸத்தை ஞாபகம் வைத்துக்கொள்கிறது. வயது செல்லச் செல்ல, பார்க்கும் வஸ்துக்களும் கேட்கும் விஷயங்களும் அதிகமாக, உலகம் இதுபோன்றது என்று ஒருவிதத் தீர்மானத்திற்கு வருகிறது. எப்படிச் சித்திரம் எழுதுபவன் அநேக சம்பந்தமற்ற கோடுகளை இழுத்து, வர்ணங்களைக் கொண்டு அவைகளை யெல்லாம் உருவாக்கி நேர்த்தியானதொரு சித்திரத்தை தயாரிக்கின்றானோ அதுவே போல் நாம் ஒவ்வொருவரும் குழந்தைப் பருவமுதல் மனத்திற்குள் சித்திரங்களை எழுதி அதை நாளுக்கு நாள் ஒழுங்குபடுத்திக் கொண்டு வருகிறோம். அனுபவம் என்பது உலகத்தன்மையை அறிவதே ஆகும். ராமன் இப்படிச் செய்தான் என்றால் ராமனைப்பற்றிப் புதிய விஷயமொன்று தெரிந்து அனுபவம் அதிகமாயிற்று. அப்படி உலகத்தைப்பற்றிப் புதிய விஷயமறிந்தவுடனே உலக அனுபவம் அதிகமாயிற்று என்று சொல்லலாம். இவ்வுலகம் ஆயிரக் கணக்கான வருஷங்களாக இருந்துவருகின்றது என்று ஆராய்ச்சி செய்வோர் கண்டுபிடித்திருக்கிறார்கள். நாம் பார்க்கும் உலகம் 10-ஆயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த மனிதனுக்குப் புது உலகமாகவே தோன்றும். 10 ஆயிரமென்ன 10 வருஷங்களுக்கு முன்னிருந்த மனிதனுக்குக்கூட புதியதென்றே சொல்லலாம். ஏனெனில் அக்காலத்தைவிட இப்போது நமக்கு அநேக புதிய விஷயங்கள் தெரிந்திருப்பதனால் உலகத்தன்மை அப்போதைவிட நமக்கு அதிகமாகத் தெரியும்.

மனிதன் புதிதாக உலகத்தில் ஜனித்தபோது உலகம் அவனுக்கு எவ்வாறு தோன்றியிருக்கும் என்பது குழந்தைகளைக் கவனித்தால் ஊகித்துக் கொள்ளலாம். குழந்தைகளுக்கு எல்லாம் புதுமையே. காலடிச் சத்தம் உரத்திருந்தால் அதன் தேகம் அதிர்ச்சி பெறுகின்றது. அதுவே பண்டைக் காலத்திலும் மனிதனுக்கு எல்லாம் அச்சத்தை விளைவித்திருக்கவேண்டும். இடி இடித்தால் அவனுக்குப் பயம் உண்டாகி இருக்கும். மின்னலைக் கண்டால் கண்ணை மூடிக்கொள்வான். காட்டுத் தீயைக்கண்டால் அலறுவான். ஆறுகளைப் பார்த்தால் தேகம் நடுங்கும். மிருகங்களைப் பார்த்தால் மயிர்க்கூச்சு உண்டாகும். “இப்பேர்ப்பட்ட அபாயகரமான உலகத்தில் நான் ஏன் இருக்கவேண்டும்” என்று தன்னைத்தானே நொந்துகொண்டிருப்பான். இவ்வாறு கல், மரங்கள், இடி, மிருகங்கள் எல்லாம் தன்னைவிட பலமுள்ளவைகளென்று அவைகளைத் தொழுதிருப்பான்.

ஏதேனும் ஒருநாள் தன் தோழன் கீழேவிழுந்து எழுந்திருக்கவில்லையென்றிருக்கலாம். இதென்ன விபரீதமென்று ஆச்சரியத்தோடு என்ன தூக்கிவைத்தும் நிற்காமற் போனால் “சரி, இது சவம் ஆகிவிட்டது. இதற்கும் தமக்கும் உள்ள வித்தியாசம் மூச்சுக் காற்றே. மூச்சுக் காற்று உடலில் ஊடுருவிச் செல்லும் வரைதான் மனிதன் ஓடியாடமுடியும். அது வெளிப்போந்தால் மனிதன் இறக்க வேண்டியதுதான்,” என்று தீர்மானித்திருப்பான். இச்சுவாஸம் எத்தன்மையது? கண்ணுக்குப் புலப்படாதது. மனிதனோடு எப்போதும் இருப்பது. ஆத்மாவென்றும் பிராணனென்றும் சொல்லப்படுவது. மனிதன் சாயல் அவனுடனே எப்போதும் இருப்பதால் இச்சாயலே அவன் பிராணனுக்கு ஆதாரமாக விருக்கலாம். எப்படியாயினும் மனிதன் இறந்தவுடன் வெளிப்போந்த காற்று எப்போதும் இருக்கவேண்டும்.

---

“அகத்தின் அழகு முகத்திலே தெரியும்.”



அது நித்தியப் பொருள். ஆகையால் அதற்கு ஆகாராதிகள் கொடுக்கவேண்டும் என்று உத்தேசித்து தேகத்தை அடக்கம் செய்த இடத்தில் அன்னம் வைத்தலும் வேறு கிருத்தியங்களைச் செய்தலும் உண்டாயின.

ஒவ்வொரு தொழிலும் காரணபூதர் ஒருவரைக்கொண்டே நடைபெறுகிறது. கடவுளோ, அவரைச்சுற்றிநிற்கும் தெய்வங்களோ, பிசாசுகளோ ஏதாவதொன்று காரணமாக இல்லாவிட்டால் ஒருகாரியமும் நடவாது. இப்படியெல்லாம் மனிதன் சிந்தித்துத் தனக்குக்குள்ளேயே உலகத்தில் நடக்கும் செய்கைகளைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்கவேண்டும். முடிவு என்றாலும், உலகத்தன்மையைக் கருதுங்காலத்தில் முடிவு ஆகாது. ஏனெனில் ஒவ்வொரு சித்தாந்தம் ஒவ்வொரு ஆதாரத்தைக் கொண்டே இயற்றப்பட்டிருப்பதாலும் அவ்வாதாரத்தை உலகத் தன்மையின் ஒரு சார்பாகவே கருதப்படுவதாலும் இதர விஷயங்களைக் கவனிக்காததாலும் முற்றும் அடங்கிய உலக அனுபவம் என்று சொல்வது அரிதாகும்.

ஆகையால் சித்தாந்தமொன்று ஏற்பட்டபின் அதைக் கூர்மையாய் ஆராய்பவர் எவ்விதத்தில் அது உண்மையானதல்ல, எவ்விதத்தில் அச் சித்தாந்தத்தைவிட உலக அனுபவத்தை அதிகமாகத் தழுவுகிற மற்றொரு கோட்பாடு ஏற்படுத்தலாம் என்று யோசித்துத் தமக்கு தோன்றிய பிறிதொரு சித்தாந்தத்தை உலகத்தாருக்குத் தெரிவிப்பார்கள். இப்படியே ஒவ்வொரு தேயத்திலும் ஒவ்வொரு காலத்திலும் வழங்கி வருகிறது.

மேல் நாட்டுத் தத்துவஞானிகள் ஆதிகாலந்தொட்டு உலகத்தைப்பற்றி என்னென்ன அபிப்பிராயம் கொண்டிருந்தார்களென்றும் ஒருவர் அபிப்பிராயம் எப்படி சரிப்படாமல் வேறு அபிப்பிராயத்திற்கு இடமுண்டாயிற்று என்றும் எடுத்துரைப்பதே பின்வரும் கட்டுரைகளின் கருத்தாகும்.

தத்துவ ஆராய்ச்சியில் மேல்நாட்டில் கிரேக்கரே பண்டைக் காலத்தில் தேர்ச்சியடைந் திருந்தார்களென்று தோன்றுகிறது. அவர்களில் நமக்குத் தெரிந்தவரையில் பிரபஞ்சத்தைப்பற்றிச் சிந்தித்துத் தம் அபிப்பிராயத்தை வெளியிட்டவர் தேலீஸ் (Thales) என்னும் ஞானியே என்று சொல்லுகிறார்கள். இவர்தான் அக்காலத்து மனிதரைப்போல், பிரபஞ்சம் இந்தத் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும், அந்தப் பூதத்தினால் அமைக்கப்பட்டிருக்கும் என்று இவைபோன்ற அன்னிய காரணத்தாலல்லாமல் இயற்கைப் பொருள் சார்பாக பிரபஞ்ச காரணத்தை எடுத்து உரைத்தவர். அவர் சொன்னதாவது “உலகத்தின் முக்கிய அம்சம் நீர். எல்லாப் பொருள்களும் நீரையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. உயிருள்ளதும் உயிரற்றதும் நீரையன்றி இல்லை. நீரே சூரியனால் எழுப்பப்பட்டு, மழையாகப் பொழிகின்றது” என்பதே. இது இக்காலத்தில் சிறுபிள்ளைத் தனமாகத் தோன்றலாம். ஆனால் அக்காலத்தில் இத் தத்துவ ஆராய்ச்சியின் பெருமை அளவற்றது. இயற்கையைக் கொண்டே பிரபஞ்ச ரகஸியத்தை அறிய எத்தனித்த தத்துவமாதலின் மேன்மையாகப் பரிமளித்தது. (தொடரும்)

---

நான் காலத்திற்கும் மருந்தே உண்பதில்லை; ஆனால் நோய் வரும்படியான சரிதப்பிய ஆகாரத்தைப் புசிப்பதுமில்லை என்று கூறுகிறார் ஒருவர்.

---

“எதனையும் அரை குறையாகச் செய்யாதே.”

# கண்ணபிரானும் காந்திமஹானும்

(பசுவந்தனை. சு. சாமிநாத பட்டர்.)

"உலகத்தில் தருமம் குன்றி அதருமம் அபிவிருத்தியாகும்போதெல்லாம் தருமத்தை நிலைநிறுத்துவதற்காகவும், அதருமத்தை யழிப்பதற்காகவும் நான் அவதரிக்கிறேன்" என்று கண்ணபிரான் பகவத்கீதையிற் கூறினார். பண்டைக்கால, இதிகாச புராணங்களின் மூலமாகவும் இக்காலத்திய உலக சரித்திரங்களைக் குறிக்கோளாகக் கொள்வதன் மூலமாகவும் இக்கூற்று மிகவும் சரியானதே என்பது பெறப்படும். சூரபதுமன் முதலாகிய தானவர்களால் நொந்து சோர்வுற்ற இந்திராதி வானவர்களின் துன்பத்தைத் துடைக்க கந்தமூர்த்தியாகக் கடவுள் வந்து தோன்றியதாகக் கந்தபுராணமும், இராவணனாதிய அரக்கர்களால் அல்லலுற்ற, அமராதியர்களைக் காப்பதற்காக இராமபிரானாக இறைவன் அவதரித்ததாக இராமாயணமும், மதாசாரியர்களின் அதிக்கிரமத்தைக் கண்டு மருட்சியுற்ற மாந்தர்களை ஈடேற்ற இயேசுநாதனாகச் சர்வேசுவரன் தோன்றியதாக விவிலிய வேதமும் கூறுகின்றன. இதுபோன்றே ஒவ்வொரு அவதார புருஷர்களும், உலகத்தின் காலதேச வர்த்தமானங்களுக் கேற்ப, தரும சம்ஸ்தாபனம் செய்வதன் பொருட்டு தேவாம்சத்துடன் தோன்றியதாக அவரவர்களின் திவ்ய சரித்திரங்கள் சாற்றுகின்றன. சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன் நடந்த பாரத யுத்தத்திற்கு ஏது பூதனாகிய கண்ணபிரானையும், தேவாம்சத்துடன் பிறந்த அவதார புருஷனாகவே, அக்காலத்தவரும் இக்காலத்தவரும் போற்றிவந்தனர்-வருகின்றனர். அதன் காரணம், அன்னார் தரும சம்ரக்ஷகராகவும், அதரும கண்டகராகவும் இருந்தமையினாலேயேயாகும். தரும சம்ரக்ஷகமாவது, ஜீவர்களின் இழந்துபோன சுதந்தரங்களை நிலைபெறச் செய்வதும், சுதந்தரம் எய்துவதற்குத் தடையாக இருக்கும் அம்சங்களை நிவர்த்தி செய்வதுமேயாகும் என்பது மேலே காட்டிய அவதார புருஷர்களின் தெய்விக சரித்திரங்களை நடு நிலைமையில் நின்று ஆராய்வோர் யாவருக்கும் தெற்றெனத் தெரிதற்குரியதே.

இதனால் தற்காலம் இந்திய மக்களின் பிறப்புரிமையை நிலைநிறுத்துவதற்காகப் பாடுபடும், சாந்தமூர்த்தியாம் காந்தியடிகளையும், தெய்விகத்

"விளையும் பயிர் முளையிலே தெரியும்"



தன்மையுடன் விளங்கும் அவதார புருஷனேயெனின் அது சிறிதும் மிகையாகாது. பாரதப்போர் நடந்த அக்கால நிலைமையும், சாத்வீகச் சமர்நிகழும் இக்கால நிலைமையும், ஒருவாறு ஒரேவிதமாக இருப்பதனாலும், கண்ணபிரானின் சரித்திர நிகழ்ச்சியும், காந்தியடிகளின் சரித்திர நிகழ்ச்சியும் பல மாதிரிகளால் ஒன்றுபடத் தோன்றுவதனாலும், குந்தி புத்திரர்களின் சகாயனாகிய கண்ணபிரானாக அன்று தோன்றிய இறைவனே இந்திய புத்திரர்களின் சகாயனாகிய காந்திமஹானாக இன்று தோன்றியுள்ளார் எனின் அது எவ்வகையானும் பொருந்துதற் குரியதாகவே யமையும். அத்தகைய பொருத்தங்களிற் சில பின்வருமாறு:—

பாரதப்போர் நடந்த அக்காலமோ ஏகாதிபத்திய வெறிபுற்ற துரியோதனாதியர்களின் வஞ்சனையால் பாண்டு மைந்தர்கள் சுதந்தர மிழந்து நின்ற காலமாகும்; சாத்வீகச் சமர்நிகழும் இக்காலமும், ஏகாதிபத்திய ஆசை கொண்ட வல்லரசின் ஆதிக்கத்தால் பாரத மைந்தர்கள் சுதந்தரமின்றித் தவிக்கும் காலமாக இருக்கிறது. முற்காலத்திய அவதார மூர்த்தியாகிய கண்ணபிரான் பிறந்தது சிறைச்சாலையிலேயே யாகும்; தற்காலத்திய அவதார புருஷனாகிய காந்திமஹான் பிறந்ததுவும் சிறைச்சாலைக்காகவே யாகும். கண்ணபிரானே பாண்டு புத்திரர்களின் சகாயராக விளங்கினார்; அடிகளார் பாரத புத்திரர்களின் சகாயராக விளங்குகின்றார். பரமாத்மா எதிரிகளை வென்று வாகை சூடுவதற்குச் சக்கராயுதத்தைத் தாங்கினார்; மஹாத்மா நம்மவரைக் காப்பதற்குக் கொண்டுள்ள ஆயுதமும் சக்கராயுதம் போன்ற இராட்டினமே யன்றோ? பாண்டவர் சகாயன் கையாண்ட படைக்கலம் அவர் ஒருவர் மட்டிலும் தாங்குவதற்குரியதாக இருந்தது; பாரதர் சகாயன் கையாளும் படைக்கலமோ யாவரும் கையாளக் கூடியதாகவும், கையாள்வோர் குடும்பங்களை ரக்ஷிப்பதற் கேற்றதாகவு மிருக்கிறது. பாண்டுவின் புதல்வர்களைச் சுதந்தர வைராக்கியம் கொள்ளும்படி செய்தது பாஞ்சாலியின் மானபங்கமேயாகும்; பாரதப் புதல்வர்களைச் சுதந்தர வைராக்கியம் கொள்ளச் செய்ததுவும் பாஞ்சாலத்தில் நடந்த மானபங்கமேயாகும். மாயோன் பாஞ்சாலியின் மானம் கெடாவண்ணம் துகில் கொடுத்துதவினார். ஆயோனும் பாரதச் செல்வர்களின் மானமழியா வண்ணம் துகில் (கதர்) கொடுத்தருளினார். முன்னர் பாரதப்போர் ஆரம்பமாகுமுன் வல்லரசனாகிய துரியோதன மகாராஜனிடம் தூதுசென்று பஞ்சவர்களின் சுதந்தரத்தைத் திரும்பக் கொடுத்துவிடுவதானால் இரு கக்ஷியினரும் சமாதானத்துடன் வாழ்வதற்கு ஏது உண்டாகுமென்று இத வசனங்கள் புகன்றார்; பின்னரும் சாத்வீகச் சமர்தொடங்கு முன்பாக ஏகாதிபத்தியத்தின் அரச அங்கத்தவரிடம் தூது அனுப்பி, பாரத மக்களின் சுதந்தரங்களைக் கொடுத்துவிடுவதாக

"கல்வி என்ற பயிருக்குக் கண்ணீர் என்ற மழை வேண்டும்"

உறுதி கூறினால் இரண்டு சார்பினரும் சுகவாழ்வு நடாத்தலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டார். பாரதப்போரில் தாம் ஒருவர் மாத்திரம் படை எடுப்பதில்லை என்று உறுதி கூறினார், அஞ்சன வண்ணன்; அறப்போரின் சைனியமாவார் எவரும் படை எடுக்கவேண்டுவதில்லை என்று உறுதி கூறுகின்றார் செஞ்சொல்லின் மைந்தர். இரணகளத்தில் அர்ஜுனனின் இரத சாரதியாக விளங்கினார் இந்திரை நாயகர்; பாரதப் புதல்வர்களைப் பொறைப் போரில் செலுத்தும் சாரதியாக விளங்குகின்றார் இந்தியர் நாயகர். போர்த் துவக்கத்தில் பார்த்தனுக்கு ஆத்மஞானத்தை யுணர்த்தினார் கிருஷ்ண பரமாத்மா; சாத்வீகச் சமர்முனைச் செல்வோர் அனைவரும் ஆத்மசக்தியை யுணர்ந்தவர்களாகவே இருத்தல் வேண்டும் என்றியம்புகின்றார் காந்தி மஹாத்மா. விஸ்வரூபமெடுத்துத் தம்முள் உலகம் யாவையும் இலகுவதைக் காட்டினார் கமலக் கண்ணனார்; புகழுருவமாகத் தாம் அகிலமெங்கும் நிலவுவதைக் காட்டுகின்றார் காந்தி அண்ணலார். சுதந்தரமிழந்து நின்ற பாண்டு மைந்தர்களின் சுதந்தரத்தை நிலைநிறுத்தினார் நித்தியானந்தர்; இந்திய மக்களின் எண்ணங்களைப் பிறப்புரிமை பெறும் முயற்சியில் நிலைபெறச் செய்தார் சத்தியசந்தர். முன்னவர் ஊழியமும் ஒடுக்கப்பட்ட பாண்டவர்களைத் தலை எடுக்கச் செய்தது; பின்னவர் ஊழியமும் ஒடுக்கப்பட்ட பாரதர்களைத் தலைசிறக்கச் செய்வதே. ஆகவே இவ்விரு மஹானுபாவர்களின் இத்தகைய ஒன்றுபட்ட செயல்களை நன்கு நிதானிக்குங்கால், அன்று கண்ணபிரானாக வந்து சுதந்தர ஸ்தாபனம் செய்த பரம்பொருளே, இன்று காந்தி மஹானாக நின்று சுதந்தர ஸ்தாபனம் செய்யும் முயற்சியில் முனைந்திருக்கின்றாரென்பது "உள்ளங்கை நெல்லிக்கனி"போல் தெரிகின்றதல்லவா?

"எவ்வுயிரும் பொதுவெனக் கண்டிரங்கி வுபகரிக்கின்றார் யாவர், அந்தச்
செவ்வியர்தம் செயலனைத்தும் திருவருளின் செயலெனவே யான்தெரிந்தேன்"

என்றார் பிற அறிஞரும்.

ஆதலின் நாம் அனைவரும் இத்தெய்விக புருஷன் காட்டும் வழிகளில் நடந்து பிறப்புரிமை யெய்தும் வகைகளில் ஈடுபடுமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

**சந்தாதாரர்களுக்கு:**—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின்மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

"பூ விற்ற காசு மணக்குமா, புலால் விற்ற காசு நாறுமா?"

# மத வேற்றுமையும் சாதி ஒற்றுமையும்

(டர்பன். சரஸ்வதி சபைத்தலைவர். திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை எழுதியது.)

இந்திய நாட்டின் அபிவிருத்திக்கும், இந்தியரின் ஒற்றுமைக்கும் பெருந்தடையாக விருக்கும் காரணங்கள் பலவற்றுள், நமது நாட்டில் நிலவுகின்ற மத வேறுபாடுகளும், நமக்குள் ஏற்பட்டிருக்கும் சாதி வேற்றுமைகளும் ஓர் காரணமாகும் என்பது அறிவுடையாரின் துணிபு. இவ் விஷயத்தைப்பற்றி நாம் வரைவதற்கு முன்பு "மதம்' "சாதி" இவ்விரு பதங்களைப்பற்றிக் கூறவேண்டுவது இன்றியமையாததாயிருக்கிறது. மக்கள் ஒன்று கூடி வாழு மியல்பினரே யன்றித் தனித்து வாழு மியல்பினரல்லர். இயற்கையாக உள்ள இவ்விதியுடன் முரணி நாம் ஒற்றுமையின்றிப் பிறரைச் சார்ந்து வாழ்வதற்குக் காரணமென்ன? அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகள் நம் தேசத்தைப்போல் அல்லாதனவாய்ச் சுதந்தரமும், நாகரிக விருத்தியுமுற்று விளங்குகின்றனவே; அவைகட்கு அந்நிலைமை வரக் காரணமென்ன? இவைபோன்ற பல ஆசங்கைகள், புதிய உணர்ச்சி தோன்றியிருக்கும் இக் காலத்தில், ஒவ்வொரு இந்தியருடைய மனத்திலும் நிகழாமற் போகாது. இயற்கை யமைப்பில் ஓர் தனிக் கண்டமென்று சொல்லும்படியான நமது இந்தியாதேசம் இப்போதிருக்கும் நிலைமையைச் சற்று ஆழ்ந்து நோக்குமின்! இந்தியா என்பது ஓர் தனித்தேசம், இந்தியர் என்பவர் ஒரு தேசத்துக்குரிய ஒரே சாதியார். ஒரே தேசத்து உதரத்துதித்த உரிமைச் சகோதரர்கள் என்று சொல்லக்கூடிய நிலைமையிலா விருக்கின்றது? இல்லையே! பலப்பலவாக விரிந்து கிடக்கும் மத வேற்றுமைகளும், பலப்பல வகையான சாதி பேதங்களுமன்றோ நம்மையும் நம் மிந்திய மாதாவையும் இந்நிலைமையில் வைத்திருக்கின்றன? இந்நிலைமையிலிருந்து நாம் மேலேறுவதற்கு மதவேற்றுமை சாதி வேற்றுமை இவைகளைக் கூடியவரையில் ஒற்றுமைப் படுத்தவேண்டியது அவசியமாக விருக்கிறது. ஆனால், இம்முயற்சி எளிதில் கைகூடுவதன்று. புலியையும், பசுவையும் ஒற்றுமைப் படுத்தல் எத்துணைக் கஷ்டமோ அதைவிடக் கஷ்டமானது. ஆனாலும், எளிதில் செய்யக்கூடிய முயற்சியை முதன் முதல் செய்ய ஆரம்பிக்கலாம். செல்லச்செல்ல கஷ்டமான சீர்திருத்தத்தில் நாம் வெற்றிபெறலாம். இங்ஙனம் பார்ப்பின் "மத ஒற்றுமை" செய்ய முயல்வதற்கு முன் "சாதி ஒற்றுமை" செய்ய முன்வருதல் நலமாகும்; ஏனெனில், இயற்கையாகவும், ஆன்ம அறிவைப்பற்றியதாகவுமுள்ளது மதவேற்றுமை. சாதி வேற்றுமை செயற்கை வகையால் இடையே தோன்றியது. மக்கள் தங்கள் தங்கள் சௌகரியம் கருதி ஏற்படுத்திக் கொண்டார்கள். பல்லாயிர வருடங்களுக்கு முன்னிருந்து இன்றுகாறும் பார்ப்போமானால், இக்காலத்திற்குள் ஏற்பட்டிருக்கும் மதங்கள் ஒருசிலவே யாமென்பதும், சாதிகள் எண்ணற்றனவாமென்பதும் நன்கு புலப்படும். தவிர ஒரு நவீனமத முண்டானால், அம்மதக் கொள்கைகள் முன்னிருந்த மதக் கொள்கைகளைவிடச் சிறந்தனவாயும், நலமுடையனவாயும், வலியுடையனவாயு மிருப்பின், பின் தோன்றிய மதமே நிலைபெறவும், முன்னிருந்த மதம் அழிந்துபடவும் காண்கின்

"ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லவேண்டும்"

றோம். எனெனில் மத உணர்ச்சி ஆன்ம அறிவையும், உணர்வையும் பற்றி நிகழ்தலாமென்க. மற்றுச் சாதி வேற்றுமையோ வெனின், அங்ஙனமின்றி உறவு கருதியும், சம்பத்துக் கருதியும், விவாகாதி கருமங்கள் கருதியும், ஏற்பட்டதாதலால் முன் தோன்றிய சாதியுடன் பின் தோன்றிவரும் சாதிகளும் இந் நிலவுலகின்கண் நிலவுகின்றன. சுமார் ஆயிரம் வருடத்திற்கு முன்னிருந்த சாதிகளைவிட இப்போது எவ்வளவு சாதிகள் அதிகமாக விருக்கின்றன. பௌத்த மதம் தோன்றுவதற்கு மூந்தி அதியுன்னத நிலைமையிலிருந்த பிராமண மதம், அசோக மன்னன் காலத்தில் எவ்வளவு தாழ்ந்த நிலைமைக்கு வந்தது? பௌத்த மதம் நாளடைவில் வலிகுன்றி மீண்டும் பிராமண மதம் ஓங்கவில்லையா? முற்காலத்திலிருந்த பௌத்தம், சமணம், சாங்கியம், ஆருகதம் முதலான மதங்கள் அக்காலத்தில் உன்னத நிலைமையில் இருந்தனவே. இப்போது அவைகளிருக்கும் இடங்கூடத் தெரியவில்லையே? இந்துமதம் (சைவம்-வைஷ்ணவம்) மட்டும் பிரபலமாக விருப்பானேன்? காலம் ஆக ஆக மக்களின் அறிவு விரிந்து விளங்கும் இயற்கையுடையது. குழந்தைப் பருவத்தில் ஒன்றுமறியாது கிடந்த ஆன்ம அறிவு, முதுமைப் பருவத்தில் அறிவு நிரம்பி விளங்கக் காண்கின்றோம். அது போலவே உலக உற்பத்தி காலத்தில் ஒன்றுமறியாது அநாகரிக நிலையிலிருந்த மனித சமூகம் வரவர அறிவு முதிர்ந்து நாகரிக விருத்தியடைந்து வருகிறது. இதற்கு அநேக வருஷங்களுக்குமுன் மிகவுந் தாழ்ந்த நிலையிலிருந்து இப்போது நாகரிக விருத்தியுற்று விளங்கும் மேனாடுகளே போதியசான்றும்.

இனி மதங்கள் தோன்றியவாறு ஒரு சிறிது உரைப்பாம். மக்கள் ஆதி காலத்தில் பயிரிட்டு வாழ்வதும், கால்நடைகள் மேய்த்து வாழ்வதுமாக விருந்தபடியால், பயிர் விளைவதற்கு இன்றி யமையாதனவான மழை, அக்கினி யாதியாகிய தத்துவங்களே நித்தம், அவைகளே கடவுள் என நினைத்தார்கள். இதற்குப் பிரமாணம் தாங்கள் நேரில் பார்க்கும் பிரத்தியட்சப் பிரமாணமே போதுமென்று நினைத்தார்கள். ஆகவே, காணப்படும் நிலம், நீர், தீ, வெளியென்னும் நான்கும் நித்தப் பொருள்கள்; இவைகளின் கூட்டமே உடம்பு; உடம்பிற்கு வேறாய் உயிர் என்ப தொன்றில்லை, இன்ப துன்பங்கள் உடம்பிற்கு இயற்கையாகவே உள்ளன, வினையென்பது கிடையாது, இவைபோன்ற பல கொள்கைகளைக் கொண்டார்கள். இதுதான் உலகாயித மதமாம். உலகமே கடவுள் என்னும் கொள்கையை மறுத்து, அறிவு நாளடைவில் வளர்ந்து ஞானந் தோன்றுவதாலும், துன்பத்திற்கு அஞ்ஞானம் காரணமாகவும் இன்பத்திற்கு ஞானமே காரணமாகவும் இருத்தலால், ஞானமே கடவுள் என்னும் கொள்கையையுடைய புத்தமதம் தோன்றுவதாயிற்று. இங்ஙனமே ஒன்றன்மேலொன்றாக ஆருகதம், தருக்கம், மீமாஞ்சை, ஏகான்ம வாதம், சாங்கியம், பாஞ்சராத்திரம் முதலிய மதங்கள் தோன்றுவனவாயின. இவைகள் ஒவ்வொன்றனையும் பற்றிக் கூறப்புகின் மிக விரியுமெண விடுத்தாம். கடைசியாகப் பரமான்மாவாகிய கடவுள் ஒருவருண்டு, அவர் நித்தியமான சித்துப் பொருள், சத்துப் பொருள், ஆனந்தப் பொருள். தன் வயத்தனாதல், தூய வுடம்பினனாதல், இயற்கை யறிவினனாதல், முற்று முணர்தல், இயற்கையாகவே பாசங்களினின்று நீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை, முடிவிலாற்றலுடைமை முதலிய எண்குணங்களை இயல்பிலுடையவர் என்றும், சீவான்மாக்கள் அநேகம், ஆனால் அவைகளும் சச்சிதானந்தப் பொருள்கள் அநாதி தொட்டேயுள்ளன என்றும், முற்பிறவி, பிற்பிறவி யுண்டு,



வினையுண்டு என்றும், பிறவி யொழித்து இறைவனோடு ஒற்றித்து நிற்றலே முத்தி யென்றும், இவைபோன்ற உண்மைகளைப் புகட்டுவதாகிய இந்துமதம் தோன்றிற்று. இங்ஙனம் தோன்றும் மதங்களெல்லாம் ஒன்றோடொன்று மாறுபடுவனபோற் றோன்றினும், ஒன்றனுக்கு ஒன்று உபகாரமா யிருத்தலானும், ஆன்மலாபத்தைப் பொறுத்ததா யிருத்தலானும், வேறு பாடுடையன வென்று கொள்ளலாகாது. உண்மை புலப்படப் புலப்படத் தாமே ஒற்றுமையாகிவிடும். ஆனால், ஜாதி வேற்றுமையோ ஆன்ம அறிவைப்பற்றி உண்டானதல்ல. சாதாரணமாக "முதலியார்" "நாயுடு" என்னும் ஜாதிகளை எடுத்துக்கொள்வோம். இதனுள் எத்தனை பிரிவு! எத்தனை மாறுதல்! "நான் உயர்த்தி"-"நீ உயர்த்தி" என்று ஒருவரை யொருவர் பழித்தும் குறை கூறுகிறார்களே. என்ன காரணம்? கொள்வினை, கொடுப்புவினையைக் கருதியும் சம்பத்தைக் கருதியுந் தானே! ஆகவே, ஜாதிகள் எத்தனை வித்தியாசப்படுகின்றனவோ அத்துணைக்குத் தேச க்ஷேமமும், தேச ஒற்றுமையும், குறைவுபடும். மதவேற்றுமை, தேச நன்மைக்குச் சாதிவேற்றுமை யிருப்பதுபோல் அவ்வளவு கெடுதலாகவில்லை. மதவேற்றுமை யிருப்பதினாலும் பாதகமில்லை. சாதிவேற்றுமையையே முதலில் ஒற்றுமைப் படுத்தவேண்டியதாக இருக்கிறது. ஆகவே, மத ஒற்றுமை செய்வதற்கு மூந்தி நமக்குள் இருக்கும் சாதி வேற்றுமையை நீக்க முயலல்வேண்டும்.

"ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை

தெலுங்குப் பதிப்பு.

———(o)———

நமது "ஆனந்தபோதினி" தமிழ்மொழியில் மாதப் பதிப்பும், வாரப்பதிப்பும் வெளிவந்து தொண்டாற்றி வரும் விஷயம் எல்லாரும் அறிந்ததே. இப்பொழுது "ஆனந்தபோதினி"யைத் தெலுங்கு மொழியிலும் ஜூன் முதற்கொண்டு ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியில் வெளிவர ஏற்பாடு செய்திருக்கின்றோம். தமிழ் நேயர்கள் தங்களுக்குத் தெரிந்த தெலுங்குப் பயிற்சியுள்ள நண்பர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்துச் சந்தாதாரர்களாகச் சேரும்படி தூண்டுமாறு வேண்டுகின்றோம். மாதிரி காபி இனும்

வருட சந்தா தபாற்கூலி உள்பட

உள் நாடுகளுக்கு ... ரூபா 1—0—0
வெளி நாடுகளுக்கு ... ,, 1—4—0

மானேஜர்.

# கனவின் பலன்.

(வி. சங்கர ஐயர்.)

முதல் ஜாமத்தில் கனவு கண்டால் ஒரு வருஷத்திலும், இரண்டாவது ஜாமத்தில் எட்டுமாதத்திலும், மூன்றாவது ஜாமத்தில் நான்கு மாதத்திலும், நான்காவது ஜாமத்தில் ஒரு மாதத்திலும், அருணோதயத்தில் அன்றையதினத்திலும் பலன் கிடைக்கும்.

2. ஆனால் தேக அசௌக்கியத்தாலோ, மனக் கிலேசத்தினாலோ, தீர்க்காலோசனையாலோ உண்டாகும் கனவுகளுக்குப் பலன் கிடையாது.

3. வீட்டிலே தீப்பற்றவும், எச்சில் முதலிய அசுத்தப்பொருள் தேகத்திற் படவும், சிறந்த நாகபாம்பு வலத்தோளிலேறவும், ஆற்றிலே நீர்பெருகவும், பயிர்கள் தழைக்கவும், இரத்தத்தைப் பருகவும், கள்ளைப்பருகவும், பக்ஷிகளைப் பிடிக்கவும், மாமிசம், தயிர், அன்னம், இவைகளைப் புசிக்கவும், யானை, எருது, மரம், சிவிகை (பல்லக்கு) தேவாலயம், கோபுரம், உப்பரிகை (மேடை) மலையுச்சி இவற்றிலிருக்கவும், அநேகர் கைகொடுத்து உபசரிக்கவும், ஆகாயத்திற் செல்லவும், ஆறு, கடல் முதலியவற்றைத் தாண்டவும், இரத்தத்தில் முழுகவும், வெள்ளை வஸ்திர முடுக்கவும், சந்தனம் பூசவும், வெண்பாம்பு அல்லது தேள் கடிக்கவும், எரியும் நெருப்பின் நடுவே அகப்படவும், தன் தேகம் எரிந்துகொண்டிருக்கவும், தான் அழவும், வெள்ளைப் பூ, வெள்ளாடை சந்தனம் முதலியவற்றை யணிந்துள்ள பெண்ணைச் சேரவும், பால்பருகவும், மிதியடி, குடை, மதுரப்பொருள்கள், தேங்காய், மாம்பழம், எலுமிச்சம் பழம், மஞ்சன், எழுத்தாணி, நிறைகுடம், கரும்பு என்னு மிவை கிடைக்கவும், சூரிய சந்திரர்களைப் பிடிக்கவும், தன் தலையைத் தானே யறுக்கவும், கப்பலேறி நடுக்கடலிற் போகவும், கரைசேரவும், தான்கட்டப்படவும், விலங்கிடப்படவும், எறும்புக்கூட்டம் தேகத்தி லூரவும், தேவபூசை நடத்தலும், அதைக் காணுதலும், பால், பழம், அன்னம், விபூதி, மலம், பிராமணர், அரசர், சுமங்கிலி, நிறைகுடம், யானை, குதிரை, பசு, எருது, பொன், பிணம், இரத்தம், ஆபரணதிகள், வெண்பாம்பு, தேன், குடை, சாமரம், விளக்கு, தேவதாசி, தாம்பூலம், சந்தனம், தயிர், முத்து,புஷ்பம், நவக்கிரகமண்டலம், நட்சத்திரங்கள், எரிநெருப்பு, வேதாத்தியனம், தேவர், தேனு, கோயில், புத்தகம்,





பொன், பூமரம், கண்ணாடி, பூமாலை, தானியங்கள், பெண்கோழி, கருடன், அன்னம், மயில் இவைகளைக் காணுதலும் மிகவும் சுபமாம்.

4. பஜனையையாவது, நாடகத்தையாவது, சங்கீதத்தையாவது, வீணை முதலிய வாத்தியங்களை வாசிப்பதையாவது கனவிற்காணுவது சுகஜீவனத்துக்கு அறிகுறி யாகும்.

5 a. புஷ்பத்தைக் கனவிற்பார்த்தால் மனோ உற்சாகமும், உற்சவங்களைக் காண்பதும் நிகழும்.

5 b. புஷ்பம் அணிந்து கொண்டதாகக் கண்டால் மனோக்கிலேசம் நீங்கிச் சந்தோஷ முண்டாகும்.

5 c. புஷ்பத்தை வாசனை பார்த்ததாகக் கண்டால் போக சௌக்கியமும், சுக அனுபவமும், காரியசித்தியும் உண்டாகும்.

5 d. புஷ்பங்களைப் பொறுக்குகிறதாகவாவது, பறிக்கிறதாகவாவது கனவு கண்டால் காரிய அனுகூலம், சர்வ சம்பத்து, தம்பதிகளுக்குள் அன்யோன்ய பிரீதி, சினேகவாஞ்சை உண்டாகும்.

5 e. புஷ்பத்தைக் கண்டதாகவும், தலையில் வைத்துக்கொண்ட தாகவும், வாசனை பார்த்ததாகவும் கனவுகண்டால் புகழைத் தரக்கூடிய . சந்தானம் ஏற்படும்.

6 a. புஷ்பங்கள் நிறைந்த செடியைப் பார்த்தால் சந்தான விருத்தி,

6 b. பழங்கள் நிறைந்த செடியைப் பார்த்தால் திரவிய லாபம், குடும்ப விருத்தி.

7. முத்து, ரத்தினம், பவழம் இவைகளைக் கனவிற் காணுவது லாபகரம்; விவாகமாகாதவர்களுக்கு விவாகம் ஆகும்; மங்கலிய ஸ்திரீகளுக்கு சந்தான விருத்தி; விதவைகளுக்கு யாத்திரை.

8 a. மோதிரம் அணிந்ததாகக் கண்டால் தம்பதிகளுக்கு அனுகூலம்.

8 b. கண்டஹாரம், முத்துஹாரம் முதலியவற்றைக் கழுத்தில் அணிந்ததாகக்கண்டால் காரியசித்தி.

9. பொன், தங்கம் நாணயங்களைக் கனவிற்கண்டால் காரியானுகூலம், அபகாரம்.

10. பொன்காப்புத் தனக்கு வெகுமதி கிடைத்ததாகக் கனவுகண்டால், தான் எதிர் பாராத ஆஸ்தி தனக்குக் கிடைக்கும்,

11. பொன் நாணயங்களை அன்னியர்களுக்குத் தான் கொடுத்ததாகக் கனவு கண்டால் நேசர்கள் விருத்தி அடைவார்கள். தங்கத்தைக் கனவிற் காணுவது சுபகரம்.

12. தாம்பிரத்தைப் பார்த்தல் தெய்வபக்தி.

13. தனமுடிப்பையாவது, பையையாவது, மூட்டையையாவது கனவிற் கண்டால் ஆரோக்கியமும், குடும்பவிருத்தியும், மனோ உற்சாகமும் உண்டாகும்.

14. வெறும் ஓலையையாவது, காகிதத்தையாவது, கனவிற் காண்பது சுபம்.

15. கனவிற் மணியோசை கேட்பது சந்தானலாபம், மரியாதையான ஜீவனமும், கியாதியும் உண்டாகும்.

16. புதுப் பாதரக்ஷையைப் போட்டுக்கொண்டதாகக் கனவு கண்டால் போக விருத்தி.

17 a. மலத்தை மிதித்ததாகவாவது, பூசிக்கொண்டதாகவாவது, மேலே பட்டதாகவாவது கனவுகண்டால் ஐசுவரிய லாபம்.

17 b. மலத்தைப் பார்த்ததாகக் கண்டால் நஷ்டமான சொத்து அகப்படும்.

17 c. மலத்தின் நடுவில்தான் நிற்பதாகக்கண்டால் விரோதிகளை ஜயிக்கவும், காரியசித்தியும், குடும்பவிருத்தியும், ஐசுவரிய லாபமும் உண்டாகும்.

18 a. பந்தாடுவதைப் பார்த்தால் சுகஜீவனம் உண்டாகும்.

18 b. தான் பந்தாடுவதாகக்கண்டால் எதிர்பாராத ஆஸ்தி கிடைக்கும். கோரிய எண்ணம் நிறைவேறும்.

19 a. அன்னியர் சங்கீதம் பாடுவதைக் கேட்டால் காரியசித்தி.

19 b. வீணை, பிடில், நாகசுரம், மிருதங்கம் முதலிய மங்களவாத்தியங்களைக் கனவிற்கேட்பதால் விவாக முதலிய சுபகாரியங்கள் நடக்கும்.

20. மணியடிப்பதாகக் கேட்டால் அதிசீக்கிரத்தில் சுபசமாசாரமும் தன் வீட்டில் மங்கள காரியங்களும் நடக்கும்.

(தொடரும்.)

---

குழந்தை சிரித்து விளையாடும்போது அதை முத்தமிட்டுக்கொள்வதுமில்லை, அப்படியே அழுது அமர்க்களஞ் செய்யும்போது, வைது துடையில் கிள்ளுகிறதுமில்லை என்று கூறுகிறார் ஒருவர்.

---

"பகைவர் நேயம் (போலி நட்பு) புகையும் நெருப்பு"

# நோன்பென்பது கொன்று தின்னாமை

(M. S. முத்துசாமிக் கவுண்டர்.)

சிவநேயச் செல்வர்காள் ! இக்கட்டுரையின் நோக்கத்தை ஆராயப்புகின், பாமரர்களுக்கும் நன்கு விளங்குமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. நோன்பென்பது மாதா மாதங்களில் ஹிந்துக்களுக்கெனவே முக்கியமாக ஏற்பட்ட பண்டிகைகளாகும்.

அக்காலத்தில் ஆடவர்கள் பெண்டிர்கள் யாவரும் அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து பகவத்தியானம் செய்யும்பொருட்டு, ஆலயங்கட்குச் சென்று தேவாராதனை செய்து பரப்பிரம்ம சொரூபியாகிய பகவானை மனதிலே தியானித்து, தத்தம் இல்லங்கட்குச் சென்று, நேம விதிப்படி அறுசுவை பதார்த்தங்களோடு அடிசில் செய்து விருந்தினரோடு உணவருந்தி, ஏழை பரதேசிகளுக்கு அன்னதானம் செய்து, தாம்பூலந்தரித்து பந்து ஜனங்களுடன் சந்தோஷ சித்தராய் பகவந்நாம சரித்திரங்களைப் பாராயணம் செய்து கொண்டிருப்பது சிறந்ததோர் சால்பாகும்.

இம்மாதிரியிருக்க வேண்டியதிருக்க, தற்காலத்தில், சில இடங்களில் நடந்துவரும் கொடிய வழக்கங்கள் இம்மையில் பழிப்பிற்கும், மறுமையில் நரகத்திற்கும் ஏதுவான துன்பங்களில் கிடந்துழலும்படியான உயிர்ப்பலி செய்து வருகிறார்கள் என்பதை, 'ஆனந்தபோதினி'யின் வாசகர்களாகிய நேயர்களுக்கும் நன்கு தெரியும்.

தற்போது பண்டிகை தினத்தன்று ஆடவர்கள் யாவரும் உறவினருடன் அன்றுதான் விசேஷதினமென்று ஆலயங்களில் ஆடுகோழிகளைப் பலியிடுவதும், மதுபானங்களை உபயோகப்படுத்துவதும், சூதாடுதல் முதலிய துர்நடத்தைகளை அனுசரிப்பதும் எவ்வளவு பாபகரமான காரிய மென்பதை நேயர்களே சிந்தியுங்கள்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்"

என்ற திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க உயிர்வதை செய்யாமலிருப்பதே சிறந்ததோர் தருமமாகும்.

இதிலும் புண்ணிய தினங்களாகிய நன்னாளன்றே உயிர்ப்பலி செய்பவர்களுக்கு பகவான் யாது தண்டனை விதிப்பாரோ அறிகிலோம்.

இதற்கு உதாரணமாகச் சமீபத்தில் சென்ற ஆடி மாதத்தில் பதினெட்டுப் பண்டிகையில் நடந்த அநியாயப் படுகொலைகளை இதில் சிறிது விளக்குவாம்.

நேயர்களே ! கோயமுத்தூர் ஜில்லா, தாராபுரம் தாலூக்காவைச் சேர்ந்த மாந்தபுரத்திற் கடுத்த, நாட்டுராயன் கோவில் என்று ஒரு பெரிய கோவில் இருக்கிறது. அதில் வாரத்திற் கொருமுறை, செவ்வாய், புதன், இரண்டு தினங்களிலும் அதிகமான கூட்டங்கள் வந்து சேரும். வாரந்தப்பாமல் ஆடி

---

"தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்"

ரம் ஆடுகளுக்குக் கம்மியில்லாமல் பலியிடுவார்கள். அதிலும் சென்ற ஆடி மாதப் பண்டிகையின்னன்று ஏற்பட்ட பலியின் கொடுமையை யார்தான் மனமொப்பிச் சொல்லுவார்கள்? என்ன அநீதம்! பெரும்பாவம்!! பார்க்கிறவர்களுக்குத்தான் மனம் பதறாமலிருக்குமோ? நான் அன்றையத்தினம் கோவிலுக்குச் சுவாமி தரிசனம் செய்யும் பொருட்டுச் சென்றிருந்தேன். எண்ண முடியாத ஆடுகளைப் பலியிட்டுத் தூக்கிச் சென்றார்கள். அந்தோ பரிதாபம்! சுமார் 5000-ம் ஆடுகளுக்கு அதிகமிருக்குமென்றே சொல்லலாம். அது சமயம் அவ்விடத்தில் பாரத யுத்தம் நடந்ததென்றே சொல்ல வேண்டும். கோவிலுக்குப் போய் வருவோர் யாராவது ரத்தம்படாமல் வரமுடியாது. எங்கு பார்த்தாலும் ரத்தமயம்தான். இது என்ன மூடப் பழக்க வழக்கமென்பது எனக்குத் தெரியவில்லை. அதிலும் நாட்டுராய சுவாமிக்கு மஞ்சள் காப்பு, தேங்காய், பழம், கற்பூரம் முதலிய தீபாராதனைகளே நடந்துவருகிறது. அதற்கு முன்னால் மேற்கு முகமாக ஒரு முனியிருக்கிறது. அதற்கே இப்பலியை யிடுகிறார்கள். பலியிடும்போது நாட்டுராய சுவாமியின் கோவிலைத் திரையால் மூடிவிடுகிறார்கள். நாட்டுராய சுவாமியே பிரதான தெய்வமாயிருக்க அதற்குப் பலியையிடாமல் முனிக்குப் பலியிடுவது என்கிற வழக்கம் ஏற்பட்டுவிட்டது. இதனால் நான் நாட்டுராய சுவாமிக்குப் பலியிடவேண்டுமென்று சொல்ல முன்வரவில்லை. ஜீவகாருண்யமில்லாத பாமரர்கள் தான் உயிர்ப்பலி கொடுக்கிறார்களென்றால் சைவ சமயத்தை அனுசரிக்கும் சைவர்களும் பலிகொடுத்துப் புலாலை வேறு யாருக்காவது விலைக்கு விற்றுவிட்டுச் செல்லுகிறார்கள். இவர்களின் நோக்கந்தான் என்னே? தாங்கள் புலாலை உண்டால் பாவமென்றும், தாங்களே ஆடுகளைக் கொண்டுபோய் சுவாமிக்குப் பலி கொடுத்துப் புலாலை வேறு யாருக்காவது விற்றுவிட்டால் அதில் யாதொரு பாவமுமில்லையென்றும் எண்ணுகிறார்கள் போலும். தாங்கள் கற்றுணர்ந்த வேத சாஸ்திரங்களில் அப்படியிருக்கிறதோ வென்பது எனக்குத் தெரியவில்லை. முதல் வருணத்தாரும் வேதங்களை ஓதுபவர்களும் கொலையென்று வாயில் சொல்லும்போதே அஞ்சுகிறவர்களுமாகிய வேதியர்களே உயிர்ப்பலி கொடுக்கிறார்களென்றால், வேறு என்ன சொல்ல வேண்டியதிருக்கிறது? யாராவது என்ன இம்மாதிரி நீங்களுங்கூட ஜீவகாருண்ய மில்லாதவர்களைப் போல் பலி கொடுக்கிறீர்களே என்று கேட்டால், ஐயோ! இம்மாதிரி கேட்காதீர்கள், சுவாமிக்குப் பலியிடுவதென்று கோரிக்கை செய்துகொண்டிருக்கிறோம், பலியிடாவிட்டால் சுவாமிக்குக் கோபம்வந்துவிடும் என்கிறார்கள்.

இதைப்பற்றி யோசிக்குங்கால், பரம கிருபாநிதியாகிய சிவபெருமானின் திருவிளையாட்டென்றே சொல்லவேண்டும். மகாத்மா காந்தியடிகளின் இயக்கத்தால் மதுபானம் ஒருவாறு குறைந்து வருவதைப்போல் இப்பலியிடும் வழக்கமும் முழுமுதற் பழம்பொருளாகிய முக்கண்ணனருளாலும் காந்தியடிகளைப் போன்ற புண்ணியவான்களாலுமே முற்றும் ஒழிய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேம்.

---

நான் எப்போதும் ஒருவரைக் "குளத்தில் விழுந்து சா" என்றும் கூறுவதில்லை; தானாகச் சென்று விழுவோரைத் தடுப்பதுமில்லை என்றார் ஒருவர்.

---

"கனத்தால் இனமாகும், பணத்தால் ஜனமாகும்"

# பெருநாவலர் பெருமை.

(K. மழவராயன்.)

சாற்றிய பல்கலையுந் தப்பா அருமறையும்
போற்றி உரைத்த பொருளெல்லாம்—தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பாவலர் ஒப்பார்
எப்பாவலரினும் இல். —(நல்லந்துவனார்)

மக்களின் மாட்சிமை அவர்களுடைய நூலாசிரியர்களிடமிருந்தே உதிக்கின்றது என்று டாக்டர் ஜான்ஸன் கூறுகின்றார். (The chief glory of every people arises from its authors) ஆதலின் ஓர் நாட்டின் அல்லது ஓர் கண்டத்தின் மகிமைக்குக் காரணம் ஆண்டுத் தோன்றும் அறிஞர்களே யாவர். இவ்வாறு ஐரோப்பாக் கண்டத்தை அணிசெய்தவர்கள் அறுவரென அந்நாட்டு அறிஞர்கள் அறைகின்றார்கள். அவர்களில் ஹோமர் (Homer) கிரேக்கு (Greek) பாஷையிலும், வர்ஜில் (Virgil) லத்தீனிலும் (Latin) தாந்தே (Dante) இத்தாலிய (Italy) பாஷையிலும், கீத்தா (Goethe) ஜர்மானியத்திலும் (German), ஷேக்ஸ்பியர் (Shakespeare) மில்டன் (Milton) இருவரும் ஆங்கிலத்திலும் நூல்கள் செய்துள்ளார்கள். இதேபோல் அமிழ்தினு மினிய தமிழ்மணங் கமழும் தென்னாட்டை யணிசெய்தவர்கள் கம்பர், திருவள்ளுவர், இளங்கோவடிகள் ஆகிய மூவருமென மும்மொழிகளிலும் கற்றுத்துறைபோய கவிஞராய பாரதியார்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மைவெறும் புகழ்ச்சியில்லை."

என்று பாடிப் போற்றும்முறை பண்புடையதாகும். இம்மூன்று புலவர்களும் முடியுடை வேந்தர்கள் மூவராலும் தனித்தனி யாளப்பட்ட சேர, சோழ, பாண்டிய நாடுகளில் புகழொடு தோன்றியவர்களாவர். கம்பர் சேணுலகினுந் தன் பெயர் நிறுவிய சோணாட்டிற் பிறந்தவராவர். திருவள்ளுவர் "திங்கட்குடையுடைச் சீர்சால் வழுதியும் சங்கப் புலவருந் தழைத்தினிதோங்கிய" பாண்டிய நாட்டிற் பிறந்தவராவர். இளங்கோவடிகள் சேர நாட்டிற் பிறந்த செந்தமிழ்க் கவிஞராவர். இவர்களில் திருவள்ளுவர் திருமயிலையில் பிறந்தவரென்பது ஒரு சாரார் துணிபு. கல்கூர் வேள்வியார் என்னும் நல்லிசைக் கவிஞர்,

---

"கை ஊன்றிக் கரணம் போடவேண்டும்"

"உப்பக்க நோக்கி உபகேசிதோண் மணந்தான்
உத்தரமா மதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதானு பங்கி மறுவில்புலச் செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு."

என்று திருவள்ளுவ மாலையில் கூறியிருக்கும் வெண்பாவால் திருவள்ளுவர் பிறப்பகம் தென்மதுரை யென்பது தெற்றென விளங்கும். ஆனால் ஒரு காலத்து வண்டமிழ் மயிலையில் வதிந்தவர் என்று ஊகிக்கவு மிடமுண்டு. ஆகலான் இவரைப் பாண்டிநாட்டுப் பாவலர் என்று கூறுவது இழுக்காகாது. நிற்க,

முன்னம் மொழிந்த முப்பெரும் புலவர்களிலும், முற்பட்டவரும், அன்றும், இன்றும், என்றும் போற்றத்தக்கவரும், எச்சமயத்தவரும், எக்காலத்தவரும், எத்தேயத்தினரும் ஏத்தித் தொழுபவரும் ஆகியவர் திருவள்ளுவர் ஒருவரேயாவர். ஏனைய புலவர்களைவிட இவருக்கு மட்டுமேன் அப்பெருமை உண்டாயிற்று? என்ற வினா மனதில் எழலாம். இதற்குப் பின்வரும் நான்கு தலையங்கங்களின் காரணங்களினாலேயே யாவரும் போற்றும் மேவருஞ் சிறப்புற்றார் என்பதே தகுந்த விடையாகும் என்பது தமியேனுடைய தாழ்ந்த கருத்தாகும். அவையாவன:—

(1) வள்ளுவர் வாய்மொழி
(2) ,, மனையறம்
(3) ,, கைத்தொழில்
(4) ,, தெய்வபக்தி

என்பனவாம். இவற்றை ஒவ்வொன்றாக ஆராய்வாம்.

## வள்ளுவர் வாய்மொழி

திருவள்ளுவர் இயற்றிய நூல் திருக்குறள் ஒன்றேயாகும். அவர் அங்ஙன மியற்றினதே அவரது மாண்பிற்கு முதற்காரணமாகும். திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்ற மூன்றினையும் திறம்பட உரைக்கும் ஓர் நீதி நூலாகும். இது தொகை நூல்களுள் கீழ்க்கணக்கைச் சார்ந்த பதினெட்டனுள் ஒன்று. இந்நூல்,

"பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்"

"ஆலும் வேலும் பல்லுக் குறுதி
நாலு மிரண்டுஞ் சொல்லுக் குறுதி"

"நாலடி வள்ளுவராகு மிப்பாலை நடந்ததொரு
காலடி யுள்ளடி மானடியே கட்டுப்பட்டுரலிற்
பாலடிசில் வெண்ணெயுண்டோ னரங்கன் பணிவரையில்
வேலடி யுள்ளுக்குப்பாய மிட்டேகும் விரகுநன்றே"
—(அரங்கக்கோவை)

என அறிஞர்களால் நன்கு மதிக்கப்பட்டது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இது சுருங்கச்சொல்லி விளங்க வைத்து ஓதுதற்கெளிதாய் உணர்தற்கரிதா யிருப்பதால் தமிழகத்தில் மட்டுமல்லாமல் ஏனைய நாடுகளிலும் இவ

"கைப்பொருள் அற்றால் கட்டினவளும் பாராள்"



ரது புகழ் இன்றும் நின்றுலவுகின்றது. எங்ஙனமெனின், இவரது நூலை மேலைநாட்டுச் செம்மொழிகளாகிய லத்தீன் (Latin) ப்ரெஞ்சு (French) ஜர்மன் (German) இங்கிலீஷ் (English) முதலிய பாஷைகளில் அந்நாட்டு அறிஞர்கள் மொழிபெயர்த்து அதைப் பொன்னேபோல் போற்றிப் படித்து வருகின்றார்கள். இவ்வாறு திருவள்ளுவர் தமிழ் மக்களுக்குச் செய்த பேருதவி உலகத்தார்க்குதவிய பேருபகாரமாயிற்று. இதனால் திருவள்ளுவர் மாண்பு நம் நாட்டில் மட்டுமல்லாமல் மேனாடுகளினும் நின்றுலவுகின்றது என்பது நன்கு விளங்கும்.

மற்றும் இவருக்குப் பின்தோன்றிய மாபெரும் புலவர்களான இளங்கோவடிகள், கூலவாணிகன் சாத்தனார், திருத்தக்க தேவர், கம்பநாடர் முதலியோர்கள் இவரது நூலிலுள்ள ஒவ்வொரு குறளையும் எடுத்தாள்கின்றார்கள். முற்கூறிய மூன்று புலவர்களையும்விடக் கம்பர் பெருமானே அதிகமாக நாயனார் குறளைத் தமது காவியத்தில் எடுத்தாள்கின்றார். சமண முனிவர்களியற்றிய நாலடியாரிலுள்ள ஒவ்வொரு பாக்களும் குறளில் குறுகிய இரண்டடியால் விரித்துக் கூறப்பட்டது. சான்றாக,

"தினைத்துணைநன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வார் பயன்றெரிவார்"—

என்னும் குறளின் கருத்தை நாலடியில்,

"தினையனைத்தே யாயினுஞ் செய்த நன்றுண்டால்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்—பனையனைத்
தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியார் மாட்டு."

என்று விரித்துரைக்கப்பட்டது. ஆகவே வள்ளுவர்செய் திருக்குறளை அவருக்குப்பின் அவதரித்த அறிஞர்கள் அனைவரும் அப்படியே எடுத்தாள்கின்றார்களெனின் வள்ளுவர் பெருமையையை வாய்விட்டுக் கூறுதல் கூடுமோ? முகையலூர்ச் சிறுகருந் தும்பியார் திருவள்ளுவ மாலையில்,

—வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வார்
எப்பாவல ரினுமில்.

என்று புகழ்ந்து உரைத்தமுறை அறியத்தக்கதாகும்.

## வள்ளுவர் மனையறம்

இரண்டாவதாகத் திருவள்ளுவர் ஆற்றிய இல்லற தவத்தினின்றும் அவரது பெருமையை நன்கறியலாம். இவர் நல்லறங்கள் எல்லாவற்றிலும் ஏற்றமுடையது இல்லறமெனத் தெளிந்து கற்பிற் கணியாய வாசுகியை வதுவை செய்து வண்டமிழ் மயிலையில் வதிந்துவந்தார். வாசுகியாரின் கற்பின் பெருமையைக் கணித்தலரிது. அவர் கற்பின் பெருமையைப் பற்றி ஒரு கதை வழங்கும். அது வருமாறு:—

ஒரு சமயம் கொங்கண ரிஷி ஒரு மரத்தின்கீழ்த் தங்கினார். அவ்வமயம் ஒரு கொக்கு இவர்மேல் எச்சமிட்டது. உடனே முனிபுங்கவர் முனிவு

"குறை குடம் ததும்பும் நிறை குடம் ததும்பாது"

கொண்டு தமது தவமகிமையால் அதனைத் தகனஞ் செய்தார். பின்பு வள்ளுவர் இல்லின்கட் சென்று பிச்சை கேட்டார். அவ்வமயம் வாசுகியார் வீட்டினுள்ளே பதிக்குப் பணிவிடைகள் புரிந்ததால் சிறிது காலதாமத மாயிற்று. அதுகண்ட மகரிஷி கோபங்கொண்டு கொக்கை விழித்துப் பார்த்த கண்களால் வாசுகியாரை விழித்துப் பார்த்தார். உடனே அடிசிற்கினியாளும், அன்புடையாளும், பதிசொற் கடவாத பாவையுமாகிய வாசுகியார்,

"கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா."

என்று கூறலும் ரிஷி திடுக்கிட்டு அவரது கற்பின் திறத்தைக்கண்டு கழிபேருவகை கொண்டு வந்த வழி யேகினர் என்பது வரலாறு.

இதனால் வள்ளுவர் வாழ்க்கைத் துணைவியின் பெருமை நன்கு விளங்குகின்றது. இவ்வாறு கற்புடைய மங்கையைக் கடிமணஞ் செய்ததால் அவரது மனைவாழ்க்கை மணமுடைத்தாயிற்று. அதனால் அவர் மாண்புற்றார். இன்னும் உலகம் அவரது இல்வாழ்க்கையைக் கூறா நிற்கின்றது. மற்றும் வாசுகியார் துஞ்சிய பொழுது வள்ளுவர்,

"அடிசிற் கினியாளே! அன்புடையாளே!
படிசொற் றவறாத பாவாய்!—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழுந்த பேதையே! போதியோ?
வென்றூங்கு மென்கண் ணிரா?"

என்று புலம்பிய வெண்பாவால் இவரது மனைமாட்சி நன்கு விளங்கும்.

## வள்ளுவர் கைத்தொழில்

திருவள்ளுவர் கைக்கொண்ட கைத்தொழிலே அவரது பெருமைக்கு மூன்றாவது காரணமாகும். இவர் கைக்கொண்ட கைத்தொழில் உலகம் போற்றும் உயரிய தொழிலாகிய நெய்தற் றொழிலேயாகும்.

"செய்யுந் தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கில்
நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை."

என ஆன்றோர் கூறியபடி எத்தொழிலிலும் ஏற்றமுடையதாக எண்ணப்படுவது நெய்தற் றொழிலேயாகும். இத்தகைய மேம்பாடான கைத்தொழிலைக் கைக்கொண்டதால் உலகம் போற்றும் உயரிய பதவி உற்றார். அதனால் வரும் தருமமான ஊதியத்தைக் கொண்டு இல்லறத்தை இனிது நடாத்தினார். இவ்வாறு இவர் நெய்தற்றொழிலைக் கடைப்பிடித்ததால் இவரது பெருமை இனிது புலனாகின்றது.

## தெய்வப்புலவர் தெய்வபக்தி

முடிவாக நாயனாரது பக்தியின் மகிமையாலேயே அவரது மாண்பை நன்கறியலாம். ஆனால் அவர் எம்மதத்தைச் சேர்ந்தவர், எக்கடவுளைப் பற்றினார் என்பது நன்கு புலனாகவில்லை. ஆனால் காலஞ்சென்ற கனம் கனகசபைப் பிள்ளை யவர்கள் வள்ளுவரைச் சைவரென்றும் அவருடைய கடவுள் வாழ்த்துப் பரமசிவ வணக்கமாகுமென்றும் வருண சிந்தாமணியில் விளக்கியுள்ளார். எவ்வாறாயினும் அவர் இந்து மதத்தவரே. அஃதோடு "எம்மதமும் சம்

" கால்வாயைத் தாண்டாதவன் கடலைத் தாண்டுவானா?"



மதமே" என்ற கொள்கையை யுடையவர் என்று கொள்வதே சாலச் சிறப்புடையதாகும். நிற்க, இவரது பக்தியின் மகிமையை விளக்க ஒரு வரலாறு வழங்கும். அது வருமாறு:—ஒரு காலத்தில் நடராஜப் பெருமான் திருவாலங்காட்டில் பத்திரகாளி மானமடையும்படி நடனஞ் செய்தார். அவளும் தோல்வியுறாதபடி நடித்தாள். பின்பு கூத்தப் பெம்மான் குண்டலங் கழன்றதைத் தானே சேரும்படி "ஊர்த்துவ பாதமாக" நடனஞ் செய்தார். பத்திரகாளியு மப்படி யாடித் தோல்வியுற்றாள். உடனே உம்பர்கள் உவகை பூத்து அவ்வாறு நடித்ததற்குக் காரணம் என்னவென்று பணிவுடன் கேட்டார்கள். அதற்கு அம்பலவாணர் அச்செய்தியை வண்டமிழ் மயிலையில் வதியும் வள்ளுவரிடம் சென்று கேட்கும்படி கூறினர். அவர்களும் அவ்வாறு வள்ளுவரிடம் வந்து கேட்டார்கள். அதற்கு நாயனார்,

"பூவிலயனும் புரந்தரனும் பூவுலகைத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவில்
இழைநக்கி நூனெருடு மேழை யறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து."

என்று கூறலும் தேவர்கள் தங்கள் ஐயம் தெளிந்து மண்டல மகன்று விண்டலத்துக் கேகினர். அதனால் அவர் நினைத்த காரியங்களைச் செய்துமுடித்தார். இந்நான்கு காரணங்களாலும் பெருநாவலர் பெருமை நன்கு போதரும்.

## சொற்பிதிர் எண் 1.

சென்ற ஆனி மீ சஞ்சிகையில் வெளியிடப் பெற்றிருந்த சொற்பிதிர் எண் 1-க்குச் சரியான விடை அளித்தவர்களில் 614-வது எண்ணுள்ள சந்தாதாராகிய அடியிற்கண்ட நண்பருக்குப் பரிசு கிடைத்திருக்கிறது.

கே. எஸ். சுப்பராவ்,
ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல்,
குருவப்ப நாயக்கன் பாளையம்,
உடுமலைப்பேட்டை வழி.

குறிப்பு:—இம்மாதம் "ஆனந்தபோதினி" சஞ்சிகையில் போதுமான இடம் இன்மையாலும், சரியான விடை யளித்தவர்களின் தொகை அதிகமாயிருந்ததாலும் அவர்களுடைய சந்தா எண்களை வெளியிட முடியாமற் போனமையை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம். சொற்பிதிர் எண் 2-ல் பரிசுபெற்றவரின் பெயர் அடுத்த மாத சஞ்சிகையில் வெளியிடப்பெறும்.

மானேஜர்.




# டாக்டர் பெஸன்ட்டம்மையார்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

(ஸ்ரீமதி. ரங்கநாயகி.)

பின்னர் அன்னிபெஸன்ட்டம்மையார் இந்தியாவுக்கு வந்தார். இங்கு வந்து சென்னையைச் சார்ந்த அடையாற்றைத் தமக்குரிய இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்தார். பிரமஞான சங்கத் தலைமைபூண்டு அச்சங்கக் கொள்கைகளை இந்தியாவெங்கும் பிரசாரம் புரியத் தொடங்கினார். வேதங்கள், உபநிஷத்துக்கள், புராணங்கள் முதலிய வடமொழி நூல்களை ஓதி யுணர்ந்து, அவைகளிலுள்ள நற்பொருள்களை மேனாட்டுத் தத்துவங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்தார். புராதன இந்திய நாகரிகத்தைப் பற்றிப் படித்தறிந்தவுடன் அன்னிபெஸன்ட்டம்மையாருக்கு அதன்மீது மிகுந்த மதிப்பும் அன்பும் அதிகரித்துவிட்டன. உபநிஷத்துக்களைப் போன்ற மகத்தான ஞான பொக்கிஷங்களை எழுதிவைத்த மகான்களின் பரம்பரையில் வந்த இந்திய மக்கள் இன்று பிறர் எள்ளி நகையாடும்படியான ஈன நிலையில் இருப்பது கண்டு அம்மையார் மிகவும் வருந்தினார். இந்திய மக்கள் தங்கள் பழம் பெருமைகளை மறந்து வாழ்கின்றமை கண்டு மனம் புழுங்கினார். இளைஞர்கள் தங்கள் பழைய நல்லொழுக்கங்களை யெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, நவீன நாகரிக மோகத்தில் மூழ்கிக் கிடக்கின்றமை கண்டு வருந்தி, இந்நிலைமைக்கு மூலகாரணம் தற்காலக் கல்விமுறையே என்ற உண்மையை உணர்ந்தார். இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக ஒரு தேசீயக் கல்வித் திட்டம் தயாரித்து அவர்களுக்குத் தங்கள் தேச சரித்திரங்களின் மீதும், தங்கள் இலக்கியங்களின் மீதும், தங்கள் புராதன சம்பிரதாயங்களின் மீதும் ஆர்வமும் மதிப்பும் பெருகும்படி செய்யவேண்டும் என்று எண்ணினார். இதற்காக, இந்துக்களின் இருதய கமலம் என்று சொல்லத்தக்க புண்ணிய பூமியாகிய காசி க்ஷேத்திரத்தில் "சென்ட்ரல் ஹிந்து காலேஜ்" என்ற பேரால் ஒரு கலாசாலையை நிறுவினார். இந்தக் கலாசாலைதான் இப்பொழுது இந்து சர்வ கலாசாலையாக மாறி இந்திய தேசீயக் கலைவளர்ச்சியில் முதன்மை பெற்று விளங்குகிறது. அன்னிபெஸன்ட்டம்மையார், இப்பொழுது, அடையாற்றில், தேசீயக் கல்வித் திட்டமுறையை அநுசரித்து ஒரு கல்லூரியை நடத்தி வருகிறார்.

"கெடுவான் கேடு நினைப்பான்"



இது மிகவும் சிறந்த முறையில் திறமையாக நடைபெற்று வருகிறது. பெண் கல்விக்காக அம்மையார் காட்டிவரும் ஊக்கம் மிகவும் போற்றத்தக்கதாகும்.

எத்தகையாருக்கும் சுதந்தரம் இல்லாவிட்டால் விகாசம் உண்டாகாது என்பதை உணர்ந்து, இந்திய மக்களின் அரசியல் கோரிக்கைகளில் பெஸன்ட்டம்மையார் சிரத்தை செலுத்தத் தொடங்கினார். தாதாபாய் நௌரோஜி முதலான தேச பக்தர்களால் நிறுவப்பெற்று, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ச்சி பெற்றுவரும் தேசீய காங்கிரஸ் மகாசபையானது அம்மையாரின் நோக்கத்தை இழுத்தது. 1914-வது ஆண்டில் காங்கிரஸ் மகாசபையானது சென்னையில் நடைபெற்றது. அதுமுதல் அம்மையாருக்கு காங்கிரஸின்மீது அன்பு பெருகிற்று. காங்கிரஸ் கோரிக்கைகளையும், கொள்கைகளையும் வெளிப்படுத்த "காமன் வெல்த்" (Common Wealth) என்ற பேரால் ஒரு வாரப்பத்திரிகையை ஏற்படுத்தினார். அப்பொழுதே "நியூ இந்தியா" (New India) என்ற தினசரிப் பத்திரிகையையும் வெளியிட்டார். பாரத நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடுவதும், காங்கிரஸ் கொள்கைகளையும் திட்டங்களையும் உலகு அறிய வெளிப்படுத்துவதுமே இப்பத்திரிகையின் முக்கிய நோக்கம் ஆகும் என்று தெரிவித்தார். அக்காலத்து காங்கிரஸின் மிதவாதக் கொள்கை அன்னிபெஸன்ட்டம்மையாருக்கு ருசிக்கவில்லை. அதனால் "ஹோம் ரூல்" (Home Rule) நிமித்தம் நாடு முழுதும் பிரசாரம் செய்து ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டுபண்ணினார். "நியூ இந்தியா" பத்திரிகையில் அம்மையார் எழுதிய கட்டுரைகள், தேசாபிமானம் செறிந்து விளங்கின. இந்தக் கட்டுரைகள் இந்திய மக்களின் உள்ளங்களில் மிகுந்த மாறுதல் உண்டுபண்ணிவிட்டன. அந்தக் கட்டுரைகள் பலவற்றுள் அராஜகம் நிறைந்திருப்பதாக அரசாங்கத்தினர் பயந்து 1916-வது ஆண்டு மேயீ 26-ந் தேதியில் இவரை இரண்டாயிரம் ரூபாய் ஜாமீன் கட்டவேண்டும் என்று கேட்டனர். இவ்விதம் கேட்பது மிகவும் அநியாயம் என்றும், தாம் நியாயமான பிரசாரமே செய்துவருவதாகவும், "நியூ இந்தியா" பத்திரிகை வாயிலாக அரசாங்கத்தாருக்கும், பொது ஜனங்கட்கும் தெரிவித்தார்.

அரசாங்கத்தார் அன்னிபெஸன்ட்டம்மையாரிடம் ஜாமீன் தொகை கேட்டது மிகவும் அநியாயம் என்று இந்திய மக்கள் எல்லாரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். பம்பாய் சர்க்காருங்கூட சென்னை அரசாங்கத்தின் வழியைப் பின்பற்றி அம்மையார் பம்பாய் நகருக்குள் வரக்கூடாது என்று தடையுத்தரவு பிறப்பித்தனர். மத்திய மாகாண அரசாங்கத்தாரும் இவ்விதமே தடை செய்துவிட்டனர். இந்தத் தடைகள் அன்னிபெஸன்ட்டம்மையாரின் உற்சாகத்தையேனும், ஊக்கத்தையேனும் குறைத்துவிடவில்லை; விடுதலைப் போரைத் தீவிரமாகவே நடத்தத் தொடங்கினார். இந்தியாவில் ஒத்துழையாமை இயக்கத்துக்கு முன்னர் எப்பொழுதும் இத்தகைய அரசியல் கிளர்ச்சியும் பிரசாரமும் ஏற்பட்டது கிடையாது. பிரசாரகர்கள் வெளிக் கிளம்பினார்கள். தேசமெங்கும் சுயராஜ்ய சபைகள் நிறுவப்பெற்றன. இந்த நிலைமை சென்னை அரசாங்கத்துக்கு மிகுந்த அச்சங் கொடுத்துவிட்டது. அப்பொழுது லார்டு பென்ட்லண்டு கவர்னராக இருந்தார். இவர் பெஸன்ட்டம்மையாரை உதக மண்டலத்துக்கு வரவழைத்து "நீங்கள் சுயராஜ்யத்துக்கு என்று செய்து வரும் கிளர்ச்சியானது சர்க்காருக்குச் சம்மதம் இல்லை. ஆகையால் அதை

"குருவிலார்க்கு வித்தையும் இல்லை முதலிலார்க்கு லாபமும் இல்லை"

நிறுத்திவிட முடிவு செய்திருக்கிறோம்" என்று கூறினார். அம்மையார் ஒரு சிறிதும் அச்சங்கொள்ளாமல் "உங்கள் கையில் அதிகாரம் இருக்கிறது. உங்களால் என்னவேண்டுமானாலும் செய்யமுடியும். ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் நீங்கள் மறந்துவிடக்கூடாது. என்னைச் சிறை செய்வதால் தாங்கள் பாரத நாட்டுக்கு என்றும் நன்மைசெய்தவர்களாகமாட்டீர்கள். தாங்கள் செய்யப்போகும் வேலையால் இந்தியா-இங்கிலாந்து ஆகிய இருநாடுகட்கும் உள்ள பரஸ்பர நேசபாவத்துக்கு இடையூறு நேரும் என்பதைத் தாங்கள் உணரவேண்டும். இவ்வாறு நான் கூறுவதால் உங்கள்மீது எனக்குள்ள மதிப்புக் கொஞ்சமும் குறையவில்லை என்பதையும் தாங்கள் தெரியவேண்டும்" என்று கவர்னரிடம் தெரிவித்தார். ஆனால் அன்று சாயங்காலமே அம்மையாருக்குச் சிறைவாசம் கிடைத்தது. இந்தச் செய்தி நாட்டுமக்கள் உள்ளங்களில் கலவரத்தை உண்டாக்கிவிட்டது. அரசாங்கத்தார் மீது ஆத்திரங் கொள்ளும்படி செய்துவிட்டது. சிறை செல்லுவதற்குமுன் அம்மையார் "நியூ இந்தியா" பத்திரிகையில் இவ்வாறு எழுதி யிருக்கிறார். "இவை என் கடைசி வார்த்தைகள், பாரத மாதாவை நேசித்தமைக்காகவும், பாரத மக்களின் முன்னேற்றங் கருதித் 'தொண்டாற்றிய காரணத்துக்காகவும் அரசாங்கத்தார் என்னைத் தண்டனைக்குட்படுத்தி யிருக்கிறார்கள். வாயை மூடிக்கொண்டு அநியாயத்தை ஒப்புக் கொள்ளுவதைவிடத் துன்பங்களை அநுபவிப்பதே மேலானதாகும். எனக்கு வயது முதிர்ந்துவிட்டது. என்றாலும், நான் இறப்பதற்குள் இந்தியா சுதந்தர இன்பம் நுகருவதை என் கண்கள் பார்க்கக்கூடும் என்பது என் நம்பிக்கை. இறைவன் பாரத அன்னையைக் காப்பானாக. வந்தே மாதரம்!" உதக மண்டலத்தில் மிகவும் குளிரா யிருந்தபடியால் அன்னிபெஸன்ட்டம்மையாருக்கு நோய் கண்டது. உடனே அம்மையாரை விடுதலை செய்யவேண்டும் என்று நாடு முழுவதிலும் கிளர்ச்சி ஏற்பட்டது. 1917-வது ஆண்டு ஆகஸ்டில் அம்மையாரை விடுதலை செய்தார்கள்.

இந்நிலையில் அரசியல் விஷயங்களில் அம்மையார் மிகவும் முக்கிய ஸ்தானத்தை வகித்துவந்தார். நாட்டு மக்கள் எல்லோரும் இவருடைய தலைமையில் பெரிதும் நம்பிக்கை காட்டினர். 1917-வது ஆண்டு டிசம்பரில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டுக்கு அன்னிபெஸன்ட்டம்மையார் தலைமை வகித்தார். 1918-வது ஆண்டின் இறுதியில் மாண்டேகு சீர்திருத்த முறை வெளியிடப்பட்டது. நமது நாட்டில் உடனே இதைப்பற்றி இரண்டு கக்ஷிகள் ஏற்பட்டன. ஒரு கக்ஷியார் இப்புதிய சீர்திருத்த முறை சாரமற்றது—இதை நாம் ஒப்புக்கொள்ளக் கூடாதென்று வாதித்தனர். மற்றொரு கக்ஷியார் ஏதோ சிறிதளவேனும் நன்மை இல்லாமல் இல்லை; கிடைத்தவரைக்கும் லாபம்; அதை நடத்திப் பார்க்கவேண்டும் என்று வாதித்தனர். பெஸன்ட்டம்மையார் இரண்டாவது கக்ஷியில் சேர்ந்து சீர்திருத்தத்தை அநுஷ்டித்துப் பார்க்கவேண்டும் என்று பிரசாரம் செய்தார். இதற்காக இவர் இங்கிலாந்துக்குச் சென்று "ஜாயின்ட் பார்லிமென்டரி கமிட்டி"யாரிடம் சாக்ஷி கூறினார்.

மகாத்மா காந்தியடிகள் 1920-வது ஆண்டில் ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கத்தில் பெஸன்ட்டம்மையார் முதலிலிருந்தே சம்பந்தப்படவில்லை. தவிர, இவ்வியக்கம் இந்நிலையில் மிகவும் ஆபத்தானது என்று எதிர் பிரசாரமும் செய்தார்.





ஒவ்வொரு நாடும் தனது ஆட்சி முறையைத் தானே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும் என்பது பெஸன்ட்டம்மையாரின் நம்பிக்கை. இதற்காக "காமன் வெல்த்ஆப் இந்தியா பில்" (Common Wealth of India Bill) என்று ஒரு அரசியல் திட்டத்தைத் தயார் செய்து, அதை இந்தியப் பிரதிநிதிகள் ஒப்புக் கொள்ளும்படியாகவும் செய்தார். பின்னர் இங்கிலாந்து சென்று தொழிற் கக்ஷியாரிடம் தமக்குள்ள செல்வாக்கை உபயோகித்து அந்தத் திட்டத்தைப் பார்லிமென்ட்டில் வைத்து, அச்சபையின் அங்கீகாரம்பெற மிகுந்த முயற்சி செய்து பார்த்தார். இவ்வம்மையார் அநேக தடவைகள் இங்கிலாந்துக்குப்போய் இந்தியாவின் நிலைமையைக் குறித்துப் பலவிடங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். இன்னும் நிகழ்த்தி வருகிறார். பிரமஞான சங்கப் பிரசாரத்துக்காகவும் இவர் உலக முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்.

பெஸன்ட்டம்மையாரின் ஊக்கம் நிகரற்றதாகும். எடுத்த காரியத்தைச் சாதிப்பதற்குத் தமது ஆற்றல் முழுவதையும் உபயோகித்துப் பார்ப்பார். ஆக்ஷேபனைகளைப் பொருட்படுத்த மாட்டார். காரியங்களில் தோன்றும் துன்பங்களைக் கண்டு அஞ்சார். இவ்வம்மையார் தமது வாழ்நாளில் அபாரமான காரியங்களைச் சாதித்திருக்கின்றனர். எத்தனையோ கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாயிருக்கின்றார். எண்பது வயதுக்கு மேலாகியும், இன்றைக்கும் இவரிடத்தில் உற்சாகமேனும், பிடிவாதமேனும் அணுவளவும் குறையவில்லை. சிறிது காலத்துக்கு முன்னர் அமெரிக்கா கண்டமுழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து அநேக பிரதேசங்களில் பிரமஞான சங்கங்களை நிறுவ ஏற்பாடு செய்தார். ஆங்காங்கு அருமையான சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். அம்மையார் நிரம்பிய புலமை வாய்ந்தவர்; மேனாட்டு மனோதத்துவ சாஸ்திரங்களில் அம்மையாருக்கு அபாரமான பாண்டித்தியம் உண்டு. பௌதிக சாஸ்திரத்திலும் மிகுந்த பயிற்சி உண்டு. தேச சரித்திரங்களையும், ஆங்கிலம், பிரன்சு மொழிகளையும் நன்கு ஆராய்ச்சி செய்திருக்கிறார். வடமொழியும் தெரியும். அம்மையார் அநேக நூல்களை எழுதி யிருக்கிறார். இன்னும் எழுதிக்கொண்டிருக்கிறார். விசேஷமாகப் பிரமஞானத்தைப் பற்றியும், இந்திய அரசியல் விஷயங்களைப் பற்றியுமே இவர் நூல்களை எழுதியிருக்கிறார். அம்மையாரின் சொற்பொழிவாற்றல் உலகப் பிரசித்தி வாய்ந்தது, விரோதிகளும் விரும்பும்படியான சுவை அமைந்திருக்கும்.

பெஸன்ட்டம்மையார் களங்கமற்றவர். ஆடம்பர மற்ற வாழ்க்கையையுடையவர். மிகவும் இரக்கம் உள்ளவர். அநேக ஏழை மாணவர்களுக்கு உதவிபுரிந்து வருகிறார்.

இவ்வம்மையாரின் மதக் கோட்பாடுகள் அநேகருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். இவருடைய அரசியல் அபிப்பிராயங்கள் அநேகருக்குச் சரிப்படாமல் இருக்கலாம். ஆனால் அம்மையாரின் மதி நுட்பத்தையும், ஊக்கத்தையும், பொதுஜன ஊழியத்தையும் கண்டு யாரும் வியப்படையாமல் இருக்க முடியாது.

# குஷ்டரோகம் அல்லது பெருவியாதி

(ஸ்ரீ. என். கிருஷ்ணசாமி நாயுடு.)

குஷ்ட ரோகம் அல்லது பெருவியாதி (Leprosy) என்னும் இத்தொத்து நோய் உலகத்தின் எல்லாத் தேசங்களிலும் காணப்படுகின்றது. பிரிட்டிஷ் சாம்பிராஜ்யத்துக் குட்பட்ட தேசங்களில் மட்டும் 4,16,000 குஷ்டரோகிகள் இருக்கிறார்கள். அதில் நம் இந்தியாவில் மாத்திரம் 2,50,000 குஷ்டரோகிகளிருக்கின்றனர். இந்திய குஷ்டரோகிகளின் ஜனத்தொகையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சென்னை மாகாணம் பர்மாவுக்கு அடுத்ததாக இருக்கின்றது. சில வருஷங்களுக்கு முன்வரை நம்மவர்கள் இது தீரா வியாதி என்று எண்ணிவந்தார்கள். ஆனால் இப்பொழுது வைத்தியர்களின் முயற்சியால் இதற்கும் தக்க சிகிச்சைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்றே கூறவேண்டும்.

## காரணங்களும் குறிகளும்

சாதாரணமாகக் குஷ்டரோகம் பரம்பரை சம்பந்தமாய்த் தோன்றுவதென்று பலர் கருதுகின்றார்கள். ஆனால் அவ்வாறு கருதுவது தவறு. இது ஒரு பெரிய தொத்துவியாதி. குஷ்டரோகிகளின் குழந்தைகளை அவர்களிடம் நெருங்கவிடாமல் தூரத்திலிருக்கச் செய்வதால் அக்குழந்தைகளுக்கும் இவ்வியாதி வாராதபடி தடுக்கலாம். மேலும் இது தொத்து வியாதியானதால் வியாதியஸ்தர்களிடம் அதிகம் நெருங்க வேண்டியவர்கள் மிகச் சுத்தமாயிருக்க வேண்டும். ஒருவருடைய வியாதியிலிருக்கும் சீழ் மற்றொருவருடைய புண்ணிலாவது இரணத்திலாவது பட்டால் உடனே மற்றவர்க்கும் இவ்வியாதி பரவி விடுமாதலின் அவ்வாறு படாதபடி மிக்க ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும்.

இவ்வியாதியின் தோற்றம் ஆரம்பத்தில் பலவிதமாக இருக்கும். நோயாளி தன் புத்தி சாதுர்யத்தால் தானே தெரிந்துகொள்ளவேண்டும். ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை செய்தால்தான் எளிதில் நிவர்த்தியாகும். அநேகர் இவ்வியாதி தங்களுக்குண்டென்பதை ஆரம்பத்தில் அறிந்துகொள்ளாமல் இது முற்றிப்போன பின்னர் அவஸ்தைப்படுகின்றனர். வேறு பலர் தங்கள் வியாதி இன்னதென்று அறிந்து கொண்டும் மற்றவர்கள் அவமதிப்பார்களென்றும் அருகில் சேர்க்கமாட்டார்களென்றும் கருதுவதாலும், முற்றிப்போன பின்னர் எத்தகைய கஷ்டங்களுக்குள்ளாகவேண்டிவரும் என்று அறியாமற்போவதாலும் பிறரிடம் சொல்லாமல் மறைத்து வைக்கின்றார்கள். இவ்வாறு செய்வது பிசகு.

இவ்வியாதி ஒரு பூச்சியினால் உண்டாகின்றது. அப்பூச்சி நாம்புகளிலும், சதைகளிலும் காணப்படும். இவ் வியாதி ஆரம்பத்தில் காதும் நெற்றியும் பருத்துத் தடித்து மிருக்கும். குஷ்டத்தில் பல வகைகளுண்டு. அது நாளாக

"வலிமைக்கு வழக்கு இல்லை"



நாளாக நோயாளிகளுக்கு அதிக துன்பங்களைத் தந்து அவர்களுடைய வாழ்நாள் முழுவதிலும் அவமானத்தை உண்டாக்குகின்றது. மூன்று வகைகளாவன:—(1) தேகத்தில் எவ்விடத்திலாயினும் வட்டமான புள்ளிகள் போலாவது அல்லது செப்பு நிறம் போன்ற வில்லைகள் போலாவது முதலில் காணப்பட்டு நாளடைவில் வெண்மை நிறத்தை யடையும். அப்போது அவ்விடங்களிலுள்ள சர்மம் உணர்ச்சியற்றுப் போகின்றது. இது கைவிரல்களிலாவது கால் விரல்களிலாவது முகத்திலாவது அல்லது தேகத்தில் எவ்விடத்திலேனும் வரக்கூடும். இதை நரம்பை ஒத்த குஷ்டம் அல்லது திமிர் குஷ்டம் என்று சொல்வார்கள். (2) சதை பருத்து கடுகு பிரமாண முதல் கொட்டைப் பாக்கு பிரமாணம் வரையில் விருத்தியடைந்து வட்டமாகத் தோன்றும், பின் இது வந்த இடத்தில் ரணமாகி அது சதையையும் எலும்பையும் உருக்கி விரல் இல்லா வண்ணமாகிவிடும். (3) இது மேற்கூறிய இருவகையும் கலந்திருப்பது.

## சிகிச்சை முறைகள்

குஷ்டம் அல்லது பெருவியாதி என்னும் இக்கொடிய வியாதிக்குத் தக்க சிகிச்சையே கிடையாது என்பது பலருடைய அபிப்பிராயம். ஆனால் அடியில் கூறப்பட்டுள்ள மருந்துகளைக் கொடுத்தால் மிக்க குணத்தைக் கொடுக்குமென்று அநேக பிரபல வைத்தியர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சாலமுக்ரா எண்ணெய், எட்டிக் கொட்டை, வெள்ளைப் பாஷாணம் ஆகியவைகளைப் பதமாகச் சேர்த்துக் கொடுக்கும் மருந்து இவ்வியாதியை சொஸ்தப்படுத்தும். இதைச் சாப்பிடும்போது உப்பில் ஊறவைத்த மாமிசத்தையும், புளிப்பு வஸ்துக்களையும், மசாலாக்களையும் தவிர்க்கவேண்டும். ஆர்சனிகம் சொல்யூஷன் எனச் சொல்லப்படும் பாஷாண திராவகம் 50 மினிமத்தையும், வடிகட்டிய சுத்தநீர் எட்டு அவுன்சையும் கலந்து வைத்துக்கொண்டு சாப்பாட்டிற்குப் பின் 15 நிமிஷம் கழித்து இதில் இரண்டு டேபில் ஸ்பூன் (தேக்கரண்டி) வீதம் ஒருநாளில் மூன்று முறை சாப்பிட்டுவர வேண்டியது. மர எண்ணெய் இரண்டு திராம், சுண்ணாம்பு நீர் இரண்டு திராம் ஆகிய இவைகளை ஒரு நாளைக்கு இரண்டு வேளை இரண்டு திராம் வீதம் சாப்பிட வேண்டும். அப்போது எண்ணெய் ஒருபாகமும், சுண்ணாம்பு நீர் மூன்று பாகமும் கலந்து தேகத்தின்மீது தினந்தோறும் தேய்த்து இரண்டு மணி நேரம் ஊறவைக்க வேண்டும். வியாதியின் தன்மைகள் முற்றும் மாறிய பின்னரும், சில மாதங்கள் வரை விடாமல் மேற்படி சிகிச்சை செய்துவந்தால்தான் வியாதி மீண்டும் திரும்பாமலிருக்கும்.

இவ்வியாதியஸ்தர்களுக்கு இன்ன ஆகாரம்தான் கொடுக்கலாமென்று திட்டமாகச் சொல்வதற்கில்லை. நல்ல சக்தியைத் தரக்கூடிய ஆகாரங்களையும், காய், கறி, பால், பழம் முதலியவற்றையும் தாராளமாக உட்கொள்ள வேண்டும்.

## அனுஷ்டிக்கவேண்டிய முறைகள்

பண்டைக் கால அரசாட்சியில் இவ்வியாதியால் பீடிக்கப்படும் மனிதர்கள் ஆலயங்களில் பிரவேசிக்கக் கூடாதென்றும், பிறரைத் தொடலாகாதென்றும், வியாபாரம் முதலிய துறைகளில் ஈடுபடலாகாதென்றும் நிர்ப்பந்

"விரை ஒன்று போட்டால், சுரை ஒன்று முளைக்குமா?"

கித்துவந்தனர். இக்காலத்தில் ஒவ்வொரு தேசத்திலுமுள்ள அரசாங்கத்தார் இவ்வியாதியை வேருடன் களைதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்துவருகின்றனர். இதற்காக அநேக இடங்களில் தனி ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி இருக்கின்றனர். சையன்ஸ் வாதிகள் எனப்படும் விஞ்ஞான சாஸ்திர வல்லுனர்கள் இவ்வியாதியைச் சொஸ்தப்படுத்திவிடலா மென்றும், சுவாசகாச வியாதியை (Tuberculosis) எவ்வாறு சிகிச்சை செய்கிறார்களோ அவ்வாறே இதற்கும் செய்ய வேண்டுமென்றும், இவ்வியாதி யுள்ளவர்களைத் தனியே உட்கார வைத்து தினந்தோறும் தேகாப்பியாசம் செய்விக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர். இக்காலத்தில் இன்ஜக்ஷன் (மருந்தை ஊசியால் நரம்பில் குத்தி இரத்தத்துடன் கலக்கச்செய்தல்) செய்வதால் மிக்க நன்மை உண்டாகின்றது. இவ்வாறு இன்ஜக்ஷன் செய்வதற்காகப் பலவகை மருந்துகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர். இதனால் ஜனங்களுக்குக் குஷ்டத்தினிடமிருந்த அச்சம் நீங்கித் தைரியம் ஏற்பட்டுவருகிறது.

இது மிகவும் கெட்ட தொத்துவியாதி என்பதையும், இதனால் மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய அளவிலாக் கஷ்டங்களைப் பற்றியும், ஆரம்பத்திலேயே மறைத்து வைக்காமல் சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றியும் கல்வி யறிவுடையவர்களாகிய நம்போன்றவர்கள் பாமர மக்களுக்கு விளக்கிக் காட்டவேண்டும். இவ்வாறு பலரும் போதித்து அதை நாட்டு மக்களும் அனுஷ்டிப்பார்களாயின் விரைவில் இந்தியா தேசத்தினின்றும் இத்தொத்து நோய் தொலையுமென்பதில் சந்தேகமே இல்லை.

[குஷ்டத்தைப் பற்றிய இவ்வியாசத்தை எழுதிய அன்பர் ஸ்ரீ. என். கிருஷ்ணசாமி நாயுடு, சென்னைக் கடுத்த தின்னனூர் சுகாதார வாரக் கமிட்டியின் அங்கத்தினர்களில் ஒருவராவார். இவர் இவ்வியாசத்தைப் பிரபல டாக்டர் ஒருவரிடம் காண்பித்துத் தக்க ஆதரவையும் பெற்றுள்ளார். அன்பர் ஸ்ரீ. நாயுடுகாரு பொது ஜன நன்மையைக் கருதி அதிக சிரமப்பட்டுத் தக்க ஆதாரத்துடன் இவ்வியாசம் எழுத முன்வந்துளது பாராட்டத்தக்க செயலேயாம். சகஜமாக நம் நாட்டினர் குஷ்டநோய் கர்ம வியாதி யென்றும், அது தீராதென்றும் தவறாகக் கருதி ஆயுள் முழுதும் பொறுமையுடன் அனுபவித்துவருகின்றனர். இனியேனும் அத்தகைய தவறான எண்ணத்தை விட்டு ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்துகொண்டு சொஸ்தமடைவார்களென்று நம்புகிறோம். இவ்வியாசத்தில் கூறியவற்றை மக்கள் அனுஷ்டித்துப் பலனடைவார்களாயின் அதுவே நம் சமூகத்தார் இவ்வியாசதாருக்குச் செலுத்தும் கைம்மாறாகுமெனக் கருதப்படும். ப—ர்.]

விழுந்தால் எலி போனில் இரண்டு மூன்று எலிகள் ஏககாலத்தில் விழுந்துவிடுகிறது! இல்லையேல் ஒன்றேனும் விழுவதில்லை; போனில் வைத்திருக்கும் வடையை மாத்திரம் தின்றுவிட்டுப் போகிறது.

***

மிளகு ரசமாயினும் ஒரு கறுவேப்பிலையைப் போட்டுவிட்டால் அதன் மாதிரியே வேறு. அப்படியே கொத்தமல்லியைப் போடாத பருப்பு ரசத்தின் மாதிரியும் வேறு.

---

"வாய் கரும்பு, கை இரும்பு"




## கிருஷ்ணஸிங் அல்லது துப்பறியும் சீடன்.

(158-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

ஆனந்தஸிங் இப்போது தேவகிரிக்கு இராஜவேலை யனுப்ப வேண்டிய காரண மென்னவெனில், அவன் கிட்டுவின் ஜேபியிலிருந்து எடுத்த கடிதத்தில் அடங்கிய சமாசாரமே யாகும். அக்கடிதத்தில் கீழ்க்கண்ட சங்கதி யடங்கி யிருந்தது:—

"என் பிரியமுள்ள மரகதம். நீ என் மானத்தைக் காப்பாற்றினாய். எனக்கு விரோதமான சாட்சியாய் அக்குழந்தையை உயிரோடிருக்கச் செய்யாதே. இப்படிக்கு பலராமன்" இதனால் பலராமன் மனைவியும், சுந்தரம்மாள் என்பவளும், காமுஅம்மாள் என்பவளும் ஒரே ஆசாமியே யென்று ஆனந்தஸிங் மனதிற் பட்டுவிட்டது.

மறுநாள் இராஜவேல் தேவகிரிக்குப் புறப்பட்டுச் சென்றதே, ஆனந்தஸிங் தபாலாபீசுக்குச் சென்று "து" என்ற விலாசத்திற்கு ஏதாவது கடிதம் வந்திருக்கிறதாவென்று கேட்டான். உடனே அவன் கையில் ஒரு கடிதம் கொடுக்கப் பட்டவுடன் அவன் மிக்க வியப்பும் சந்தோஷமு மடைந்தான். ஏனெனில் அவ்வளவு துரிதமாய்ப் பதில் வருமென்று அவன் கருதவில்லை. அக்கடிதம் அவன் பிராணனைக் காப்பாற்றிய கற்பகத்தினிடமிருந்து வந்தது. அதில்:—

"நான் கைதியைப்போல் நடத்தப்படுகிறேன். நாங்கள் இவ்வீட்டை விட்டுப் போய்விடப் போகிறோம். நான் தப்பித்துக்கொள்ள முயற்சி செய்கிறேன்" என்று எழுதி யிருந்தது. ஆனந்தஸிங் உடனே நோய் மங்கம்மாள் வீட்டிற்குச் சென்றான். அங்கு ஒருவருமில்லை. பட்சிகளெல்லாம் பறந்துபோய் விட்டிருந்தன. ஆனந்தஸிங் வீணாய் அன்று பகல் முழுதும் அக்கள்ளர்கள் எங்கு சென்றிருப்பார்களென்று தேடி யலைந்தான். கடைசியில் ஆயாசத்தோடு வீட்டிற்குத் திரும்பினான். கொஞ்சதூரம் செல்லும்போது தன்னை யொருவன் பின்பற்றி வருவதை யறிந்துகொண்டு, "ஹா! இதுவும் நமது நற்காலமே. இவனை யேமாற்றிவிட்டு இவன் பின்னால் சென்று கள்ளர் இருப்பிடத்தை யறிந்து கொள்ளலாமென்று சந்தோஷ மடைந்தான். பிறகு வழியிலிருந்த ஒரு சிற்றுண்டிக் கடையில் சென்று கொஞ்சம் பசியாறிய பின் அங்கிருந்து புறப்பட்டான். வெளியில் வந்து பார்த்தபோது தன்னைத் தொடர்ந்து வந்த மனிதன் எங்கும் காணப்படவில்லை.

ஆனந்தஸிங் "ஹோ! முன்னாடி சென்று எல்லாம் ஆயத்தம் செய்யச் சென்றிருக்கிறான். ஓ குள்ளக் கள்ளப் பயலே நான் மட்டும் முன்பு முன்

சாக்கிரதையா யிருந்தால் உங்கள் கொலைத்தொழில் உங்களுக்கே கசப்பாகும்படி முன்னமே செய்துவிட் டிருப்பேன். ஆயினும் உங்கள் வேலை சீக்கிரம் வரும். இன்று நீங்கள் ஏற்பாடு செய்யும் துக்கக்காட்சி அகசியக்காட்சியாகவே முடியும். நான் துக்கக்காட்சிக்கு ஏற்பாடு செய்யும்போது சற்றேனும் பிசகு நேராதென்று காண்பீர்கள்'' என்று புன்னகையோடு தனக்குத் தானே கூறிக்கொண்டான்.

பிச்சனும் குள்ளனும் தன் தந்தையைக் கொல்ல எப்படி யேற்பாடு செய்தார்களோ அதேமாதிரி இன்று தன் அறைகளில் தனக்குச் செய்திருக்கிறார்கள் என்று ஆனந்தலிங் நன்றாய் அறிந்து கொண்டான்.

ஆனந்தலிங் வீதிகளின் வழியாய்ச் செல்லும்போது, அவனுடைய கவலையற்ற தன்மையையும், அவன் சந்தோஷத்தோடு பாட்டுப் பாடிக் கொண்டே செல்வதையும் பார்த்தால், தன் வீட்டில் இரண்டுபேர் தன்னைக் கொல்லத் தயாராய்க் காத்துக்கொண் டிருக்கிறார்களென்று அவன் அறிந்தே செல்கிறான் என்று ஒருவரும் நினைக்க மாட்டார்கள்.

ஆனந்தலிங் பாடிக் கொண்டே தன் அறையின் கதவைப் பாக்கத் திறந்து உள்ளே சென்றதும் சட்டென்று கதவை மூடிக்கொண்டான்.

அவனிடம் கத்தியாவது துப்பாக்கியாவது இல்லை. மிக்க சாமர்த்தியமாய்த் தந்திரத்தினாலேயே ஜெயிக்கக் கருதினான். அவன் உள்ளே நுழைந்து கதவை மூடியதும் குனிந்து வலது பக்கம் பாய ஆயத்தமானான். அவன் நினைத்தபடி யதே வினாடி மேலே ஏதோ சுழன்று வருவது போல் ரிவ்வென்ற சத்தம் கேட்டது. மறு நிமிடம் ஆனந்தலிங்கின் கரங்கள் பிச்சனுடைய தொண்டையை யிறுக்கிக் கொண்டன. தட் தட் என்று சத்தம் கேட்டது.

அது ஆனந்தலிங் பிச்சன் முகத்தில் விட்ட குத்துகள். பிச்சன் பதிலுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. முதலில் விட்ட பலமான குத்தினாலேயே பிச்சன் மூர்ச்சை யடைந்து விட்டான்.

குள்ளனும் அறையில் இருக்கிறானென்று ஆனந்தலிங் நன்றாயறிந்திருந்தும் வேணுமென்றே அறிந்து கொள்ளாதவன் போல் அபிநயித்தான். ஆனால் அவன் பின்னால் வந்து கத்தியால் குத்தாதபடி பிச்சன் தேகத்தைத் தனக்கு முன்பாகவே வைத்துக்கொண் டிருந்தான். ஏனெனில், குள்ளன் தானே திகிலடைந்து ஓடிவிடச் செய்யவேண்டுமென்றும், அவனைத் தொடர்ந்து சென்று இப்போது கள்ளர் கற்பகத்தைக் கொண்டு போய் வைத்துக்கொண் டிருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டான்.

அதனால் தான் சற்று நேரம் பிச்சனோடு யுத்தம் புரிவதாய்ப் பாசாங்கு செய்து, "அடே கள்ளப் பயலே என்னைக் கொல்லவா வந்தாய்? இதை விட்டு உன்னை உயிரோடு அனுப்புகிறேனென்பதை மறந்துவிடு. ஆ! இன்னும் அசைகிறாயா! ஆ! இவ்வுலகை விட்டுப் போகிறாயா? ஒழி, ஒழி. ஆ! இதுதான் திருப்தியான வேலை. ஒழிந்தாயா? இனி உன்கூட யாராவது துணை வந்திருக்கிறார்களா என்று பார்த்து உன்னோடு கூட வரும்படி யனுப்புகிறேன்'' என்றான்.

"குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்"




நகரசபைத் தலைவராகும் பத்திரிகை விற்போன்:—

இங்கிலாந்தைச் சேர்ந்த பிராட்போர்ட் நகர சபைத் தலைவராக அடுத்தமுறை வரப்போகிறவர் ஆல்பிரட் பிக்கிள்ஸ் என்று தெரிகிறது. அவர் வரலாறு மிக்க விசித்திரமானது. அவர் ஏழுவயது பையனாக இருக்கும் போதே அவர் தந்தை இறந்துவிட்டார். நெசவுவேலை செய்யும் அவர் தாயார் மூன்று குழந்தைகளைக் காப்பாற்ற நேரிட்டது. ஒன்பதாவது வயதில் பிக்கிள்ஸ் பத்திரிகையை விற்று வயிறு வளர்த்தார். அவர் தம் சொந்த முயற்சியாலும் உழைப்பாலும் பெரிய பதவிகளைப் பெற்றுக்கொண்டே வந்து இப்போது நகரசபைத் தலைவராகவும் ஆகப்போகின்றார்.

***

மனிதரில்லாத தீவு:—

செயின்ட் கில்டா என்னும் தீவு சென்ற மாதம் 28-ந் தேதியன்று காலி செய்யப்பட்டுவிட்டது. அதிலிருந்த ஜனங்களெல்லாம் அத் தீவை விட்டுத் தங்கள் தட்டுமுட்டுச் சாமான்களுடனும் ஆடுமாடு முதலியவைகளுடனும் வெளியேறி விட்டார்கள். ஆயிரம் வருஷகாலமாக அத்தீவில் வசித்திருந்து இப்போது அதைக் காலி செய்து விட்டார்கள். 573-ஆடுகள் கப்பலில் ஏற்றப்பட்டன. போக்குவரத்து சாதனம் சௌகரியமாக இல்லாததாலேயே அதைக் காலி செய்துவிட்டார்கள்.

ஆங்கிலமாதின் மர்மம்:—

லண்டனின் மேற்குப் பாகத்தில் அழகிய பச்சையான ரோல்ஸ்ராய்ஸ் மோட்டாரில் சதா செல்லும் ஒரு யௌவன மங்கையின் விஷயம் மர்மமாகவே இருக்கின்றது. அவள் மோட்டாரில் போகும்போது அதன் கதவு பூட்டப்படுகின்றது. அவள் இறங்க முயற்சிக்கும்போது மோட்டார் நின்றதும் டிரைவர் இறங்கிவந்து கதவைத் திறக்கிறார். அவள் மறுபடியும் வண்டியில் ஏறியதும் டிரைவர் கதவைப் பூட்டிவிடுகின்றார். இதன் மர்மம் யாதோ?

***

வருஷவாரி 2-லட்சம் பவுன் பெறுவோர்:—

அமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய வியாபாரக் கம்பெனியின் நிர்வாக பதவியிலுள்ள சிலர் வருஷம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் பவுன் சம்பளம் பெறுகிறார்களாம்.

***

இரு கைகளாலும் எழுதுவோர்:—

பிரான்சு தேசத்தின் பிரபல டாக்டர் ஒருவர், அத்தேச மாணவர் மாணவிகளுக்கு இடது கையாலும் எழுதும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென யோசனை கூறியுள்ளார். அத்தேச கல்வியதிகாரிகள் அவர் யோசனையை ஏற்பதாயின் அந்நாட்டு மாணவர்கள் இரு கைகளாலும் எழுதும் பழக்க முடையவர்களா யிருப்பார்கள்.

## " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்.

பிரமோதூதஞு ஐப்பசிமூ—கலியுகாதி 5032, சாலிவாகனம் 1853,
பசலி 1340, கொல்லமாண்டு 1106, ஹிஜரி 1349,
இங்கிலீஷ் 1930ஞு அக்டோபர்மூ—நவம்பர்மூ

| ஐப்பசிமீ | அக்டோபர் | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 17 | வெ | தச27-18 | ஆயி24-45 | மா60 | [ஸ்நானாரம்பம் விஷு புண்யகாலம், துலா |
| 2 | 18 | சனி | ஏகா20-25 | மக19-45 | அ19-45சி | சர்வ மத்வ ஏகாதசி [தசி |
| 3 | 19 | ஞா | து13-15 | பூரம்14-30 | சி14-30அ | பிரதோஷம், தனதிரயோ |
| 4 | 20 | திங் | திர6-13 | உத்9-15 | சித்60 | நரகசதுர்தசி ஸ்நானம், |
| | | | சது59-28 | | | தீபாவளி பண்டிகை |
| 5 | 21 | செவ் | அ●53-5 | அஸ்4-18 | சித்60 | சர்வத்ர அமாவாசை, கேதாரிகவுரி விரதம் |
| 6 | 22 | புதன் | பிர47-58 | சித்0-3 | சித்60 | கார்த்தீக சுத்தம், கரிநாள், |
| | | | | சுவா56-40 | | அவமாகம், பலிபூஜா |
| 7 | 23 | வியா | துதி44-0 | விசா54-45 | சித்60 | சந்திரதரிசனம், இயமத்துதி |
| 8 | 24 | வெ | திரி41-35 | அனு54-18 | சி54-18மா | ஆலோசனகவுரிவிரதம் [யா |
| 9 | 25 | சனி | சது40-55 | கே55-40 | சித்60 | மாச சதுர்த்தி விரதம் |
| 10 | 26 | ஞா | பஞ்42-0 | மூல58-38 | அ58-38சி | விவாகம், பும்சவனம் |
| 11 | 27 | திங் | சஷ்44-55 | பூரா60 | மா60 | கந்தர்சஷ்டி, சூரசம்ஹாரம் |
| 12 | 28 | செவ் | சப்49-23 | பூரா3-23 | சித்3-23அ | |
| 13 | 29 | புத | அஷ்54-58 | உத்9-33 | அ9-33சித் | |
| 14 | 30 | வியா | நவ60 | திரு16-30 | சித்60 | |
| 15 | 31 | வெ | நவ1-8 | அவி24-0 | சித்60 | |
| 16 | 1 (1930ஞு நவம்பர்மீ) | சனி | தச7-15 | சத31-20 | அ31-20ம | |
| 17 | 2 | ஞா | ஏகா13-3 | பூர38-3 | சி38-3அ | |
| 18 | 3 | திங் | து17-58 | உத்43-35 | சித்60 | |
| 19 | 4 | செவ் | திர21-28 | ரே48-0 | சித்60 | |
| 20 | 5 | புத | சது23-43 | அஸ்51-3 | ம51-3சித் | |
| 21 | 6 | வியா | ○24-35 | பர52-45 | சி52-45மா | |
| 22 | 7 | வெ | பிர24-3 | கி·✕·53-13 | சி53-13மா | கிருத்திகை, கார்த்திகபகுள |
| 23 | 8 | சனி | துதி22-18 | ரோ52-33 | அ52-33சி | சாதுர்மாஸ்யதுதியா [ம் |
| 24 | 9 | ஞா | திரி19-28 | மிரு51-0 | சித்60 | சர்வமுகூர்த்தம் செய்ய |
| 25 | 10 | திங் | சது15-55 | திரு48-48 | சி48-48அ | சங்காஷ்ட சதுர்த்தி [ண |
| 26 | 11 | செவ் | பஞ்11-43 | புன45-55 | சித்60 | வியாதியஸ்தர் மருந்துண் |
| 27 | 12 | புதன் | சஷ்7-3 | பூச42-48 | சித்60 | வித்யாரம்பம் செய்ய |
| 28 | 13 | வியா | சப்2-0 | ஆயி39-18 | சி39-18அ | அவமாகம், கிருஷ்ணாஷ்டமி |
| | | | அஷ்56-45 | | | காளபைரவாஷ்டமி |
| 29 | 14 | வெ | நவ51-25 | மகம்35-20 | மா35-20சி | மாடுவாங்க, கதிறுக்க |
| 30 | 15 | சனி | தச46-3 | பூர32-5 | சித்33-5ம | விருச்சிகரவி நா—49-18 |

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | குரு |
| | 9-துலா-புத<br>17-மீன-ராகு<br>,, கன்-கேது<br>27-விரு-புத | | செவ் |
| சனி | சுக் | சூரி<br>கேது | புத |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI ST., MADRAS.

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய சரித்திரமும், உபதேசங்களும்.

(நான்காம் பதிப்பு.)

(ஸ்ரீ ராமகிருஷ்ணர், அவர் மனைவியாராகிய சாரதாமணி தேவியார், ஸ்ரீ விவேகானந்தர் ஆகிய மூவரின் உருவப் படங்களோடு கூடியது; உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டது.)

*சாரதாமணி தேவியார் சரித்திரமும் சேர்க்கப்பட்டது; உயர்ந்த சீமை காலிகோ பைண்டுள்ளது;* **இதன் விலை ரூபா 1 12 0**

சில வருஷங்களுக்கு முன்னர் கல்கத்தாவிலே ஞானமே திரண்டு ஓர் உருவெடுத்தாற்போன்று தோன்றி, சகல வேதாந்த சாஸ்திரக் கருத்துக்களையும் ஓதாதுணர்ந்து, அறியாப் பருவத்திலேயே உலகப் பற்றுக்களைத் துறந்து, அரிய அற்புதங்களை யெல்லாம் செய்து பேரின்பத்தை யடைந்த மகாத்மாவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சரை உலகத்தில் பெரும்பான்மையும் எல்லோரு மறிவர். அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அன்னிய நாடுகளுக்கும் சென்று, ஆங்காங்கே, 'இந்து மதமே அழிவற்ற மதம்' என்று அனைவரும் பிரமிக்கப் பிரசங்கங்கள் புரிந்து, இந்துமதக் கொள்கைகளை யெல்லாம் ஆங்காங்குள்ள பலர் மனதிலும் புகுவித்து, அவர்களிற் பலரை இந்து மதத்தில் சேர்த்து, திக்குவிஜயஞ் செய்துவந்த ஞான சிம்ஹமாகிய ஸ்ரீ விவேகானந்த ஸ்வாமிகளுக்கு இந்த இராமகிருஷ்ணரே ஞானாசிரியர். இங்ஙனம் அவர்க்கும் இவர் குருவாயிருந்தனரென்றால் இவருடைய மகிமை அளவிடற்கரிதாமென்பதைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ; இவருடைய துறவைப்பற்றிய சரித்திரமோ மிகவும் அற்புதமானது. இவர் உலகப்பற்றைத் துறந்த உத்தமஞானி. இவர் நன்றாக எழுதப் படிக்கத் தெரியாதவராயிருந்தும் உயர்ந்த ஞானமார்க்கத யுணர்ந்து தாம் அனுஷ்டித்ததோடு தம் சிஷ்யர்களுக்கும் எளிதில் ங்கும்படி தக்க உதாரணங்களோடு அதனைப் பற்பல விதமாக உபதேசித்தருக்கின்றார். அவையெல்லாம் பக்தி, ஞானம், மோக்ஷம் முதலிய பெரிய ஷயங்களை யெல்லாம் சுலபமாக விளக்கிக் காட்டக் கூடியவைகள்.

## கிராமபோன் சங்கீத கீர்த்தனாம்ருதம்

